[illegible]

# ஸ்ரீசங்கர விஜயம்

மதுரை, காலேஜ் பிரதமத் தமிழாசிரியர், மகா-ள-ள-ஸ்ரீ

பா. சுப்பராம ஐயரவர்கள் மாணாக்கரும்

மதுரை, ஸேயின்ட்மேரிஸ் ஹைஸ்கூல் உபாத்தியாயரும்

தமிழ்ப் பண்டிதருமான

## மு. கோவிந்தசாமி ஐயரால்

இயற்றப் பெற்ற

சேலம் டிரஷரி டிப்டி கலெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ

பி. சிவராம ஐயரவர்கள் பி. ஏ

மதுரை, வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ

கி. சங்கரராம ஐயரவர்கள் பி. ஏ.

இவர்கள் பேருதவியால்

மதுரை:

ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1909

Copy Right Registered

# சாத்துக்கவிகள்

நூலாசிரியர் மாமனும் சங்கிரகராமாயண நூலா
சிரியருமான மகாா-ா-ஸ்ரீ. நாராயணசாமி
ஐயரவர்கள் சொல்லியது.

ஆதி சங்கர வாசிரி யன்புகழ்
மேதி னித்தல மெங்கும் விளம்பிட
வேத பாரகன் வித்தியா ரண்ணிய
நாத னேதின னன்குறுங் காவியம் (க)

அங்க தற்கவ னூலிடு ராமமுஞ்
சங்க ரர்விஜ யம்மெனச் சாற்றினன்
றுங்க மான சுதிரிக ரானதா
லெங்கும் வேதிய ரேயிசைப் பார்தமில். (உ)

ஆரி யந்தனிற் றேர்ந்தவர்க் கல்லது
சீரி யர்க்கது செப்பத் தகாதெனப்
பாரில் யாரும் பகர்ந்திடற் கொத்தசி
ராருஞ் செந்தமிழ்க் காவிய மாக்கினன். (ங)

சுப்ப ராமய சோத்திரி யன்றனை
யொப்பி லாக்குரு வாக வுணர்ந்தவ
னிப்பு விக்குய ரீசன் கயிலையாய்ச்
செப்பு மாமது ராபுரித் தேவனார். (ச)

ஆட றன்னை யகவலிற் செப்பினு
னடெல் லாம்புகழ் வண்ண மு நல்கினன்
றேட ருங்குணச் செல்வமா கல்வியி
னீடி லானென் றிசைபெறுஞ் சீர்த்தியான். (ரு)

தூய வேதிய னுழுத்து சுப்பயன்
சேயன் கோவிந்த சாமியுஞ் செப்பிய
தாய காவிய மம்புவி தன்னிலே
ஞாயி றம்புவி நாள்வரை வாழியே. (சா)

## சாத்துக் கவிகள்.

# மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம் கமிடி மெம்பர் மகா-ள-ள-ஸ்ரீ வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியாரவர்கள் சொல்லிய

## எழுசீராசிரிய விருத்தம்

வேர்பெறு ஞானந் தழைந்தசை யாத
    வித்தியா ரணியத்தின் முளைத்த
வேர்பெறு பெருமைச் சங்கர விஜய
    மெனுந்தரு பலந்துறைந் திருப்ப
நேர்பெறு வடாது சொல்லுணர்ந் தவரே
    நெடிதுகொண் டகமிக மகிழ்ந்தார்
பார்பெறு தெனாது மொழியில்வல் லுநரப்
    பயன்கொளா திருந்தன ரன்றே (க)

அப்பெருங் குறைவை நீக்குவான் முதலே
    யருந்திற லொடுபெயர்த் தெடுத்திட்
டிப்பெரும் புவியில் வைத்ததே பெயர்தந்
    தினிமைமுன் னையதினுஞ் சிறப்ப
வுப்பெருங் கவிக ளேழுநாற் றெழுபத்
    தொன்றின்வண் டமிழினா லுறுவாய்
மைப்பெரும் புலவர் யாவருஞ் செவிகண்
    வாயெலாங் களிப்பவாக் கினனால். (உ)

வான்மிகும் பொழில்சூழ் மதுரைநா யகற்கு
    மனமொழி மெய்களை யொருங்கீந்
தோன்மிகு முத்துச் சுப்பசன் மாசெய்
    தாயமா தவத்தில்வந் துதித்தோன்
மீன்மிகு கொடித்தென் னவர்தமி ழொடுசு
    வேதமன் னவர்க்குறுங் கல்வி
மான்மிகும் புகழ்க்கோ விந்தசா மிப்பேர்
    மறையறை நாவினன் மனமே. (ங)

—∞—

# சிறப்புப்பாயிரம்.

## அறுசீராசிரிய விருத்தம்.

வானவர் முனிவ ரோடு மற்றுள பத்தர் யாருந்
தேனமர் மலரி னாலே திருவடி யருச்சித் தேத்த
மீனமர் விழியா ளோடு மேதினி காக்கு மாறு
மானமர் கையா னாடல் வழங்கிய மதுரை தன்னில். (௧)

முந்திய வருணைத் தோன்று முந்துசுப் பைய மேலோன்
றந்தநன் மகவா யின்னான் றந்தையென் றேற்று னென்ன
முந்தைநூல் பலவு மென்பான் முறையுடன் கற்றுத் தேர்ந்து
சிந்தையுண் மகிழ்கோ விந்தன் சீர்பெற வாழு நாளில். (௨)

அலவா யண்ண லாட லறைந்தன னகவற் பாவான்
மேலதை வண்ண மாக விளம்பினன் விளையாட் டாகப்
பாலசங் கரர்செய் லீலை பனுவலாய்ப் பாடு மென்னச்
சீலரா யுள்ளோர் கேட்கச் சீரிய தென்னத் தேர்ந்து. (௩

முன்னமே வித்யாரண்யர் மொழிந்தனர் வடசொல் லானே
யன்னதிற் றேர்ச்சியில்லோ ரறிந்திடற் குதவா தென்ன
வுன்னியே யதனையாரு முணர்ந்தகங் களிக்கு மாறு
பின்னதைத் தென்சொல் லானே பிறங்கிட வினிதி சைத்தான். (௪)

சங்கரர் மான்மியத்தைச் சாற்றிய திறத்தி னானு
மிங்கியற் றமிழி னானே யிசைத்திடும் பெருமையானும்
பொங்கிய வுவகை யோடு புவியுளோர்க் குதவி யாக
வெங்குமே பரவச் செய்யினிசைமிகப் பெருகுமென்றும். (௫)

பூதமா வுடம்பொடுங்கும் புகழுடம் பொடுங்கா தென்று
மேதையோர் கூறுங் கூற்று மெய்யென வுளத்திற் கொண்டும்
பாதியோர் பெண்ணைத் தானும் பாற்கடற் பள்ளி யானு
'நீதியா யொருவ ரென்றே நிகழ்த்திடு நாமம் பூண்டோர் (௬)

# சிறப்புப்பாயிரம்.

அருமறைக் குலத்து வந்தோ ராங்கிலங் கற்றுத் தேர்ந்தோர்
திருவொடு வாணி யென்னுந் தெரிவையர் சேரப் பெற்றோர்
நிரை நிரை கலைக்கட ரென்று நீதியை யுரைப்போ ரென்றுந்
தருகேர் கைய ரென்றுஞ் சாற்றிடப் பெற்றோ ராவார். (௭)

தக்கநன் கொடை கொடுத்துச் சங்கர விஜயந் தன்னைப்
பக்குவ மாக வச்சிற் பதித்துட னீந்த தற்கு
மிக்கதாங் கைம்மாறுக மேதினி யில்லை யேனு
மிக்கதை படிக்குந் தோறு மிவரையு மிசைப்பாரன்றே. (௮)

அப்பணி சடையா னென்னு மாதிசங் கரர்தம் மாசான்
றிப்பிய மான காதை செய்யுளாற் செய்து யர்ந்தான்
செப்புகோ விந்த ரென்போர் சேர்ந்தவா போலச் சேர்ந்தார்
மெய்ப்புகழ் சிவரா மய்யன் மேதைசங் கரரா மய்யன் (௯)

மறையினை தந்தந் தன்னை மானிடர்க் குணர்த்த வேண்டித்
துறவியாய் வந்தோர் காதை சொல்லிய வொருவன் றானு
நிறை மன முடனி தற்கு நேர்ந்திடு பொருடந் தோரு
நிறையவ னருளி னாலே யிசையொடு நெடிது வாழி. (௰)

செப்டம்பர் 1909.
மதுரை.

பா. சுப்பராமய்யன்,
தமிழாசிரியன்.
மதுரை காலேஜ்.

# ஸ்ரீ சங்கர விஜயம்.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

#### விநாயகர்.

பூதலத்தவர் போதம டைந்திடச்
சோதி ஞானந் துலக்கிய சங்கரர்
காதை தன்னைக் கழறக் கவுண் மதப்
போத கத்தின் பொலன்கழல் போற்றுவாம். (௧)

#### பரமசிவம். (வேறு).

அருமறை வடிவா யறுவகை மதத்தோ
ரன்புறுங் கடவுளர் தம்மி
னுருவமா யெல்லாத் தேவமுந் தானு
முயிர்களி னறிவுரு வாகி
மருவிடுஞ் சரமோ டசரமுந் தானாய்
மறைமுடிப் பொருளது வாகித்
தெருளுறு முண்மைப் போதமாஞ் சிவத்தைச்
சிந்தையி லெணித்தினந் துதிப்பாம். (௨)

#### கலைமகள் (வேறு)

மதிநதி யணிந்த பெம்மான் மண்டலத் துற்றோர் யாருங்
கதிபெறக் குருவாய் வந்த காதையைக் கூறக் கற்றோர்
விதியவன் னாவில் வெண்டா மரையதில் வீடா வைகுந்
துதிபெறுங் கமல வாணி துணையடி காப்பதாமே. (௩)

## குருநாதன் (வேறு)

தேவாதி தேவராகித் திருமறைக்குப்
பாடியத்தைத் தெளிவாய்ச் சொன்ன
தூவாதி யுபநிடதத் துறைவோராய்
நால்வர்களின் றதிபெற் றுலின்
மேவாதி கடவுளென வட்டாங்க
யோகமுற்றி விளைமெய்ஞ் ஞானத்
தாவாத தனுவுடைய சங்கரராஞ்
சற்குருதா டலைக்கொள் வோமே. (௪)

## அவையடக்கம் (வேறு)

பொள்ள லுற்றதாற் பங்கயம் பூமியி
லெள்ள லாவதி லேற்றமே கொள்ளுமா
வள்ளல் சற்குரு மாக்கதை யானதாற்
றள்ளி டாதிதைத் தக்கதா யேற்பரே (௫)

மடவார் பாரில் வரைந்திடுங் கோலத்தைப்
படமா காதெனப் பண்ணவர் காய்ந்திடார்
திடமா நற்பொருள் சேர்ந்தில தாயினு
மடமா ரென் சொலை வல்லவர் கொள்வரே. (௬)

## நூற்பயன் (வேறு)

திங்களணி செஞ்சடையா ரமிசரான
சிவமுனியாஞ் சங்கரரின் றிவ்ய காதை
யிங்கிதனைப் படிப்போர்கள் படிக்கக் கேட்போ
ரிருத்தியும் பெற்றவரா யியைந்த மற்று
மங்கலங்கண் மிகவோங்க மனையோ டாக்க
மக்கண் முதற் பேறடைந்து மரபினோங்கித்
துங்கமுறு மெய்ஞ்ஞானச் செல்வ ராகித்
துளைந்திடுவா ரானந்தத் துறையி லென்றும். (௭)

பாயிரம் முற்றிற்று.

சிவமயம்.

# ஸ்ரீசங்கர விஜயம்

நூல்.

## முதலாமத்தியாயம்.

திருவி ளுபக னசுரரை மயக்குவான் சிந்தை
மருவி நானிலந் தரசென வந்தொரு புதிய
பொருவி லாமதத் தாபனம் புரிந்துதான் போத
வுருவி னோர்மையன் புத்தனென் றொருபெயர் வகித்து. (௧)

கொண்ட வம்மதக் கொள்கையைக் கூறிட வுலகோர்
விண்ட வுத்தியின் வாதிறல் விரும்பிய தென்னக்
கண்ட தின்மன மழுந்திநாத் திகரதி கரிக்கப்
பண்டை நான்மறை யொழுக்கமும் பத்தியுங் குறைந்த. (௨)

அந்த ணாளர்மெய்ஞ் ஞானமு மைம்பொறி யடக்கிப்
புந்தி யோர்வழி நிறுத்திடும் யோகமும் போக்கி
மந்தி ரத்துறை வேள்வியி லாகுதி வழங்க
லெந்த நல்வினை யாதிய யாவும்விட் டிருந்தார். (௩)

தெரிந்த விண்ணவர் புகழுரு செழிப்புற வோங்கிப்
பரந்த தாமெனக் கவினுடன் பரசிவன் மகிழ்வாய்த்
திருந்த விற்றிருந் தருள்புரி சிறப்புமே யமைந்த
வருந்த வத்தவர் வாழ்ந்திடுங் கைலையை யடைந்தார். (௪)

மங்க ளாகர வல்லிய ளிடப்புறம் வந்து
தங்கு மாறருள் புரிந்திடுஞ் சங்கர சம்போ
திங்கள் சூடிய தேவநின் றிருவடிக் கபய
மெங்கள் பாலன நின்கட னென்றவர் தொழுதார்.

## ஸ்ரீ சங்கரவிஜயம்.

அண்டர் யாவரு மபயமென் றலறிடக் காள
கண்ட னூர்வலக் கணைக்கடைக் கணித்தருள் காட்டிக்
குண்ட வேதியர் குலத்தியான் றோன்றுவல் கூடுந்
தொண்ட ராகநீ ரவனியிற் றோன்றிடு முங்கள். (க)

இச்சை யாறவை யமைவுறு மென்றன னிமையோ
ரச்சந் தீர்ந்துடன் றம்முல கடைந்தனர் களிப்பா
யுச்சி மேற்பிறை நதியணி யுமையவள் பாகன்
பச்சை மாமயி லூர்மக வழைத்திவை பகர்வான். (எ)

அய்ய யான்றரு வாணைபெற் றவனியின் முன்பே
பைய ராவணை யானவன் பாயலும் போந்து
துய்ய சங்கரி டணர்பதஞ் சலியெனத் தோன்றிச்
செய்ய தேவதா யோககாண் டங்களைத் தெரிய. (அ)

### வேறு.

விளக்கி யுற்றனர் வேலவ நீயும்போய்த்
தளர்ச்சி யற்றுச் சயிமினி சாற்றிய
களக்க மற்றதோர் கன்மகாண் டத்தினைத்
துளக்க நான்முகன் றோன்றுவன் சீடனாய் (கூ)

காரி வந்தங்கு காவல னாயுறும்
நாரி விட்டியான் ஞான நெறியினை
மாரி போல வருடிக்க யாவரும்
வாரி யுண்டு மகிழ்ந்திடு வார்களே. (ய)

அந்த வாறபி ராவணத் தண்ணலும்
வந்து தோன்றினன் பேர்சுதன் வன்மனா
யுந்து தேர்முத லங்க முடன்கொடு
சிந்து சூழ்புவி யாண்டனன் றீரனாய். (கக)

நாத்தி கத்தை நயந்தவன் போனடித்
தேத்து வித்தகர் யாவரையுந்தழீஇப்
பூத்த வம்மதம் நாட்டும் புனிதரைக்
காத்துத் தன்னவை வைத்தனன் கண்ணென (கஉ)

# முதலத்தியாயம்.

டட்ட பாதராய்ப் பன்னிரு கையனும்
விட்ட நான்முகன் மண்டன மிச்ரருஞ்
சிட்ட மார்குரு சீட்ராய் வந்துபின்
றுட்ட புத்தரை வென்று துலங்கினார். (கந)

நாலு திக்கிலு நாத்திக ரைவென்று
சீல முற்ற சுதன்வன் றிருநகர்
பால பட்டரும் போந்திடப் பார்த்திபன்
சால வேயெதிர் கொண்டிடச் சார்ந்தனன் (கச)

பொன்னன் மேவப் புரந்தரன் கொள்ளுமா
மன்னன் சென்று வணங்கி யழைத்திட
வுன்னு கற்பக மும்பர்நா டுற்றென
மன்னு மாசபை வந்தனர் பட்டரே. (கரு)

வேறு.

மருங்கொரு மரத்தி லுற்ற மாங்குயில் கூவக் கேட்டு
நெருங்கிய சமுகத் துள்ள நிருபனுக் கறிவு மூட்ட
வருங்கலை யுணரா நீசக் காக்கைவிட் டகன்று யானுற்
கருங்குயிற் பிள்ளாய் நீயுங் கணக்கிலாச் சிறப்பைக் கொள்வாய். ()

என்னவக் குயிலை நோக்கி யிசைப்பது போலப் பட்டர்
முன்னிலைப் புறச்சொல் லாக மொழிந்திட வவையி லுற்ற
தன்னிலை யுணராப் புத்தர் மிதிபடுஞ் சற்பம் போலத்
துன்னிய தருக்கஞ் செய்யத் துணிந்தனர் வலிய வந்து. (கஎ)

கெழுமிய புத்த தாருக் கிளைகளைப் பட்ட ருத்தி
மழுவினால் வெட்டி யந்த வனத்தினை யெரிக்கக் கோபத்
தழலெரி மூட்டி யன்னார் சாற்றிய கேள்விக் கெல்லாம்
விழுமிய விடைய ளித்து விளங்கினர் வயினன் மான. (கஅ)

புத்தர்கள் கருடன் கண்ட புயங்கமாய்ச் செயலொன் றின்றிப்
பித்திகை வரையப் பட்ட பிரதிமை போல நின்றார்
சத்திய மறிந்தா னேனுந் தராபதி தன்மைக் கேற்ப
யுத்திகள் பேசி நின்ற விருவர்க்கு முரைக்க லுற்றான். (ககூ)

## ஸ்ரீ சங்கரவிஜயம்.

ற்றநூற் றிறமைக் கேற்பக் கழறினீர் புலவா யுத்தி
தற்றென மதத்தி னுண்மை தெரிந்திலேன் குன்றி னுச்சி
ற்றவ ராகித் தங்கண் மதத்தின துண்மை சாற்றிச்
ற்றுமோ ரேத மின்றித் தரையினிற் குதிப்போர் தம்மின். (உ௰)

தமதே யுண்மை யாக வகிப்பன்யா னென்று சொல்ல
ிதையறிந் தேங்கிப் புத்த ரிருந்தனர் வாளாப் பட்டர்
தகரி யெழுந்தாற் போல மலைமிசை யேறி வேதஞ்
தமெனி லெற்கோர் தீதுஞ் சம்பவிக் காதென் றேறி. (உக)

இலவிறு லமைத்த சென்டா யிம்மெனக் குதித்தார் பாரி
னலிவடை வோர்க ளுண்டோ நான்மறை நம்பி னோர்க
ளொலியிடு கழற்கால் வேந்த னுவகையங் கடலின் மூழ்கி
லவிருண் மூர்க்கர் சேர்க்கை மாசற வெண்ணி னானே. (உஉ)

இக்குறிப் பறிந்த புத்த ரிறைவனை யணுகி மன்னா
முக்குணத் தொழிலில் வல்லோர் முயன்றுதன் காயங் காப்பர்
தக்கதைத் தெரிந்து செய்த றகுதியென் றிரந்து கேட்க
மிக்குறச் சினந்து மன்னன் வேறொரு சபதஞ் சொல்வான். (உங)

மன்னவன் குடத்தோர் பாம்பை மறைத்திதை யின்ன தென்னப்
பன்னிட வல்ல ரல்ல பதகரைக் காணத் தாட்டி
யின்னுயிர் நீங்கச் செய்வ லென்றிட விரவு முற்று
மன்னதை யறிய வாம ரருந்தவம் புரிந்தார் நீரில். (உச)

கதிரவ னுதிக்கு மெல்லைக் கடுவர வென்னத் தேர்ந்து
சொதிகொளு மரவ மென்னக் கூறிட மறுத்துப் பட்ட
ரதுவல வதனிற் பள்ளி யமர்ந்திடு மாயோ னென்ன
விறுமிக வுண்மை யானு லெடுத்துநீர் காட்டு மென்றார். (உரு)

வேந்தனுஞ் சிறிது சிந்தை கலங்கியே விழிக்கப் பட்டர்
பார்தளம் பாயற் றூங்கும் பரமனைப் பாரு மென்ன
விந்தனர் குடத்தி னின்று மிறைபவ னுவகை கொண்டா
னந்தைபோல் விழித்து நின்றா ரன்னிய மதத்தோ ரெல்லாம் (உசா)

இறையவன் மகிழ்ந்த நாதி யாகிய விரி ரண்டா
மறைகளே யுண்மை யாகு மாதக ருள்ளா ரந்த
முறையினி லொழுகி நிற்க மொழிந்தன னாத்தி கத்தோர்
திறையினி வேறொன் றில்லை யெனமனைத் தொழுது சொல்வார். ()

அன்னிய வுயிர்க ளேவ வாற்றிடன் முறையன் றென்ன
முன்னிய வுங்கள் வேத மொழிந்திட லாலே யெங்கண்
மன்னுயிர் காக்க வேண்டு மன்னவா வென்ன வேந்தன்
பன்னிரு கரத்தோ னனை பட்டரைப் பணிந்து கேட்டான். (௨௮)

புரிந்திடும் வேள்விக் காகப் போற்றிய பசுவைக் கொல்லல்
பரந்திடும் போரின் மாற்றார் படைகளி னுயிரைப் போக்கல்
பெருந்துய ரிழைத்த பேரைப் பிடித்துயிர் நீத்தல் கானந்
திரிந்திடுங் கொடிய மாக்கள் செருத்திடல் குற்ற மன்றாய். (௨௯)

நான்மறை கூறு மென்ன நவின்றனர் பட்டர் மன்னன்
றான்மனத் தையங் கொண்டு தயங்கச்சந் தேகம் வேண்டா
மேன்மன மேன்கு கின்று யெண்ணிய படிசெய் யென்ன
வான்மொழி யொன்று நன்மை வளர்ந்திட வந்த தன்றே. (௩௰)

நரபதி கேட்டுத் தேய முழுவதும் நாத்தி கத்தோர்
கருவது வில்லா வண்ணங் கல்லினுங் காணத் தாட்ட
வொருபெரு மாணை தந்தா னொழிந்தனர் சாரு வாகர்
மருவிய புத்த ரின்னுஞ் சௌகதர் மற்று முள்ளோர். (௩௧)

மடங்கலின் முன்னர்ப் பட்ட மதகரித் திரள்கள் போலத்
திடங்கொளும் பட்டர் தாக்கச் சிதைந்தொழிந் தார்கண் மிக்க
மடங்கொளு நாத்தி கத்தோர் மாமறைக் கிளைக ளோங்கி
யிடங்கொள வளர்ந்த வெங்கு மறக்கொடி யேறிற் றன்றே. (௩௨)

கோமகன் குடிகள் வேதங் கூறிடு முறையி னின்று
சேமமோ டிருக்கப் பார்த்தான் சிறந்திடுந் தரும தான
மோமமு மறையோர் செய்தா ருயர்ந்தன வறங்க ளெல்லாம
பூமகள் களித்தாள் யாண்டும் பொலிந்தன வளங்க ளெல்லாம். (௩௩)

பன்னிரு கரத்தோன் பட்ட பாதராய்ப் பாரிற் றோன்றித்
துன்னிய சமய வாதந் துணிவுடன் புரிந்து வேத
மன்னிய கரும காண்ட வகையினை வகுத்துக் காட்டி
யிந்நில வுலக மெங்கும் பரவிட விசைத்திட் டானே. (௩௪)

அப்பொழு துலகத் துள்ளா ராத்தும ஞான மின்றிச்
செப்பரு மநாதி யான வஞ்ஞானத் திரையி லாழ்ந்தா
ரிப்படி மாக்கள் ஞான மெய்திட ஞான காண்ட
மப்பணி சடையான் றோன்றி யறைந்திட வெண்ணி னானே. (௩௫)

முதலத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—௩௨.

# இரண்டாமத்தியாயம்.

வேறு.

ஓரளவா பெமமதியும் மழைபொழிய
நீர்வளமு மோங்கி விண்ணோர்
காரளவா யுயர்ந்திலகு மலைவளமும்
டலவளமுங் கவினுக் கொண்ட
கேரளமா மம்பதியி லிடபமலைப்
பூரணவா கினியா மாற்றின்
ஞரளவாய் வெண்முத்து நவமணியுங்
கலந்திருக்குந் தடத்தி லீசன். (௧)

கங்கையுடன் பிறையணிந்த திருச்சடையுங்
கறைக்களமுங் கரங்க ணான்கு
மங்கியுட னிருசுடரா முக்கண்ணுந்
தீவணமு மரவம் பூண்ட
வங்கமுமே மறைத்தருளி நீட்களமா
மிலிங்கவடி வாகி நின்று
பங்கமிலா வரங்கள்பல கொண்டடியார்
தினம் பணிந்து பரவ வுற்றான். (௨)

# இரண்டாமத்தியாயம்.

உரித்துடனே யந்நாட்டைப் புரந்துவரும்
　　வேந்தொருநா ளுறங்குங் காலை
யுருத்திரனு மோருருக்கொண் டவன்கனவி
　　லெழுந்தருளி யுரைக்க வன்னான்
கருத்திசைந்து திருக்கோயின் மானமொடு
　　மற்றவையுங் கட்டிப் பின்ன
ரருத்தமிகச் செலவிட்டு நித்தியநை
　　மித்திகமு மவற்குச் செய்தான் (௧)

எம்பெருமான் றொண்டருக்குக் காட்சியளி
　　வாம்படியா யிருந்து தன்னை
நம்பியநல் லன்பர்குழாம் பிணிமுதல
　　துயரடைந்து நலியா வண்ண
மிம்பருல கிருந்தளிக்க வெப்பதியு
　　மிதற்குநிக ரில்லை யென்ன
வும்பருமே வரவிரும்புங் காலடியென்
　　றொருநகர முற்ற தன்றே. (௨)

நான்மறைகண் முழுதுணர்பூ சுரரோம
　　தூமமது நள்ளி ராவாய்
மேன்மகிழ்வா யணிந்ததிரு நீற்றினொளி
　　வெண்பகலா விளங்கா நின்று
வான்முகிலின் கீழொளிரும் பண்டையவம்
　　மூதூரில் வயங்க லானே
மேன்மையுறும் வேறிரவும் வெண்பகலு
　　மிசையென்ன விளம்ப லாமே. (௩)

மாமகத்தி னாகுதியை வேட்குமொரு
　　தகையவென மாம ரங்க
ளுமுகத்த பங்கயத்தி லிலைக்கடையாற்
　　கனிமதுநெய் சிந்து கின்ற
மாமகத்து வங்கொண்ட காலடியந்
　　நகர்வாழு மறையோர் தம்முள்
சீமுகத்த வித்யாதி ராயரந்தச்
　　சிவபூசை செய்து வந்தார். (௪)

ஓர்மகவு தமக்கிலையென் றவரிரங்கிக்
கண்ணுதலை யுருகி வேண்டப்
பார்மகிழ வவனருளா லாண்மகவொன்
றடைந்தவரும் பரிவு கூர்ந்தார்
தார்மருவு சிவனொப்ப நல்லறிவும்
பொன்னனெனத் திருந்து வாக்கு
மோர்மருவ வப்பிள்ளை கொண்டதினாற்
சிவகுரு வென் றிசைக்கப் பெற்றார். (௭)

அக்குழவி யேழாண்டி லுபநயனத்
துபதேச மடைந்தா ராகி
மிக்கதொரு குருகுலவா சத்திருந்து
வேள்விமுதல் விளங்கச் செய்து
தக்கதொரு குருவிட்ட பணிவிடைகள்
புரிந்துவந்து சாகை தேர்ந்தார்
பக்குவவந் நிலையுணர்ந்து சிவகுருவுக்
காசிரியர் பகர லானார். (௮)

வாழையடி வாழையென நின்மரபு
வழிவந்து வளர்ந்து மல்க
வாழிபெற மணம்புரிந்து பெற்றோர்கண்
மனங்களிக்க வாழ்வா யென்ன
ஏழைசுவை யறியாதென் றுரைப்பதுபோ
லுணராத மூட ரன்றோ
பீழையுறு மில்லறமா மிடர்க்கடலி
லாழ்ந்திடுவார் பெரியோ யென்றார். (௯)

மணவினையைப் பெற்றிடுவே னாயினதி
லுழன்றவனாய் மறுமைக்கேற்பக்
கணமளவு மாற்றிடுதற் கியலாது
மோகமதி கரிக்கு மேலும்
பணமுறவே யளவற்ற பாவவினைக்
குள்ளாவேன் பாவை யோரிற்
குணமுடைய ராயிருந்து கணவர்வழி
நிற்பவரில் கொள்ளேன் றக்கோய். (௰)

மகவில்லை யெனுந்துயரம் பிடித்து
யிருந்தவர்தான் மார்க்க ராகிற்
பகரொண்ணாத் துயர்விளைக்கு முருப்பினை
ராயினது பழிப்பே யாகுஞ்
சுகமில்லை யில்லறத்திற் போதமுற
வழியில்லை தாயோ வென்னை
யகமகிழ்ந்து துயர்க்கடலி லாழ்த்தாது
கரையேற்றி யருளா யென்றார். (௧௧)

என்றதுமே யாசிரியர் சிறிதளவு
யோகத்தி லிருந்து பின்னர்
நன்றானது மரபுயர நாடுயரச்
சிவபெருமான் ஞான மார்க்கந்
துன்றியவிவ் வுலகளிக்க வவதாரஞ்
செய்தருள்வார் சொன்னே னீசன்
வென்றிறல்சேர் நினைப்பினுக்கு முரண்படநின்
னெண்ணமது வாய்க்கா தென்றார். (௧௨)

தந்தையரு மத்தருண மகவழைப்பான்
வந்தெய்தி தனையர்க் கண்டு
சிந்தைமகிழ்ந் தாசிரிய தக்கணைவைத்
தடிபணிந்து செலவு கொள்ள
புந்தியுடை தன்புதல்வர்க் காணையிடப்
பணிந்தவர்வாய் புதைத்துக் கேட்கப்
பைந்தொடியாள் பாகனருள் புரிவனென
வாழ்த்தியவர் பயணஞ் செய்தார். (௧௩)

தம்பதியை யடைந்தவர்கள் களித்திருக்கச்
சிவகுருவின் றன்மை யெல்லா
மம்புவியி லெங்கணுமே பரவிடவு
மந்தணர்க ளருமை கேட்டுக்
கொம்பனைய புதல்விகளை யவர்க்குமணஞ்
செய்விக்கச் சிந்தை கொண்டு
சம்புநிகர் வித்யாதி ராயரிடம்
வந்துபலர் சார்ந்திட் டாரே. (௧௪)

மதிதவழு மிடபமலைச் சுயம்புலிங்க
ராணையின்றி மகனுக் கேற்ற
வதுவைசெய முடியாதென் றுளத்தெண்ணி
யுபசரித்து வந்தோர் தம்மை
யிதமுடனே யனுப்பிவிடத் தென்றலுடன்
செந்தமிழை யீன்ற தெய்வப்
பொதியமலை யகத்தியனார் மாணாக்கர்
பரம்பரைசேர் புனித னானோன். (கரு)

சுத்தநிறை மனமுடையான் மறைபூத்த
வாயுடையான் சோமாஸ் கந்தர்
பத்திமிக வாய்ந்தமகி பண்டிதனென்
றொருமறையோன் பண்டைத் தான
வத்தலமே வந்துசிவ குருவினது
தாளையரை யடியேன் பெண்ணை
யுத்தமநின் மகற்களிக்க விரும்பிவந்தே
னுளக்குறிப்பை யுரையா யென்றான். (கசு)

தசவகையாம் பொருத்தங்க ளொத்ததொடி
லிங்கேசர் தந்த வாணை
விசிதமொடு வாய்த்திடலு மணவினையை
யாவர்களும் விரும்பி நின்றார்
வசையறயா னளிக்குப்வர் தக்கணையை
யேற்றுமண மகனென் வீட்டிற்
கிசையவர வேண்டுமென வந்தமகி
பண்டிதனு மிரங்கிக் கேட்டான். (கஎ)

அருத்தமிகச் செலவின்றி மணவினையை
நீரெளிதி லாற்ற லாகும்
பொருத்தமுடன் வேண்டுவவற் றுடனிங்கு
வாருமெனப் புகலக் கேட்டுக்
கருத்திசைந்து பந்துசன மோடவர்கள்
காலடியைக் கடுகிச் சாரத்
திருத்தமுடன் மணவிழாவை நல்வேளை
செய்திட்டார் சீரி யோரே. (கஅ)

சிவகுருவாம் மணமகனு மார்யாம்பா
ளெனுமகளுஞ் சிறக்கக் கூடித்
தவவதிதி காசிபரு மனுசூயை
யத்திரியுஞ் சமைந்தாற் போலத்
தவறின்றி யில்லறத்தை நடத்திவந்து
தானமுடன் றரும மெல்லா
மயரறிந்து புரிந்தவர மோக்ஷசுக
மில்லறப்பின் னடைந்த தன்றே. (க௯)

வடமீனை நிகர்த்தாரி யாம்பாளுங்
கற்புடைய மங்கை யாகித்
திடமாக மெழிலிளமை கல்வியறி
வொழுக்கம்புகழ் செல்வ மெல்லா
மிடமாக வறிந்தவரைத் தழுவியுறச்
சிவபூசை யியற்றி வந்தார்
சடமான வுடல்விட்டு வித்யாதி
ராயர்பரஞ் சார்ந்திட்டாரே. (உ௰)

வேறு.

தீக்கடன் முடித்து நீர்க்கடன் கங்கைத்
திருக்கரை முடித்துநீ ராடி
யோக்கியமாக விருந்திட வொருநா
ளுளநினைந் தாருசிட லானார்
தேக்குறுஞ்செல்வஞ் சிறந்திடும் பதவி
சிறப்புமற் றுளவெலாங் கொண்டும்
மாக்குறை வன்றோ மதலைவாய் மக்கண்
மருவிடப் பெறாதவ ருடலம். (உக)

மூவகைக் கடனை முடித்திட மகவை
முயன்றுபெற் றிடுதலே முறையாத்
தீவரச் சுருதி மொழிகளிற் சிறந்த
சிறுவர்சொற் கேட்டிடாச் செவிகள்
பாவைகட் கமைத்த செவியினுங் கடைத்தாம்
பஞ்செனத் தலைமயிர் நரையை
மேவிடிற் பின்னர் செய்திடும் வேள்வி
வினையெலா நான்மறை விளம்பும். (உஉ)

மதியிலா நாடு விழியிலா யாக்கை
நன்னலந் துய்த்திடா விளமை
மதியிலா வான நறையிலா மாலை
மந்திரி வாய்ந்திடா மன்ன
னிதியிலா வாழ்க்கை நினைப்பிலாப் பாடம்
நெய்துகி லுடுத்திடாக் கோலம்
விதியிலா துரைக்கும் பாசுரம் போலாம்
விழைவுறு மக்களில் வாழ்வே. (௨௩)

என்னவே யேங்கிச் சிவகுரு விருக்க
வேந்திழை யவரடி யிறைஞ்சி
யென்னுயிர் நாத விறைவனைப் பூசித்
திறைவனுக் கற்பிதஞ் செய்தீ
ருன்னிய வண்ண முற்றிடக் கருதி
யுமையவள் கணவனை வேண்டி
னன்னவ னுடனே நம்மனங் களிக்க
வளித்தருள் செய்வனென் றறைந்தாள். (௨௪)

இல்லறத் தோர்கள் காமிய தவத்தை
யியற்றுதன் முறையெனக் கூறி
மெல்லியற் றெரிவை யோடவர் தீக்கை
விதிமுறை கொண்டன ராகி
நல்லறத் தொழுகி வருடமோர் தலமே
நணுகிநற் றவத்தினை யாற்றி
யெல்லுறத் தழுவு மான்பொருப் படைந்தா
ரீராறு வருடமாம் பொழுதே. (௨௫)

பொன்னொடு முத்து மணிகளுங் கொழிக்கும்
பூரணா வாகினிக் கரையிற்
பண்ணுதற் கரிய தவமவர் புரியப்
பார்வதி பாகனெம் மண்ணா
லின்னருட் சுரந்தோ ரந்தண னாகி
யிருவர்தங் கனவிலுந் தோன்றிப்
பின்னவர் வேண்டும் பெருவர மளித்துப்
பெயர்ந்திட வவருடன் விழித்தார். (௨௬)

கண்ணவர் விழித்துப் பார்த்திடக் கடவுள்
கவினுமை யாளுடன் விடையில்
விண்ணவர் முதலோர் தொழுதிட விளங்கி
விமலனு மறைந்தனன் பின்பே
பண்ணமர் மொழியா ளுடன்சிவ குருவும்
பதறிமெய் சிலிர்த்திடப் பரவி
யெண்ணரு முவகைக் கடலிடை யாழ்ந்தா
ரிருவிழி நீர்மிகப் பெருக்கி (உஎ)

இதையறிந் தவர்கள் புத்திர காம
யாகமுஞ் செய்துபின் மறுநாள்
பதிவுடன் றருப்பைப் பாயலிற் றூங்கப்
பரமனோ ரந்தண னாகி
மதியுடை மகனைச் சிலதினம் வாழு
மகனொன்று வேண்டுமா ஞானப்
பதிவிலா மக்கள் பலர்களை விருப்பா
பகருநின் கருத்தெது வென்றான் (உஅ)

பற்பல விதமாய் நின்னடி பரவிப்
பத்துட னறவய தென்றும்
விற்பன மார்க்கண் டயரடைந் தாங்கு
விரிதிரை யுடுத்தவிவ் வுலகி
லற்பநா ளுண்டைய புத்திர னேனு
மறிவினிற் சிறந்தவ னாகி
லற்புத நின்ற னருளினா லைய
வதிசயித் திடப்பெற லாமே. (உகூ)

அவ்வித மமையு மெனவரன் கூறி
யகன்றனன் மறுதின மவர்கள்
செவ்விய விதமா வேள்வியை முடித்துச்
செழுமறை யோர்க்கமு தளித்துத்
திவ்விய மான பாயசம் பருகிச்
சீரிய ராசிகள் பெற்று
நவ்வியின் விழியா ளுடன்சிவ குருவு
நாள்சில கழித்தனர் மகிழ்ந்தே. (கூய)

# ஸ்ரீ சங்கர விஜயம்.

சச்சிதா னந்த சிவசயி தன்யஞ்
சத்திக ளுடனனங் கலக்க
வச்சிவ குருவின் றேகமுற் றிலுமே
யகவொளி பரவியுற் றதுவே
கச்சறு கொங்கை யம்மையி னுதரங்
கனத்துடன் கருப்பமே கொள்ள
முச்சுட ரொளியுங் கரிந்திட வன்னாண்
முகமலர் பிறங்கிய தம்மா (௧௧)

அற்றைநாண் முதலா வேளையின் மழையோ
டதிகமாந் தானிய விளைவு
பற்றுநோ யின்மை யறவழி நினைப்பு
பலகலை யுணர்பவ ருள்ள
முற்றுமே தெளிவு நிறைந்திட வுவகை
யுவரியி லாழ்ந்தனர் சனங்கள்
கற்றைவார் குழலா ளுடலினு ளுலகங்
கண்டவ ளாகியே களித்தாள். (௧௨)

அம்மையங் கனவில் விண்ணவர் றுதிக்க
வங்குகந் திருவரின் னிசையைச்
செம்மையாய்ப் பாடிச் சயவொலி செயத்தான்
செழுவிடை மிசையுறத் தெரிந்தே
யிம்மையென் னென்று விழித்துடன் பார்க்க
வின றளிர்க் கற்பக மலர்க
டமைமையே யங்க முற்றிலுங் கண்டுச்
சாற்றொணா மகிழ்ச்சியை யடைந்தாள். (௧௩)

முக்கண னமிசை யறநிலை நிறுத்த
முதலுகங் கபிலரா யிரண்டின்
மிக்கதத் தாத்தி ரேயராய் மூன்றில்
வியாசராய்த் தோன்றிய தொப்ப
விக்கலி யுகஞ்சங் கரரெனத் தோன்று
மென்றய னியம்பிய வண்ணந்
திக்குகள் புகழ வருங்கொலோ வென்னத்
தெரிந்திடக் காத்தன ரறிவோர். (௧௪)

### வேறு.

இவ்வா றேங்கு மறிஞர்களி
னிதயங் களிக்கக் கலியுகத்தின்
மூவ்வா யிரத்தைம் பதினெட்டாய்
மொழியீ சுரவை சாகமதி
கவ்வார் நன்னு ளோரையெழக்
கதிரோன் முதல கோளனைத்துந்
தெவ்வா றிசுறி யுச்சமுறத்
திசையி லுள்ள பரசமயோர். (௰௫)

கொண்ட தருக்க மிறந்தழியக்
குவல யத்தோர் கடைத்தேறத்
தொண்டர் சித்தங் களிப்பெய்தத்
தூய நீற்றி னெறிபோங்க
வண்டர் கூட்ட மதிசயிப்ப
வந்த ஞான ரவிபெருக
வண்ட யத்தோர் செயல்வாய்ப்ப
மங்கை யீன்றாண் மகவொன்றை (௰௬)

அந்நா டேவர் துந்துபியை
யறவே முழக்கஞ் செய்திட்டார்
மின்னார் வானந் திசையுடுக்கண்
மேலாய்த் திகழ்ந்த மாசின்றி,
யொன்று றெல்லா முறவுற்று
றுயர்ந்தோ ருள்ள மலர்பூத்த
பன்னு வுரையாத் துற்சகுனம்
பலவாய் நிகழ்ந்த நாத்திகர்க்கே. (௰௭)

பிள்ளை பிறந்த தெனக்கேட்ட
பெரியோ ரான சிவகுருவுந்
துள்ளி நீரிற் குதித்திட்டார்
துளிக ளேற்றார் பிதுர்க்களுமே
யுள்ள சாத கருமமுத
லுவந்தே சிறக்க முடித்துடனே
யள்ளி விதைகண் மறையவருக்
ககமே மகிழ வளித்தனரே. (௰௮)

சாதகத்தி லாயுள்பலன்
    சாற்று மென்னச் சோதிடரு
மேதகத்தா லியம்பொண்ணு
    தியற்சீ ருடைத்தென் றகமகிழ்ந்தார்
போதவச்சேய்க் கணியெனவோர்
    புயங்கஞ் சுற்றிப் படமசைக்க
பீதியுற்றுப் பலர்பார்த்தார்
    பிறங்கிற் றதுநீ றணிமணிபாய். (௩௯)

கண்டா ரெல்லா மதிசயித்தார்
    கடவுட் டன்மை யுடைத்தென்றே
பெண்டி ரெல்லா மொருதினத்திற்
    பிள்ளை காணு தேங்கமய
முண்டோ பிச்சை யெனமறையோ
    னொருத்தன் வந்து பூசணிக்காய்
கொண்டே போகக் கேட்கவவர்
    கொடுக்க வாங்கி நழுவவிட்டான் (௪௰)

விடவே யதுவு முடைந்ததனில்
    விளங்கிற் றந்தப் பிள்ளையுமே
மடவா ரெல்லாம் வியப்படைந்து
    மறையோன் றேட வவன்மறைந்தா
னுடனே முதிர்ந்த சுமங்கலைக
    ளரித்தாய்ச் சாந்திக் காப்பணிந்தா
யிடமே கொண்டு சேர்த்திட்டா
    ரீணயி லெழிலார் பிள்ளையையே. (௪௧)

குழவி நுதலி னுதற்கண்ணின்
    குறிப்பு மீர முலராது
வழியு மதிபோல் வெண்கீற்றும்
    வளையாங் கழுத்திற் கருமறுவுந்
தழுவு சூலந் தமருகங்கைத்
    தலமே ரேகை யாயுற்று
மெழுத வொண்ணு வெண்ணுன்கா
    மெழிலித் திறமும் வாய்ந்ததுவாய். (௪௨)

நாறு மயனுங் காணுத
மலர்த்தாள் சிவனுஞ் சங்கரரைப்
போறு மிச்சேய் விளங்கினதாற்
பொருந்து நாம மவர்பெயரே
சாறு மென்னச் சங்கரராய்ச்
சாற்றி ஞர்கள் பிள்ளைநிலோ
நாறு மதிபோ னல்லோர்செய் •
கருமம் போலும் வளர்ந்ததுவே. (௬௩)

இரண்டா மத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—௮௩.

# மூன்று மத்தியாயம்.

கங்கையோடு பிறையணிந்த
கண்மூன் றுடையார் சங்கரரா
யங்க ணுலகி லெய்தியவா
றறைந்திட் டோமேல் விண்ணவர்கள்
பங்க யத்தோன் மான்முதலோா
பரமன் பாத சேவைக்கா
யிங்கு வந்த வரலாற்றை
யெடுத்துச் சிறிது விளக்குவமால். (க)

வெய்யில் சாயை யுடன்றிருமால்
விமல மறையோன் புத்திரனுய்த்
துய்ய சனந்த ணுசாரி
தொன்ணு மங்கொண் டவதரித்துச்
செய்ய பதும பாதனெனச்
சிறப்பு நாமம் பின்னடைந்தா
னய்யுர் குலத்து வாயுவந்தா
னத்தா மலகா சாரியென்றே. (உ)

வன்னி வந்தான் றரோடசனுப்
மாமு கத்தோ னந்தியொடு
மன்னு வீர பத்திரரும்
வந்தா ருதங்க முனிவனென
வன்ன வூர்தி சுரேச்சுரனு
யாசான் கூறு முடன்கொண்டு
பின்னர் விஸ்வ ரூபனென்ற
பெயரும் வகித்து விளங்கினனே. (௩)

சல்லால் புடையார் கடவுளருள்
கலக்க விவர ணாசாரி
செல்லார் பெயரைக் கொளவருணன்
சித்சு காசா ரியரானு
னல்லா ரியமன் காலநர
னுன வாதி யாயுதித்தான
வல்லார் நிருதி சாத்தேய
மந்த்ர வாதி யாய்ப்பிறந்தான். (௪)

வேறு.

மற்றுமுள தேவர்பிற வாதிகளாய் வந்து
செற்றுபல சீடருடன் சித்திகளனைத்தும்
பெற்றவர்க ளாயினர்கள் பீடமரும் வேத
னற்றலந்தூர் வாசமுனி நண்ணிடலு மாங்கு. (௫)

மூதறிஞ ராமுனிவர் மொய்த்தவர்கள் வேதம்
போதமரு வானெதிரிற் புகலியுறக் கண்டு
வேதனெதிர் தான்சொலவே விழைந்துசொல வன்னான்
காதலியோர் சுரங்குறையக் கண்டுநகை செய்தாள். (௬)

நானெனுமகந்தைகொடு நங்கைநீ சிரித்தா
யானதினு னரமங்கை யாகியொரு வாதி
லீனமடைந் தேதுறவி யின்வசமே சிக்க
யானெடிது காண்பெனென விட்டனனோர் சாபம். (௭)

சாபமிது மப்பிலுக்கருத் தப்பிடலா மன்றோர்
சாபமிநி மஞ்சொலுக்குத் தப்பமுடி யாதாற்
கோபமவன் றீர்த்தருளைக் கூட்டிடவே வேண்டி
நாபிமல ரான்மனைவி நற்றவனைக் கேட்டாள். (அ)

தும்பைபலா சூடிறைவன் றுறவியெனப் பாரி
லும்பருடன் மேவளவி லுற்றிடுவை யீயுஞ்
சம்புகனை யென்றிடநின் சாபமொழி வாரு
மெம்பரமன் றனதுவச மேவியுடன் வாழ்வாய். (கூ)

அன்றுனது பெருமையழி யாதுபுகழ் சேரு
மென்றுமுனி யோதியுட னெய்தினன்ப திக்கே
யன்றவளுஞ் சோணநதி யங்கரையின மாலின்
றுன்றியநண் போன்மகளாய்த் தோன்றினளிப் பாரில் (ய)

காரணியோர் வேதியனின் கன்னிகையாய் வித்தைப்
பூரணியா யோர்பெருகிப் பொற்பமரு மந்த
வூரணியா யாகியுற வோங்குபுகழ் கேட்டே
யாரணமா வேதியர்க ளாயிழை மணக்க (கக)

எண்ணினவ ராயிடினு மேற்றவன்சு ரேசப்
பண்ணவனென் றேயறிந்து பார்வதியை யொத்த
பண்ணினிய சொல்லுமய பாரதிம ணக்கப்
பண்ணினர்கள் நாரதரும் பார்ப்பனருங் கூடி (கஉ)

பட்டபதர் மாணவரின் பாவைதனை யீன்றே
ரிட்டமிக வொத்தவரு மோர்பெறும ணத்தை
யட்டதச கருவிகளு மாழிபிறெ லிக்கச்
சிட்டரளி யாசியொடு சீர்பெறமு டித்தார். (கங)

தாதையளி சீரெவையுந் தையலவள் கொண்டு
நாதனமர் மகிடமதி நன்னகர டைந்தே
யாதரவோ டன்புடைமை யாழியினி ருக்க
மேதினியு மருந்ததியும் வெள்கினர்கள் கண்டே (கச)

வேறு.

ஆங்கவர்கண் மாணுக்கர் பரிச னத்தா
ராநிரைபொன் மணியாடை யகத்து மற்று
மாங்கலங்க ளூற்கோச மாதி யெல்லா
மடைந்தவராய்ப் பலவிதமாஞ் சுரௌதஸ் மார்த்தம்
யாங்குடனே புரிந்தவரா யிம்மை யம்மைப்
பயனெல்லாம் பெறுமாறு வாய்ந்தி ருக்கப்
பாங்கியராய் விண்மடவார் பாங்கராகப்
பணிவிடைகடேவரெலாம் புரிந்து வந்தார். (௧௫)

மண்டனபண் டிதனொழுக்கம் வேள்வி யோம்பன்
மறையோத லோதுவித்தன் மந்த்ர தீக்ஷை
யெண்டரவொண் ணுதசப முதலாஞ் சித்தி
யினையந்த தனாற் சாபமனுக் கிரகந் தன்பாற்
கொண்டவனு யுபகாரி யெனவே யாருங்
கூறவற வடிவினனுய்க் கல்விச் செல்லே
கண்டனனு ரியவர்த்தா சிரிய னென்ற
கனப்பெயரும் வகித்துமிக ரில்லா துற்ருன். (௧௬)

மனைக்கிழத்தி யம்மையாளு நீறு பூத்த
வன்னியென மறைப்புண்டு கல்விப் பேற்றைத்
தனக்குளத்து வேண்டளவு வெளிப்ப டுத்திச்
சகலகலை மாணுக்கர் முயற்சி யின்றி
மனக்குறிப்பா னறிந்திடுமாக் கடைக்க ணித்து
வரும்விருந்தை யுபசரித்தி யாரும் நல்ல
மனைக்கொத்தா ளெனநடந்து தலைவற் பேணி
யன்புடனே யில்லறத்தை நடத்தி வந்தாள். (௧௭)

இங்கிவர்க ளிவ்விதமே வந்தா ராக
வீச்சுரனுஞ் சங்கரராய்த் தோன்று முன்னர்
செங்கையினிற் சங்குடையான் பாய லாதி
சேடனுமே மூவர்கலை தாங்கிப் பாரிற்

# மூன்றாமத்தியாயம்.

றுங்கமுறுங் கோவிந்த பகவற் பாதத
தொல்பெயரோ டவதரித்துச் சுகனார் சீடப்
புங்கவரா லுபதேசமடைந்து பின்னர்
போயடைந்தார் பதஞ்சலிமா முனிவன் பாலே. (கஅ)

வடமொழியி னிலக்கணமும் யோக மோடு
வயித்தியமு மவனருளா லய்ய மின்றித்
திடவிதமா வுய்த்துணர்ந்து தேர்ச்சி பெற்றுத்
தெளிந்தநரு மதையாற்றங் கரையின் பாங்கர்
சடமென்னு முடலொடுக்கி யநந்த போகத்
தவநிட்டை கூடியவரி ருந்தா ரானார்
கடிமலரைங் கணையானுங் கலியுங் கூடிக்
காசினியி லமரகனா மரச னானார் (க௯)

வயிரவரே பாசுபதர் தந்தி ராக
மசபரதே வதைசவுரம் நான்காம் வேதம்
பயிலனுறங் காபாலி சைவங் காணா
பதம்வயிணம் வைணவம்பா ரிடதர் சாத்தா
தியரென்னப் பிறந்தனர்கள் சிவனி னேசன்
றிகழ்ந்தனங்கே ரளநாட்டு வேந்த னாக
வயர்விலவீ ராவளியே மந்த்ர வாதி
யாகநவக் கோள்கால வாதி யானார். (உ௰)

அரக்கரெலாஞ் சார்வாக ரானார் மேலு
மசுரரெலாஞ் சமணரொடு புத்த ரானார்
திருக்குடைய தானவர்கா மக்கு ரோதர்
திரிந்தனர்து வைதிகளாய் முனிவ ரிட்ட
தரிக்கவொணாச் சாபத்தான் மறையோர் மாண்டு
தரணியிற்பாற் கரபட்ட வழிட ரானார்
தருக்கவைகா னசபாஞ்ச ராத்ரி யோராய்ச்
சமைந்தனர்வி டுவச்சேனர் முதலா னோரே. (உக)

இந்தவிதந் தேவர்களு மற்றுள் ளோரு
மீச்சுரனா ராணைவண மடைந்து பாரிற்
பாதமூறு மாணாக்கர் பலரைக் கூட்டிப்
பகையானு மன்பானு நான்கு வேதத்

தந்தமுறுங் கருத்தைவெளிப் படுத்தா நின்றார்
சகலபுரி வாரமுட னீசன் றேன்றுட
சிந்தனையுஞ் சேதுமுத லிமய மீறாய்த்
தேய மெலாம் விண்ணுலகாய் விளங்கிற் றன்றே (உஉ)

மூன்றுமத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௱ள.

# நான்காமத்தியாயம்.

சேண்மேவிய விமையோர்களுந் திருமாலொடம் புயனும்
பாண்மேவிய மலர்த்தாரணி பரமேச்சுரன் பாதங்
காண்மேவிடப் புவிசேர்ந்திடு கதையாஞ்சில சொன்னோம்
பூண்மேவிய மகவாயரன் புரிலீலைகள் புகல்வாம். (க)

இடபாசல நகர்வேதிய ரிலிங்கேசரின் முடியில்
வடமாயணி மலரோடணி மணிகார்த்திகைத் திங்க
ளிடமேவசிவ குருசேய்களத் திடம்போயவை யமைந்த
வுடனேயவ ரவைகோயிலி லுளவோவென வறிய. (உ)

திருக்கோயிலை யடைந்தேயவர் சிவனார்முடி யவைக
ளிருக்காதுற வியந்தாரரு ளிலிங்கேச்சுர னமக்கா
யொருக்கால்வடி வெடுத்தானென வழிபாடுக ளுஞற்ற
திருக்கேயமர் வலிமாயையின் செயலானது மறந்தார். (௩)

மற்றோர்தின மோராயிர மறையோர்க்கமு தளிக்கக்
கற்றோர்சிவ குருவேதியர் கருத்தாய்ச்செயும் வேலை
சுற்றார்வளி யோடேபெருந் துளிமாமழை சேர்ந்து
சற்றோர்பொழு தச்சேனையின் டடமேகொடு போக (௪)

விணாம்பாயபுன லடையாறது வளங்காதுற மறையோர
கண்மூன்றுடை யிடபாசலக் கருணாகரர்த் தொழுது
மண்மீதினிற் றிசையானையும் வளர்ந்தேதுரு விடற்குத
தண்போலிய மறையோர்சிலர் தமையேசெல விட்டார் (௫)

போனார்சிலர் திசைக்கோர்சிசு பொருளோடெடுத் தாராய்
நானுமறை யோரேநிறை நல்லோரவை யிறுத்த
வானொரொரு சிசுவேபிரு நாலாஞ்சிசு வடிவைத்
தானையடைந் ததுவேயெனச் சந்தோடமிக் குற்றார் (௬)

அட்டாகம வுருவேயெனு மரனாயசங் கரரா
மெட்டாகிய மகவோரொடு மிணிதேசிவ குருவுந்
தட்டாவகை நன்றாகவச் சந்தர்ப்பணை முடித்துச்
சிட்டாரளி வாழ்த்தாசிகள் சிறப்பாயுடன் கொண்டார். (௭)

அவ்வேளையி லருகார்குரு வாயூருள கண்ணன்
செவ்வாலய மதிலேயது சின்முத்திரைக் கையோ
டொவ்வாவடி வெடுத்தேயுற வுற்றார்சிலர் நோக்கி
யெவ்வாறடைந் ததுவோவென விட்டார்சிவ குருமுன். (௮)

வரவேவதி பெண்ணாகிய மகவோரெலா மறைந்தார்
குருவேதிய ரெண்மூர்த்திக ளொன்றேயெனக் கூறிப்
பரவாவுற லானார்பினர் பரமேச்சுர மைந்தர்க்
குரிகாப்புகள் முதலாச்சிவ குருவிட்டன ருவந்தே. (௯)

உலகாயிதர் சார்வாகரொ டும்பர்குரு கூடிப்
பலமாகிய வுத்தித்திறம் பகர்ந்தார்சலி வாயு
நிலவாயிடுந் துவைதத்தினை நிறைவாய்ச்சொலக் கண்ணன்
சொலலாயினன் சுத்தாத்துவி தத்தின்றுறை துலங்க. (௰)

என்னக்கன விடையேயிக ழியல்பானதை நனவிற்
பன்னற்கரி தாஞ்சேயெதிர் பார்த்தேதெளி வுற்றார்
பின்னர்க்குரு வாகுஞ்சிசு பேசும்பிரண் டாண்டின்
முன்னற்குறி யகரத்தினை மொழிகாலையில் வேறாம். (௧௧)

வாதேபுரி வோர்தானுவின் வலியாவையுங் குறைந்த
தாதேயலர் தேனேயெனத் தண்ணூறலின் சொல்லை
மாதேவனு முறைபோழ்தினில் வழக்காடிடு மவர்கள்
கோதேயுரு வெடுநாமிகக் குழறுற்றது வம்மா. ௧௨)

மூன்றாம்வரு டத்தேயது முதனூருல கத்தி
லான்றாகிடும் வைதீகமும் லௌகீகமு மனைத்துந்
தான்றானறிந் ததுவாகிமண் டலத்தேவிய ரிக்க
தோன்றாகிய பயனுமென நுவன்றாரிதைக் கண்டார். (கங)

மற்றோர்தின மிடபாசல வாணன்றிரு நாளிற்
பொற்றேர்தெரு வோடிச்செலும் பொழுதேபதின் மூர்த்தி
யுற்றார்சிறு சேய்சங்கர வுருவோடது வன்றிப்
பற்றார்சனக் கூட்டத்துளும் பயின்றார்சிறு சேயாய். (கச)

பார்த்தாரதி சயித்தார்புகழ் பரவுற்றிடப் பகர்ந்தார்
பூத்தாரிது சித்தன்செயல் போலாமென மகிழ்ந்தார்
நீர்த்தார்சடைப் பெருமான்புரி நேர்மைத்திறம் பாரி
னீத்தாரல மற்றாரதை நிகழ்த்தற்குரி யாரே. (கரு)

வேறு

வ்விள வேனிற் காலஞ் சிவகுரு வன்பு மிக்கு
பவ்வழல் வளர்த்தோர் வேள்வி வேட்டிட மகத்தின் சாலை
ய்விய மறையோர் கூடித் திருமறை செப்பு மோசை
வமா ரொலியி னோங்கிப் பரந்தது பந்த ரெங்கும். (கசு)

விதை பண்ட மெல்லாம் பருப்பதம் போல யாகத்
மரு காகச் சேர்த்த சாலையின் பாங்க ரோடிச்
சில சிறுவர் கூடி சிந்தையிற் களித்தே யாடிச்
ாலவலர் யாரே யிப்பூ சுணியுளே விதைக ளென்றும் (கஎ)

தரிக் காயி லுள்ள விதைகளைக் கணக்கிட் டாயு
க்தகைத் தான கேள்வி யிசைத்தன ராகித் தாமே
த்துக ளெண்ணித் தோல்வி வெற்றிக ளடைந்து மீண்டுந்
ந்தமில் வாது கொண்டு சங்கரர் தம்மைக் கேட்டார். (கஅ)

னத்தெழி லாதி வாய்ந்த வாலரே யுலக வித்தின்
ணக்கினை யுலக முற்று மாமெனக் கழறக் கேட்டா
ணிப்பொரு டெரியா ராகி யிருந்தனர் புலவர் தம்மை
னக்கமே புரிந்து கேட்க மற்றவர் மயங்கி நின்றார் (ககூ)

## நான்காமத்தியாயம்.

மயக்கமுந் தெளியக் காயின் வகைகளைக் கொணரச் செய்து
நயக்கவக் கரிக ளீர்ந்து நாடிய போழ்தி லோரோ
ரியக்கமார் காயோர் வித்தே யிருந்திடக் கண்டி யாரும்
வியக்கவோர் வியப்பே யென்ன வேதியர் விளம்பி னாரே. (௨௰)

அத்திரு மகனார் சொல்லிற் ககப்பொரு ளறியா ராகிச்
சித்திரப் பாவை போலுந் தியங்கினர் மறையோர்பின்னை
யித்தனுக் கொண்ட தன்மைக் கேற்பநற் குரவர் மாட்டு
வித்தைக ளெல்லாந் தேர்ந்தார் மெய்ப்பிர யாசை யின்றி. (௨௧)

சங்கர ருத்தி யோடு சாற்றுசொல் லிடிக டாக்கத்
தங்களில் செருக்குக் கொண்ட சமயவா திகளாம் வெறபு
பங்கமே யடைந்த தானே பட்டது மூதியோ ரெல்லா
மிங்கிவர் முதிய ராலு லென்செய வலரோ வென்றார். (௨௨)

சிவகுரு மூன்று மாண்டு செல்லுழி சிறுவர்க் காற்றுஞ்
சவளமு முடித்துப் பின்னர் தளர்ச்சியைத் தேகத் துள்ள
வவயவ மடையக் கண்டே யாகுநாற் சடங்கு செய்யச்
சிவனருள் வாய்க்கா தென்னத் தேர்ந்துதா னிரங்க லானார். (௨௩)

ஆற்றிடு முறையை யெல்லா மந்தணர் மனையாட் கோதிச்
சாற்றிய காதற் சேய்க்குச் சத்தியோ தீக்கை செய்து
கூற்றுவன் வாதை யின்றி யோகத்திற் கூடி யீசன்
மாற்றறி யாத செம்பொன் மலர்ப்பத மடைந்திட் டாரே. (௨௪)

கணவனா ரிட்ட வாணை கடவுள ரேவ லன்பா
ரணிபெறுஞ் சேய்மாட் டுள்ள வன்புமுப் புரியே யான
பிணையதாற் கட்டுப் பட்டுப் பேதையள் கணவன் மாண்ட
கணமுடன் கட்டை யேறக் கருதிடா திருந்தாள் மன்னோ. (௨௫)

உயர்ந்தவ ரறிஞர் மற்று முறவின ரோடு மங்கை
பயந்தவம் மகவைக் கொண்டு பரிவுற வரணி தேய்த்து
வயந்தரும் வன்னி மூட்டி ஞாதிக ளெல்லாஞ் சூழ
வியந்தர வபரச் செய்கை மெல்லியள் முடித்திட் டாளே. (௨௬)

க்கிய விந்த னத்தி லந்தணச் சிறுவர் தர்ப்பை
டுக்கென வரிந்து போட விபன்மணங் கமழ்ந்த யாண்டும்
க்கணி யாரி யாம்பை மாசிய மாதி மாத
க்கணோர் சிறிது மின்றி யியலுமா செய்து வைத்தாள். (உஎ)

தமி நோன்பீ யாவு மொழுங்குடன் புரிந்து பின்ன
ந்தரா யணத்தி னல்ல வோரையின் மூத்தோர் வேத
ந்தக ருறவோ ரிட்டர் விரும்பிய ஞாதி கொண்டு
தியாய் நூற்ச டங்கைப் பாலசங் கரர்க்குச் செய்தாள் (உஅ)

மத்தின் வடிவாம் பிள்ளை பிரமத்தை யுணர்த்து கின்ற
மத்தி னுபதே சத்தைப் பெற்றனு பவத்தா லின்ப
நவத்த ராகி மாதா வொளிகதிர் வண்ணிப் பேணிப்
நவத்தி லுணர வேண்டும் பழமறை குருபாற் கேட்டார். (உகூ)

ந்தநற் குருக்கள் வேண்டுந் தக்கணை யன்பா யீந்து
தையிற் களித்தே யன்னார் செப்பிய வாசி பெற்று
திர சித்தி கொண்டு வகையுடன் ஒ ருருளுந் தேர்ந்தே
தரத் திரவி போல வம்புவி விளங்கி னாரே. (௩௰)

ப்புரி நூல ணிந்து முஞ்சியும் பிரம தண்டும்
ராற்புளி தோமான் றோலும் புனைந்தசங் கரரா மாணி
டபகற் றேவ ரில்லந் தாருக வடவி சென்ற
ம்பரன் போலப் பெண்க டம்மனங் கவர லுற்றார். (௩க)

ங்கரர் சாம கீதஞ் சாற்றிடக் கேட்ட மாக்க
ங்குள பறவைச் சால மூர்வன வாதி யெல்லாம்
பாங்கிய வுவகை யாலே புலன்மறந் திருந்த மேலுஞ்
ங்கம மல்லா தெல்லாஞ் சத்தமிர் மத்தை யொத்த. (௩உ)

ருமட வாசி யாகிச் சங்கரக் குமர ரோர்நா
ருகுடன் கற்பா ரோட யாசித ரகமே போந்து
ருடர்கள் காணு ராகிப் பொற்கொடி பிச்சை யீயென்
ருளொடு கேட்க வம்மை யயர்ந்தனள் செயலொன் றின்றி. (௩௩)

ஆயினுங் கிடைத்த நெல்லிப் பழத்தினை யன்பா யீந்து
சேயிழை சிறுமைப்பட்ட சிந்தையோ டின்சொற் கூற
மேயசங் கரரா மாணி மிடிதவிர்த் தருள வேண்டி
யாயமங் கலமா மாரி யாகுக வனக்கே யென்றார். (௬௪)

என்றவ ரவளை வாழ்த்தி யிலக்குமி யிறைஞ்ச வன்னாள்
பொன்றிரு வடிவத் தோடு பூசுரர் முன்னர்த் தோன்றி
நின்றிருக் கருத்தி யாது நிகழ்த்திடா யென்னக் கேட்க
வின்றிவள் வறுமை தீரா யென்றவர் பரிந்து சொன்னார் (௬௫)

மும்மையி னேற்று ரன்றிச் செல்வமே முதல வெல்லா
மிம்மையிற் பிறர்க்கு வாய்க்கா தெனவவ ளியம்பப் பிள்ளை
யம்மையே யெனக்கு நெல்லி யங்கனி யளித்த தான
செம்மைவாய் வினைக்கா யன்னா டிருவுறச் செய்யா யென்றார். (௬௬)

திருமகள் களித்தே யாறு பதுகலச் செம்பொன் னெல்லிப்
பெருமழை யந்த வீட்டிற் பெய்திடச் செய்து பின்ன
ரருளுரு வாகி நின்ற வப்பிள்ளை தன்னை வாழ்த்தி
மருவிய செம்பொன மேனி மறைந்துடன் பதிக்குச் சென்றாள் ()

அம்மனை முற்றும் பொன்னு மகத்துளா ருள்ள முற்றும்
விம்மிய களிப்புங் கேட்டா ருளத்தினில் வியப்பும் பொங்கித்
தம்மினி லிடமில் லாது ததும்பின பொருளி லிச்சை
செம்மனங் கொண்டா ரெல்லாஞ் சிறுவரைப் புகழ்ந்தார் மன்னோ()

இதுமிக வியப்பே யாமென் றிருந்தவர் புகழ்ந்தார் பாரிற்
பதியெலா மிந்தச்சேதி பரவிய தந்தப் பிள்ளை
புதுமைகள் காணவேண்டி பூதலத் துள்ளா ரெல்லாம்
விதவித மாக வந்து மொய்த்தனர் விரைந்து கூட (௬௯)

வேறு.

ஏழா மாண்டினி லிருக்கே யாதியாய்த்
தாழா மாமறை சாற்று நூற்பொருள்
வாழா சாரியர் மடத்திற் றேர்ந்துபின்
சூழார் தேசொடு வந்தார் தொன்மனை (௭௰)

மனையில் வந்தவர் வன்னி மாமறை
மனையள் வெங்கதி ரன்பாய்ப் பேணியுங்
கனைமுந் நீரெழு கடலை யுண்டவன்
புனையுஞ் சின்னமும் பொற்பாய்ப் பூண்டனர். (௪௧)

வேத மன்னிய விழுமை யர்த்தமு
மோதி யுற்றிட வுலகில் யாவரு
மாதி மோனமா யாலின் கீழமர்
நாத னாய்ச்சொலன் ஞாய மென்றனர். (௪௨)

காம மாணவம் லோபங் காய்சின
மேம விப்பகை யாவும் வென்றவர்
காம தேனுவுங் கற்ப தாருவும்
பூமி வந்தென யோகை பூத்தனர். (௪௩)

மேரு வொத்திடு வெற்பொன் றில்லைபோற்
சீரு றைத்திடுஞ் சேய்க்கு நேரென
யாரு மற்றிட வின்ற தாய்மிகப்
பேரு வப்பதைப் பெற்றிட் டாளரோ. (௪௪)

அந்த வேளைதூர் வாச வம்முனி
வந்து வித்தையிற் றலைமை வாய்ந்திடத்
தந்த வத்தினிற் சிறிது சங்கர
மைந்தர் பெற்றிடத் தந்து வாழ்த்தினார் (௪௫)

மற்றோர் நாளதில் வயது மூப்பினும்
பற்று நோன்பினும் மெலிந்த பான்மையை
யுற்று ளாகிய மாதா வுத்தமி
செற்று ளாற்றிடைத் தீர்த்த மாடிட. (௪௬)

கோடை வெப்பமுங் கொடிய தானதால்
வாடி சோர்ந்தனள் மாதா வென்பதை
நாடி மாணிநீர் நளின மீந்துதம்
வீடு சேர்த்தனர் மெல்லக் கூட்டியே. (௪௭)

அந்த நன்னதி யகர மோடிடச்
சிந்தை யெண்ணிவ சியவா கர்டண
மந்த்ர வக்கர மான மாநதி
சந்த தோத்திரஞ் சொன்னார் சங்கரர். (௪௮)

செப்ப வந்நதி தேவர் முன்னடைந்
தப்ப வுன்னெணும் நாளெங் காவென
வொப்ப வோதியே யுவந்து போயிடத்
தப்ப லின்றது தெருவிற் சார்ந்ததே. (௪௯)

பார்த்தார் யாருமெய்ப் பரவ சத்தராய்ப்
பூத்தார் மெய்க்களி பூவை யாரியா
ளேத்தார் நோன்பினுக் கிடையூ றற்றுட
வாய்த்த வத்திற மகவை வாழ்த்தினாள். (௫௰)

மலைநா டெங்கணும் வளமே யோங்கிய
நிலைதான் சத்திய வன்மன் னீதிமன்
னலையா நெஞ்சின னாகி யாய்ந்துபின்
னுலையா நற்றவச் சேயென் றோர்ந்தனன் (௫௧)

மக்க ளில்லையான் மாணி நல்லருண்
மிக்க வேகொள வேண்டித் தன்னகர்
தக்க வாறுநீ சார்ந்து மந்திரி
யக்கு ருக்களை யழைத்து வாவென (௫௨)

போத பூடண னுங்குப் போயவர்
பாத தாமரை பணிந்து தன்னுடன்
சீத வெண்மதி சென்னி சேர்த்திடு
நாத வந்தரு ளல்கா வென்றனன். (௫௩)

தோலு டுக்கவுஞ் சோறு துய்க்கவுஞ்
சாலு மென்றும வோமக்குத் தார்மனை
னேலு நீடவைப் பேறு லென்பயன்
கோலிலா முங்குற வுளக் கூறெனார். (௫௪)

கேட்ட மந்திரி கிளர்த்து வேந்திட
மோட்ட மாயுட னோடி போதினன்
றோட்ட மோடவன் செப்பு நாடக
மீட்ட பொன்னிரு வைந்தா யாயிரம். (ருரு)

கொண்டு சங்கரர்க் கீந்து கும்பிட
மண்ட லீகரன் றன்னை வாழ்த்திநீ
யுண்டு பண்ணிய நூலிவ் வோங்கலார்
பண்டை நாட்டினிற் பரவு மென்றனர். (ருசா)

மன்ன ஞானமறை வல்லா வாழ்விப்
பொன்னை நல்கெனப் போதித் தன்புட
னுன்னு சேயுனக் குறுவன் போவென
வன்ன வன்றனை வாழ்த்த லாயினார். (ருஎ)

மாணி சொல்லிய வாசகத் தினைப்
பேணி நன்மகப் பேறு பெற்றிட
வாணி மன்னிகர் மறையோர் கூட்டியே
வேணி கர்த்தமன் வேள்வி செய்தனன் (ருஅ)

எந்தை சங்கர ரினிது மன்னனுக்
கந்த நாளினி லளித்து வாழ்த்தினு
மந்த வேள்வியின் பேற்றி னானுஞ்சேய்
வந்து தோன்றினான் மகிழ்சி றக்கவே. (ருகூ)

பெற்ற புத்திரப் பேறோ டம்மன
னுற்ற நற்குரு பத்தி யோங்கிட
நற்ற ரைத்தலம் நன்மை மல்கிட
மற்று மப்புவி யாண்டு வந்தனன். (சாய)

நான்காமத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—௱சாஎ.

# ஐந்தா மத்தியாயம்.

சங்க ரச்சிறு மைந்தர் தாரணி
யெங்கு மெய்ச்சிட வியற்று லீலைக
ளிங்கி யாஞ்சில விசைத்த மேலவர்
தங்கு மாறதைச் சாற்று வாமரோ. (௧)

பாலர் கண்டிட வந்த பற்பலர்
சில ராகியே சென்றார் பாடிய
நூலை யோதுவர் நுவலுஞ் சித்திகள்
சால வெய்தினர் தரணி யேதிலும். (௨)

துன்ப நோயிடை யூறு தோன்றிய
வன்கண் பூதவே தாள வஞ்சக
மின்ப மற்றவெவ் வறுமை யாவுமவ்
வன்பர் பேர்சொல வழிந்த வன்றரோ. (௩)

மைந்தர் சொல்லள வானே மாந்தருக்
கந்த மற்றபைம் பொன்னு மின்னொளி
சிந்து செம்மணி வைப்புஞ் சிக்கின
விந்த வாபுகழ் பரந்த தெங்குமே. (௪)

வேறு.

பின்புப மன்னியர் பீடுகொள் கௌதம
ரென்பினின் றிறததி சிகும்பரு மென்றமா
வன்புல னடக்கிய முனிவர்கள் மாணியை
யன்பொடு காணுமா றடைந்தன ரகத்திடை (௫)

வந்தவர் தங்களை வகையுட னருக்கியந்
தந்தக சத்தியாய்ப் போற்றுப சரணைகள்
சுந்தரச் சங்கரர் செய்திடத் தூயவர்
சிந்தையின் மகிழ்ந்தனர் சிவகளை நோக்கியே (௬)

# ஸ்ரீ சங்கரவிஜயம்.

நால்வரும் பிள்ளைபி னல்லியல் கண்டுதம்
மால்வளம் பெறுதவ மவர்கொளத் தந்தபின்
சேல்வள ருவரிசூழ் செகத்தியல் வேண்டிநம்
பால்வகை தணியருள் பயந்திட வெண்ணினர்.

அகத்தியர் சிதம்பர ரகசிய மடமொடு
செகத்துயர் ராசயோ கங்களைச் செய்திடு
வகைத்திற மந்திர லயசய மார்க்கமு
நிகழ்த்தினர் முழுதுணர் நின்மலச் சேய்கொள. (அ)

மேற்சிவ தத்துவ மிக்குப மன்னியர்
பாற்சிவ மான்மியம் பத்தர்த தீசிடா
னாற்சமை தேவகன் மங்களி னுட்பமுங்
காற்சிலம் பகலியின் கணவர்பாற் றேர்ந்தனர். (௯)

அறிபவ ராபினு மச்சிறு மைந்தரு
முறுபரம் பரையது வுயர்ந்திட வவர்சொலைப
பெறுபவ ராயுடன் பெற்றனுட் டித்தலே
மறவறு தக்கணை யாமென வமங்கினர். (௰)

ஆயிடை முனிவர்பா லாரியாண் மகன்மண
மேயிட நீரருள் செய்திடு மென்னவத்
தூயவர் மூவர்க ளொப்பினர் சூழெழு
தோயமார் கடலையுண் டொன்முனி சொல்லுவார் (கக)

தாபத மடந்தையே சாற்றுவ கேட்டியு
மாபதி வடிவமும் புண்ணிய வடிவமுந்
தீபமும் போலநின் குலமிகச் சீர்பெற
வோர்வடி வெய்கொடே யுதித்திடிப் பிள்ளையே. (கஉ)

இச்செய லான்மர பேற்றமும் பெற்றதே
யச்சமென் பிதிர்க்களும் நற்கதி யடைந்தன
ரிச்சையா லாவதென் னீச்சுர னெண்ணுமா
நிச்சய மென்றெணி நின்கருத் தொழிதியால். (கங)

# ஐந்தாமத்தியாயம்.

எண்வய தாயிடு மிறுதிவந் தடைந்தது
விண்வளர் தேவரும் விரும்பிய துறவறம்
பண்புடன் கொண்டுபி றப்பதைப் பற்றறுத்
தெண்பெறும் வயதினை யெய்தலா மென்றனர்

மற்றைய முனிவரர் வார்த்தையொன் றுரைசெயா
தற்றையே யகத்திய ரழைத்துட னேகினர்
பற்றிய வாஞ்சையின் பாவையன் மெய்யறி
வற்றவ ளாயினள் சீதளத் தாற்றினர். (கரு)

தவமுனி மொழிகடி. சோயவ சத்தியா
லவலமே யடைந்தவ ளனைத்தையு மறந்தனள்
சிவனடி பேறுதன் முதலிய செய்துதா
னவையற வாழுநா ளைலமுறப் போக்கினள். (கசா)

சாதன சதுட்டயஞ் சங்கரர் கொண்டதான்
மாதுற வைகொள மனத்திடை யெண்ணியம்
மாதவ ளனுமதி வாய்த்திட வேண்டிநற்
போதகை யுலகியல் போதனை செயச்சொனர். (கள)

அன்னவ ரவ்வித மில்லறத் தவத்தையும்
பன்னரு முலகியற் பான்மையு மரியா
ளுன்னுமா றோதினர் பின்னரவ் வுத்தமி
தனனிடம் மாணிதன் மனக்குறி சாற்றினர். (கஅ)

சொல்லவு மம்மையத் துயர்பொறுக் காதுதன்
வல்லவ ராமக வழைத்திவை வாழ்த்துவா
னல்லவ ராக்கவொ ழுக்கினி னண்ணியே
செல்லுவ ரொழித்தலா மொழுக்கினிற் றேர்ந்தமே. (ககூ)

சனகரே முதலவ ரில்லறச் சாதனை
யினிதிருந் தொழிலொழுக் கத்தினை யேற்றனர்
கனமிகு துறவறங் கலியுக மரிதெனு
முனிவர்கள் வாக்கிய முன்னிடு பாலகா, (உ0)

கடலுல களித்தவக் கடவுளின் கருத்ததிற்
றிடமுள தாக்கவொ ழுக்கமாஞ் சிறுவனே
கடனறப் பிதிர்வினை முடித்தவர் கதிபெறக்
கடிமணம் புரிந்துதம் மரபது கால்வழி. (உக)

வந்துயர் வுறச்செயன் மகன்கட னென்பதை
முந்தைய நற்சரற் காரரா முனிவரி
னந்தமா காதையை யறிந்திலை போலுமே
மைந்தனே வசிட்டரை மானநீ யொழுகிடாய். (உஉ)

படைப்பினி னுண்முதல் வளர்ந்தவிப் பரம்பரை
தடப்பெரு கிளைநிறை தாருவு நின்றனுற்
படப்பெற லாகுமோ பாலகா வுடனிலை
திடப்படக் கான்முளை போற்றவஞ் செய்தியால். (உ௩)

அளவிட லரியமா மறைகளை யாய்ந்தறி
வளமிக நேரிது மகங்களை வேட்டிடி
னிளமைகொண் மைந்தனே பெண்ணிய துறவறங்
கொளவதி காரிதான் கூடிய காலமோ. (உ௪)

இதுவல வானதா லென்னிரு திக்கடன்
றுதிபெற முடித்தபின் சொல்லிய துறவறம்
பதிவுடன் கொள்ளெனப் பாவைதன் மைந்தருக்
கிதமுடன் பலவித மிசைத்தன ளாமரோ. (உ௫)

தாயுளப் பரிவினிற் சாற்றிய வைக்கெலாஞ்
சேயுளப் பனுவலி னுதரஞ் செப்பிட
வாயுரை மாற்றலென் றனைசொல மாணியும்
வாயொடுங் கினர்மறு வுத்தரம் வழங்கிலர். (உ௬)

மற்றொரு தினத்தினின் மகதியாழ் முனிவனுங்
கற்றதத் தாத்திரே யருமவண் கடுகிவந்
துற்றன ராயிட மாணியு முபசரித்
தற்றையே யாற்றுவ வாற்றின ரன்பொடும். (உ௭)

அன்னவ ரிருவருந் தனியிடத் தண்டையிற்
சின்னவம் மாணியைச் சேர்த்துடன் கொண்டுபோய்ப்
பன்னக விண்டுதத் துவப்பொருள் பகர்ந்துபின்
மன்னிய தம்மிடஞ் சார்ந்தனர் வாழ்த்தியே. (௨௯)

அன்றிர வேயம தர்மனு மவர்மனை
சென்றவர் வணங்கியே தென்புலம் போந்தன
னென்றுத யஞ்செயத் தாய்மக னிருவருந்
துன்றிய வாற்றினீர் தோய்ந்திட வேகினர். (௩௰)

சங்கரர் நீர்படி யெல்லையிற் றாள்களை
யங்கொரு முதலைவந் திழுத்திட வகப்படா
தங்கரோந் தலறிநின் றடிகளை யூன்றிநன்
மங்கையாந் தாயினை விளித்திவை வழங்கினர். (௩௧)

அம்மையே நற்றுற வறங்கொடு பிறப்பினின்
செம்மைவாய் பயனதைச் சேர்ந்திட விருந்தயா
னிம்முத லைக்கிறை யாயினே னென்செய்வே
னம்மதுன் மரணமு மெய்தினே னையயோ. (௩௨)

நொடியெனும் பொழுதிலென் னுயிரறும் நோன்பினு
யடியவ னிப்பொழு தாயினு முய்ந்திடத்
தடைசெயா தாணைதா சந்நியா சங்கொள
பிடியெனு நடையினைப் பெற்றவென் னன்னையே. (௩௩)

வேறு.

இந்தவிதஞ் சங்கரரு மேங்கி யழுதழுத
வந்ததுயர் நீங்க வகையொன்றுங் காணுமற்
புந்தியினி னைந்து புலம்பித் தவித்தனையுஞ்
சிந்தையினி லச்சமருள் கொண்டே திகைத்திட்டாள். (௩௪)

அவ்வமய நீராடற் கங்கடைந்த வந்தணர்க
ளவ்வமறக் கோண்மோ சனவிஞ்சை யேன்றளவு
செவ்விபெறச் செப்பினர்கள் சிற்சிலர்கள் கூடியடைந்
தவ்வமையை நற்றுறவுக் காணையீ யென்றார்கள். (௩௫)

இப்பொழுதே யாயினுந்தா னிம்மாணி சாடாயந்
தப்பறவே கொண்டாற் சலியாம லித்துணைநா
ளொப்புடனே வாழ்வா னெனவா னுரைபொன்று
செப்பியது கேட்டார்கள் சிந்தை களித்திட்டார். (௩௫

இன்னவான் சொற்கேட்டு வின்றருளுஞ் சேயினைக்கூய்ச்
சன்னியா சத்தைநீ தாங்கிப் பிழைத்திடெனச்
சொன்னபோழ் தச்சிறுவர் தோன்றான் முறைப்படியே
தன்னுளே செய்யத் தகுவனவெல் லாம்புரிந்து. (௩௬

றுவே டிணையான வாசைகளை முற்றொழித்துத்
தூவேய்பி ரேடமந்த்ரஞ் சொல்லிப் பிரமத்தின்
மேவே ருருவினராய் மெய்ப்பூதம் யாவைக்கு
மாவே னடியே னபய மெனப்பகர்ந்து. (௩௭

உச்சிமேற் செங்கை யுயர்த்தினராய்க்கூப்பிடலு
மச்சலமே வாழும் முதலை யவர்தாளை
யிச்சையறு ஞானியைவிட் டடைங்கள் போகுமெனு
மச்செயல்போல் விட்டுப் புறத்தே யகன்றதுவே. (௩௮

சங்கரரின் றாள்விட்டுத் தன்னுடலம் விட்டந்த
வெங்கரா தேசுடனே விண்ணி னுருப்பெற்று
துங்கமுறு மாரியத்திற் சோடசச லோகங்கள்
பங்கமிலா தோதிப் பரவியது சங்கரரை. (௩௯

இருநீர்த் தடத்தாழ்த்தி லிம்முதலை வந்தெய்த
வொருநீதி யாதோ வெனவினவி லோதிடுவாம்
பெருமா தவமுனியாம் பீடார்ந்த நாரதனுந்
தருசாபஞ் சுக்கிரா சிக்குடனே சார்ந்ததுவே. (௪௰

அக்கரா வாய்நா னமைந்திடுவே னுயினதை
யெக்குரவர் தீர்ப்பா ரிசைத்திடுமென் றேபணிந்து
சுக்கிரா சிக்கந்தா வன்கேட்கத் தொன்முனியுஞ்
சற்குருவாஞ் சங்கரரின் றாள்தீண்டப் போமென்றான் (௪௧

## ஐந்தாமத்தியாயம்.

கந்தருவ னவ்வாறு காசினியவ் வாற்றதனில்
வந்தொருக ராவின் வடிவமுட னுற்றிடலுஞ்
சிந்துநிக ரந்தநதி சங்கரர்போய்ச் சேரவவர்
கந்தமலர்ந தாள்தீண்டச் சாபங் கழிந்ததுவே. (௪௨)

கந்தருவன் சாபங் கழிந்தவனை யேபோடுசொர்க்கஞ்
சுந்ததமே போயடைந்தான் சங்கரரி னிச்செயலை
விந்தையிது வென்றே வியந்தாக ளெல்லோரும்
பந்தமொழிந் தேசிறுவர் பண்பாய் வெளிவந்தார். (௪௩)

தண்ணீர்க் கரைநின்று சந்தியா சச்சிறுவர்
வெண்ணீ றணிந்த சிவருப் வெளிவந்து
கண்ணீ ரொழுகக் கசிந்தழுத தாய்நோக்கி
புண்ணீ நினையு முளக்குறிப்பி யாதென்றார். (௪௪)

என்மகனே யென்செய்வே னென்னுரைப்பே னித்துணைநாள்
தன்மனித ரில்லாத நாதியெனத் தானிருந்துங்
கன்மபரி பக்குவத்தா னின்றனையான் காண்புனையாய்
நன்மரபிற் கொண்டதருக் காழ்ந்தவளாய் நானிருந்தேன் (௪௫)

எய்த்தமரு மிப்பருவ மாதரிக்க யாருமில்லை
பத்திபுட னென்னிறுதி நாளெனது பாங்கிலிருந்
துத்தரமா செய்கை புரிந்திடற்கு யாருமில்லை
யித்தகைய வெண்ணந்தா லேங்குகிறே னென்றிசைத்தாள். ()

சூரியா ளிவ்வா றறைந்திடலு மத்துறவி
பூரியார் போலவீ புலம்பிடலு நீதியதோ
சீரியாய் நின்கருப்பே யாக்குஞ் சிறப்புடனே
பாரிலியா ரொப்பார் பகர்ந்திடுவாய் நின்னையென்றார். (௪௭)

அஞ்ஞானத் தாற்பிறப்பி றப்பென்னு மாழ்கடலி
லிஞ்ஞாலத் தார்கொள்ளுங் காயங்க ளெத்தனையோ
வஞ்ஞாயத் தாலடையு பார்கலியு மெத்தனையோ
மெய்ஞ்ஞானத் தல்லாத வீண்புதல்வ ரெத்தனையோ. (௪௮)

அன்னமளி சத்திரத்திற் கூடி யகல்வதுபோ
லின்னவைக ளெல்லா மிருக்குஞ் சிலகாலம்
பின்னரவை துண்டாப் பிரிந்துடனே போயிடுமாற்
பின்னியதிற் சிக்கி யுழலுவதாற் பேறென்னே. (௪௯)

விடயங்க ளெல்லாங் கடனொழிய விட்டொழியுஞ்
சடங்கொண்டே யுள்ளளவுந் தாணுவினின் றொழுதே
யடங்குதலே நங்கடனா முற்பிறப்பி லாற்றுவினைத்
திடங்கொண்டே யிவ்வுடலைக் காக்குமெனச் செப்பிடுவார் ()

முன்னையவர் தேடிவைத்த வாக்க முழுவதையும்
நின்னைமிக வாதரித்தே யந்தியமு நேர்ந்திடத்து
வன்னியுட னீர்க்கடன்கண் மற்றுளவெல் லாம்புரிந்து
பின்னரடை வார்களன்றோ தாயாதிப் பேர்களுமே. (௫௧)

ஆதலினா லன்னா யவரிருக்க நானெதற்கோ
நீதபியா துன்னின் கவலொழியாய் நீணிலத்திற்
சாதலொடு தோன்றல் வருமிடத்துத் தான்றனியா
யாதலிந்தப் பாரியற்கை யென்ன வறிந்தவர்கள். (௫௨)

ஈசன் குரவரிவர் நற்றுணையை யேற்றவராய்ப்
பாசங் கழன்றகலப் பாதுகாத் தன்முறையாம்
நேரங் கொளுமற்றோர் நேரிற் பயன்யாதோ
மாசம் மனமடைந்தான் மாமருந்தா மாராய்ச்சி. (௫௨)

என்றுபல தேறுதலை யீன்றாளுக் கோதிப்பி
னின்றியான் றேசாந் தரமேக வெண்ணியுளே
னொன்றுந் தடைசெய்யா துத்தரமீ யென்னவவள்
கன்றுபிரி யான்போலக் கண்ணீர் பெருக்கிட்டாள். (௫௪)

பாலகனே யிவ்வகரத் துற்றேநீ பிச்சையைக்கொண்
டாலுனையான் பார்த்துமன மாறிடுவே னென்னிறுதிக்
காலமது வாய்த்தாற் கடன்கழிப்பா யோர்தலையா
யேலளவு முற்றுவிப்பா யிவ்விருப்பை யென்றுரைத்தாள்(௫௫)

வேறு.

**சங்கரமா** துறவியிவை கேட்டலுமே
யன்பமையுந் தாயே பாரிற்
றுங்கமுறுந் துறவோர்க ளோரிடத்திற்
பற்றிநின்றாற் றுறவு நீங்கிப்
பங்கமுற வெனதென்னும் பெருங்கேட்டுக்
கிடமாகும் பயந்த வூரிற்
றங்குவது வெறுத்தவனுக் கொருபோது
மாகாதாய்ச் சாற்று வாரே. (௫௬)

நீராட வேகின்றே னின்னிறுதி
நாளென்னை நினைத்தால் யானும்
பாராரு மெவ்விடத்தி லிருந்தாலும்
நின்கடனைப் பரிந்து செய்ய
நேராக வந்தடைந்து நற்கதிநீ
பெறச்செய்வே னினைப்பி லைய
மோராதே யின்புற்று வாழ்தியென
வுறுதிமொழி யுரைத்துப் பின்னர் (௫௭)

பேருழைப்போ டவளையுடன் படுத்தித்தன்
ஞாதிகளிற் பெரியோர் தம்மை
வாருமென வழைத்தந்த வகரத்து
மறையோர்முன் மாண்ட வீடு
சீருடனே பெறவேண்டி முற்றத்து
றந்தோனாய்ச் செல்கின் றேனும்
பாரமிவ டனைக்காத்த லெனவோதித்
தாயையவர் பார்க்குமாறே

ஒப்புவித்துப் பிதிர்செல்வ மத்தனையு
மவர்கொள்ள வுவந்த ளித்துத்
தப்புகுறை யில்லாது நன்றியுடன்
காமினெனச் சாற்றித் தாயின்

றிப்பியமா மலரடிகள் வணங்கியவள்
விடைபெற்றுத் திரைசூழ்ந்தாரு
மிப்புவிபி னியல்பொத்துக் குருநாடி
யுபதேச மேற்க வெண்ணி

இயற்கையினிற் கைவந்த துறவியராஞ்
சங்கரரு மேற்ற வாசான்
செயற்கையொடு சிறந்ததொழி லற்றநிலை
பெறவேண்டிச் சென்றவ் வூரி
னயற்கணுறு கிருட்டினன்றன் கோயிலடைய
திருக்கவந்த வகரத் துள்ள
மயற்கடந்த சிந்தையராம் வேதியர்கள்
பூசிக்க வதிந்திட் டாரே. (௬௰)

கலியுகத்தின் றொடக்கத்தி லறவொழுக்க
முற்றுணர்ந்து கல்வி மிக்கு
வலியுரைத்த சிதாமன் முதலான
முனிவரர்கண் மனத்தா ராய்ந்து
சொலியொழித்தார் துறவுதக்க தலவென்று
பத்தம்பன் றொகுத்த தான
மெலிவகற்று மிருதியுளுங் கிஃதுரைத்த
மிருதியுளும் விலக்கி யுள்ளார். (௬௰௧)

ஆபிடநீர் நாலுக்குஞ் சான்றோர்க
ளாட்சிக்கு மாகா தாக
மேயிடுமா துறவுகொள லெம்முறையோ
வல்லாது வேத நான்குந்
தாயிடுமா சந்ததியின் விருத்தியெனுங்
கொடியறுத்தற் றவிர்தி யென்னு
மேயதையோ ராதுகொள லேலேனெவன்
றறிந்தசில ரிசைத்திட் டாரே. (௬௰௨)

மனவெறுப்பு வாய்ந்திடத்துத் துறவுகொளல்
வேண்டுமெனும் வசன மாதிக்
கனமிருத்த வுபநிடத முடிபுரைகள்
பலவாய்ச்சங் கரருங் கூறிச்

## ஐந்தாமத்தியாயம்.

சனியாசோத் தாரமெனு மொருநூலை
யவர்களுக்காச் சாற்ற வன்று
ரினியிவர்க்கி யாருநிக ரில்லையென
மனமொப்பி யிசைந்தார் மன்றே. (௬௩)

அச்சிறிய சங்கரமா துறவியினின்
றிறநோக்கி யகத்தி னன்போ
டுச்சிகரங் குவித்தேத்தி விருத்தர்களுக்
காரியனா யுறுத லானே
யிச்சகமே துறவறத்தை நிலைநிறுத்து
மாசாரி யிவரே யென்ன
மெச்சினராய்ப் பெயர்வழங்கப் பார்புகழ்ச்
சங்கரரும் விளங்கி னாரே. (௬௪)

அன்றிரவி லக்கோயிற் கண்ணபிரான்
சங்கரர்முன் னடைந்தே யையா
நின்றனையின் றெடுத்தவளுக் காயமைத்த
வாற்றினது நீர்ப்பெ ருக்கஞ்
சென்றிடுகா லிக்கோயில் விக்கிரக
மிவைதாமுஞ் சிதையக் கொண்டே
கின்றதினா னின்கரத்தா னல்லிடத்திற்
றாபியெனக் கிளத்தி னானே. (௬௫)

கேட்டுடனே சங்கரரு மம்மூர்த்தி
தன்னுருவங் கிளம்பித் தானே
வாட்டமின்றி நடந்துவரத் தோத்திரமா
மந்திரத்தின் வலியை மிக்குக்
கூட்டியுட னாகரிடித் தனபுடனே
தேனுகரக் குழுமு வண்டி
னீட்டமுறுந் துளவவனத் திற்சத்தி
யோதிக்கை யியல்பாய்ச் சுத்த. (௬௬)

வைதிகவா கமவிதியாற் றாபித்தே
யத்தீர்த்த மற்று மெல்லா
வைதிகரு நிருமால்ய தோடமிலா
தேற்றிடுமா வைணா வத்தி

னைதிகமாந் தந்திரங்க ளிக்கிலத்
துள்கிடந்த வளவில் வைப்பும்
பெய்துளதா மிடங்காட்டி யவையனைத்தும்
பெருமானுக் குதவச் சொன்னார். (௬௭

அப்பொருளா லத்தேவர் காரியங்க
ணடைபெறுமா றன்னார்க் காணை
செப்பியது மல்லாதத் திசையுள்ள
பசுக்களுக்குத் தீங்கு றாதுக்
குப்பமதி லெங்கணுமே பயிர்முதல
வுண்டாகிக் கொடுநோ யின்றி
யொப்பரிய பசுப்பார்ப்பா ராவர்களு
மின்பமுற வோதிச் சென்றார். (௬௮)

அக்கணமே யங்குள்ள வோரிடத்திற்
கருணையுட னன்பா யோதத்
தக்கவரா மெங்குரவர் வடமொழியிற்
சொனிரீதித் தவத்தை யின்று
துக்கமொடு நோய்கவலை யுடையார்க
ளந்தரங்கச் சுத்தி யோடு
கக்கலற வோதவவை யகன்றிடுமா
மென்பதுகை கண்ட தாமே. (௬௯)

கண்ணபிரா னின்னருளு மாதாவி
னின்னருளுங் கடைப்பிடித்தே
யெண்ணமெனு முகத்திடத்திற் பிரமநோக்
குடையவரா யிருளை யிந்தப்
பண்ணவனு மிவ்விதமே யொழிப்பனென
வுலகறியப் படுத்தல் போற்செவ்
வண்ணமொடு கதிருதிக்கச் சங்கரரு
மரிநாமம் வாழ்த்திச் சென்றார். (௭௰)

கந்தமல ரிடத்துதித்தோன் முதலோரை
வருத்தியவக் காமன் வன்மை
செந்திருமான் மோகினியா கிடுங்காலை
யெம்மனத்தைத் திரிக்கு மாறு

# ஐந்தாமத்தியாயம்.

வந்ததனுற் காமாந்த கன்னெனும்யா
மவன்வலையில் வாய்க்க லாகாச்
சிந்தைகொளும் பரமகுரு கலையோடு
வந்தவர்தச் சிவனு யுற்ருர். (எக)

சங்கரமா முனியரசு புலந்தெறுகாட்
சிப்பூணைத் தரித்து விட்டைப்
பங்கமிலா தடைவேட்கைப் பரியேறி
யறிவிரவி பரந்த வெய்யிற்
றுங்கமுறும் வைராகக் குடைதாங்கி
யுபரிடதத் தூய்மை சேர்ந்த
பொங்கிடுமா புண்ணியத்தின் பரிபாகக்
காற்றடிக்கப் போயி ஞரே. (எஉ)

காடுசெடி மலைபாறு குளங்கூவல்
சோலைவயல் கடந்து மார்க்கத்
தூடுசெலும் பொழுதானை கரடிபுலி
யெண்கேன முடும்பு யாமா
வாடுபசு முதலாஞ்ச ராசரங்க
ளத்தனையு மகத்துள் சுத்தப்
பீடுயரும் பிரமமென வெணியிந்த்ர
சாலனைப்போற் பேசிச் சென்ருர். (எங)

உபநிடதப் பசுவைவதை செய்யவரு
மதவாதி யோரை யோட்டித்
தபமுதல நல்வழியி லப்பசுக்கள்
செலத்தடைகள் சாரா வண்ண
முபரிபெற வளர்ந்திடற்கோர் கோல்போலக்
கரதண்டை யுயர்த்திக் காவி
யுபலமதிற் றேயாடை யுடுத்தினராய்க்
கமண்டலத்தி னுதகந் தாங்கி (எச)

நல்லவர்க ளாச்சிரமம் புண்ணியமாட
சேத்திரங்க ணதிதீ ரங்க
ளெல்லமரு மலைக்குகைகள் யாவையினும்
நல்லாசா னடைய நாடி

யெல்லுவரி விழும்வேளை நருமதையாற்
றங்கரையி லிருக்கும் யோக
வல்லவராங் கோவிந்த யோகியரின்
றவவனத்தின் மாடு வந்தார். (எரு)

அங்குமர வரிமான்றோல் போர்த்தவராய்
முப்பொழுது மம்பி ளாடி
யங்கமுற நீறுத்தி ராக்கமணிந்
துபநிடத மாய்வோ ராகிச்
சங்கையறு தவத்தோர்க ளிருந்திடக்கண்
டெண்ணமது தக்க வாற்று
னிங்கமர லியலுமெனச் சங்கராதி
யானநிலை யிருந்தார் மன்னோ. (எசு)

வெற்புமுழை யகத்தாதி சேடனது
கலையுடைகோ விந்த யோகி
நிற்பரென வறிந்தவராய் விழித்திடனு
மிவ்விடத்தி னீநல் லாசா
னற்புதமாய்ப் பெறுவையென வசரீரி
சொலக்கேட்டே யவரு மந்தத்
தற்பரனுங் குருவமருஞ் சாலைவலஞ்
செய்தினிது சார்ந்திட் டாரே. (எஎ)

வேறு.

பணிமதி சூடிய பார்வதி பாகன்
றனிவடி வாகிய சங்கர யோகி
கனிவகை யாதிய கையடை கொண்டே
யினிதுகை கூப்பியே யேத்திட லானார். (எஅ)

கருட னுயர்த்திய கார்முகில் வண்ணன்
மருவுப டுக்கையா வாய்த்தவ போற்றி
பொருதுபு ரத்தினைக் காய்ந்தவன் பூணு
முரகமன் னுயுறு முத்தம போற்றி. (எசு)

சத்தமோ டோடதம் யோகமுஞ் சாற்றும்
வித்தக நூற்றலை வீரனே போற்றி
யித்தரை யாவையு மேந்திய ரத்னப்
பத்திகொண் மாமுடிப் பண்ணவ போற்றி. (௮௰)

யாவையு மாகும நந்தனே யையா
மூவித மாந்தொழின் மொய்ம்பொடு கொண்டு
மேவிய யோகனே மெய்ப்பொரு டேறப்
பாவிய னெய்தினேன் பற்றுனைக் கொண்டு. (௮௧)

ஐயனே நின்னடித் தஞ்சமே யானே
னுய்யவே செய்தரு ளுத்தம வென்னத்
துய்யராஞ் சங்கரர் தோத்திரஞ் சொல்லிக்
கையடை வைத்தவர் காலினில் வீழ்ந்தார். (௮௨)

சமாதியி லுற்றவா சாரிய ராண்டே
யுமாபதி யாகிய சங்கர ருற்ற
துமாதிய வெல்லவை யுள்ளுணர்ந் தேயின்
னுமாகிய சேதியுந் தேர்ந்தன ருள்ளே. (௮௩)

இருப்பிடம் விட்டெழுந் தேயவ ரந்த
விருப்பில வாயில டைந்திட வெல்லா
ருருப்புடல் காலொளி யவ்விடத் துற்ற
கருப்பிரு ளோட்டிடக் கண்டன ரம்மா. (௮௪)

வந்தவர் சங்கர மாமுனி நோக்கிச்
சிந்தையி லன்புடன் செப்புநீ யாரோ
வெந்தவூ ரிங்கிவ ணெய்திய தென்ன
வெந்தனை வேண்டிநீ யேத்தலென் னென்றார். (௮௫)

ஐயயான் பஞ்சமா பூதமு மல்லேன்
செய்யவை தங்குணஞ் சேர்ந்தவனல்லேன்
மெய்யொடுகூடிய வெம்பொறி யல்லேன்
அய்யவ நான்சிவோ கம்மெனச் சொற்றார். (௮௬)

## வேறு.

பால வுன்னுரை மறைமுடி புரைப்பொருள் பற்றுஞ்
சால நின்கருத் தானதோ சத்தியாத் துவிதச்
சீல மார்ந்திடு மிதயமாய்ச் செப்பிட லாகுங்
கோல மோசிவ வடிவுடன் கூடிய தாகும். (அஎ)

தோற்றம் மங்கல மாயத் தொல்லுல கெங்கு
மேற்ற மங்கலஞ் செய்திட வெண்ணியே யீசன்
போற்ற லாயிடு மிவ்வுருக் கொண்டுநற் போத
வூற்ற மாம்பலி விரும்பிய வொருவிருந் தாளி. (அஅ)

தன்னை யானுப சரித்திடப் புரிந்தநற் றவந்தா
னென்னை யோபெரும் பயனதை யெய்தினே னென்ன
வுன்னி நிட்டையி னுணர்ந்தன னுண்மையை நோக்கி
யின்னில் வேறியா னில்லையே நிகழ்த்தலென் னென்றார். (அகூ

என்ற போதிலும் வேதவி யாசனார் மகனாய்த்
துன்று மாசுக முனிவரின் சீடனாய்த் தோன்றி
யன்று நான்கொள கௌடபா தத்தவ ரருள்செய்
தொன்று தொட்டதாம் பிரமமா வித்தையைச் சொன்னார். ()

அன்ன வித்தையை யானுனக் கறைந்துனைச் சீட
னென்ன வேற்றிடு வேனென விசைத்திடக் கேட்ட
சன்னி யாசியுங் குரவரைப் பிரமவா சனத்திற்
பன்னு கீழ்த்திசை பார்த்துறப் பரிவுட னமர்த்தி. (கூக)

ஓங்கா ரத்தினை யுரித்துட னோதின ராகி
யாங்கா ரத்தினை யொழித்தநல் லகத்துடன் வடக்காய்ப்
பாங்கா யுற்றிருந் தன்புடன் குருமலர்ப் பாதந்
தேங்கால் பூக்கொடு பூசனை செய்தனர் சிறக்க. (கூஉ)

அக்கு ருக்களு மன்புடன் சங்கர ரணைத்துப்
பக்கம் வாவென வழைத்துடன் மடிமிசைப் பாலா
வொக்க வேயம ராயென விருத்தியே யொழுங்காய்த்
தக்க வாறளித் தார்துற வறத்தினைச் சால. (கூங)

# ஐந்தாமத்தியாயம்.

நான்கு மாமறை முடிப்பொரு ணைங்கையு நவின்று
வான்க ருப்பொரு ளொன்றிட வுத்திகள் வழங்கித்
தான்கு றிப்பொடு பிரணவப் பொருளினைச் சாற்றி
யூன்க ழித்திடு யோகமுந் தெளிவுற வுரைத்தார். (௯௪)

பிரம தேவரின் குருபரம் பரையினைப் பெட்பார்
விரத மாணவர்க் கொண்டுநீ விருத்திசெய் யென்ன
கரதலத்தமர் கனியெனத் தெளிவுறக் காட்டச்
சிரம மின்றியே சங்கரர் யாவையுந் தேர்ந்தார். (௯௫)

வந்த சங்கரர்க் கன்புடன் வழங்கின ராய்க்கோ
விந்த யோகியர் பிரணவப் பொருளினை விளம்பி
யந்த ரங்கமோ டிருவரு நிட்டையி லமர்ந்தா
னந்த முற்றனர் நாள்சில நலமுடன் கூடி. (௯௬)

வெளிமு கத்தவ ராயிட மெய்த்தவர் விரும்பிக்
களிமு கத்தசங் கரர்மிகப் பேரொளிக் கவினோ
டொளிமு கத்துட னுற்றிடக் கண்டுட னுரைத்தா
ரளிமு கத்திவ ரேபர மாமிச ராமால். (௯௭)

அங்கு நின்றுகோ விந்தரு மெழுந்துட னகன்று
தங்கு மாமுழைக் கேகினர் தம்முடை யோக
வங்க முற்றனர் சத்தியப் பொருளினை யறிந்து
சங்க ரச்சிறு மாமுனி சார்ந்தனர் ரேவா. (௯௮)

பேசுமந்நதிக் கரையினிற் பெருமையாய்ச் சாதுர்
மாசி யத்தினை முடிக்ககம் மாமுனி யெண்ணப்
பூசு ரக்குழாம் பூசனை புரிந்தனர் துறவித்
தேசொ டுற்றனர் கேட்டலு நினைத்தலுஞ் செய்தே. (௯௯)

ஒருநாள் விஞ்சிய மாமழை பெய்திட வோத
மருநார் சோலைகண் மரநிலை யடவிகள் சேரி
பெரியார் சாலைகள் துறவிகண் மடங்களும் பெய்ரப்
புரிமா வேள்வியின் பசுக்களும் பொன்றிட வந்த. (௱)

ஆற்றிற் பேரொலி மிக்குற வலையொடு பெருகி
யேற்றி ரண்டுகு ரோசமா மெல்லையிற் பூமி
யூற்று நீரிடை மூழ்கிய தந்தண ரோல
மாற்ற வேசெயச் சங்கர ரறிந்தன ராண்டே. (௱௧)

குரவர் கீட்டையி லுற்றன ராதலிற் குறுகிப்
பரவி யோதுதன் முறையல வென்றெணிப் பரமன்
கரத லத்துள கமண்டலத் தினைமிகக் கருத்தாய்
விரத மோடபி மந்திரித் தாயிடை மெல்ல. (௱௨)

வைத்தவக்கணம் வெள்ளநீர் யாவையும் வற்றி
யத்தி ருக்கமண் டலமதி லடங்கிய தம்மா
தத்த கற்றிய மாமுனி தன்னடி போற்றி
மெத்த வாழ்த்தினர் குறுமுனி யிவரென விளம்பி. (௱௩)

இன்னுமோர்தின நருமதை யேகிநீ ராடித்
தன்னி ருப்பிடஞ் சார்ந்திடு வேளைகோ விந்தர்
சென்னி யாற்றொணுக் கடுவெயிற் றினகரன் வீசச்
சன்னி யாசியுந் தடைசெயத் தானைவிட் டெறிந்தார். (௱௪)

வானி லுற்றது குடையென மறைத்தது வெயிலை
யான விச்செய லறிந்தன ரன்பினைப் புகழ்ந்தார்
நானி லத்தவர் புகழ்ந்தவி யாதனூர் நவின்றேன்
முனி வற்குநே ரில்லெனச் சாற்றினர் குருவும். (௱௫)

சாதுர் மாசிய விரதமு முடிந்தபின் றவரா
மாதி சேடனி னமிசகோ விந்தரு ளவிற்
காத லோடுசங் கரர்தனைக் கடவுளின் றன்மை
யோத வாய்ந்தவ ரென்றெணி யழைத்திவை யுரைப்பார். ()

## வேறு.

முன்பியான் வதரிக மொய்த்த கானிடை
யன்புட னத்திரி யாற்றும் வேள்வியி
லின்புற முனிவர ரெய்து காலையி
லென்பெருங் குரவரை யேத்தச் சென்றனன். (௱௭)

வேள்வியிற் பலருடன் வியாதர் மேயினர்
கேள்வியில் வல்லவ களைத்தும் பிரமமாத்
தாழ்வறுஞ் சூத்திரந் தனக்குப் பாடியம்
நீள்வலி பெருகிட நிகழ்த்து வீரெனில். (௱அ)

புறமத வாதியர் புன்மை நாவலி
யறவொரு வழியென வாகு மென்னயான்
றிறமுடன் வேண்டினேன் சிறிது போழ்துநல்
லறவடி வாயின ராய்ந்து சொற்றனர். (௱கூ)

வெள்ளியம் பொருப்பிடை மேலை போயினேன்
விள்ளரு மச்செயன் மேரு வில்லுடை
வள்ளலி னருளல வாய்க்கா தாதலின்
கொள்ளரு மென்றனிக் கூறு கொண்டொரு (௱ய)

மைந்தனும் பூமியில் வந்து தோன்றுவ
னந்தநற் றுறவியா லாகு மென்றரன்
சிந்தையிற் களிப்புடன் செப்ப வவ்விதம்
வந்திடுங் காலமும் யாதோ வாழ்கெதன. (ககக)

வினவிடு வேலையில் விமல ரூருமே
புனதிடம் வந்தெவ னுபதே சத்தினைக்
கனமுடன் கொண்டுதன் கமண்ட லத்தினில்
வனமதை யடங்குமா செய்ய வல்லனோ. (ககஉ)

அவனிதை யாற்றிடு வானென் றோதினர்
தவநிலை யுடையநின் றன்னிற் கண்டனன்
சிவனிகர் வியாசரைச் சேர்ந்து தக்கன
நவமுடன் செய்யென நவின்ற னுப்பினர். (ககங)

குருபர னவ்விதங் கூறக் கேட்டுடன்
றிருவடித் தாமரை சென்னி சேர்த்தவ
ரருகினி னின்றுமே யகலச் சங்கரர்
மருகின ராயினர் வாடிப் போந்தனர். (ககச)

மனத்திடைக் குரவரை வந்தித் தேபுடை
யினத்தவச் சிடரு மியைந்து சூழ்தர
நினைத்தவ ரெண்ணுமா நிகழுங் காசிமா
வனத்தலஞ் சங்கரர் வந்து சார்ந்தனர். (கக௫)

ஆயிடை வடமுக மாகச் சென்றிடுந்
தூயதாங் கங்கையை நோக்கித் தோத்திர
மாயகங் காட்டக மறைந்து பின்னவர்
போயினர் மூன்றரைக் கோடிப் புண்ணிய. (ககசு)

பன்னருந் தீர்த்தமும் பரந்த தாமணி
கன்னிகை யென்றதி லுச்சிக் காலநீர்
தன்னிலே படிந்துடன் றலஞ்செய் யாத்திரை
யுன்னிய வாமுடித் துவந்திட் டாரரோ. (ககஎ)

துண்டிரா சனனெனுந் தோன்மு கத்தவ
ரெண்டரும் படைகளை யேந்து வைரவர்
புண்டரீ கக்கணி யன்ன பூரணிக்
கண்டுடன் றோத்திரங் கழற லாயினர். (ககஅ)

பங்கயத் தயனொடு பற்ப நாபனும்
புங்கரு நாகரும் போற்றி வார்ந்திடும்
வெங்கதிர் மேலொளிர் விஸ்வ நாதரை
யங்கவர் தரிசனை யன்பாச் செய்தனர். (ககக)

பனுவலில் வல்லராம் பட்டாசாரியர்
வினவிய தற்கெலா விடைக டந்தவர்
கனமிகு விற்பனர் சூழக் காசியிற்
றினகரன் போலவிர் தேசோ டுற்றனர். (கஉ0)

ஐந்தாமத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள். உஅஎ.

# ஆருமத்தியாயம்.

மின்னிடுஞ் செய்ய வெயின்மணிச் சென்னி விறலாதிப்
பன்னகன் கூறும் பாதரைப் பரமன் பரமாசா
னென்னவே கொண்ட விச்செயல் சொன்னே மெழிற்காசித்
தொன்னகர் தன்னிற் சங்கரர் லீலையைச் சொலல்செய்வாம்.(க)

சங்கர முனிவர் காசியம் பதியிற் சனியாசத்
துங்கமு மறைந்து வேண்டினர்க் களித்தத் துவிதத்தி
னங்கமா முடிபை யகல்பெறச் செய்தே யமர்நாளோர்
கங்குலில் விந்து மாதவர் வந்தார் களிஞேடு. (உ)

சாற்றுமெங் கூறுய்ச் சமைந்தொரு மாணி தனியாகப்
போற்றியே நின்றன் னடைக்கல மாகப் புகுந்தேநின்
பாற்றுற வேற்றுச் சீடஞ மென்னப் பகர்ந்தேக
மாற்றமு முனிவர் மாணவர்க் குரைத்தார் வகையாக. (ங)

சீடர்கள் சூழச் சிவ முனி யாருந் திருநீரி
லரடிட வேண்டிக் கங்கையங் கரையை யடைவேலைப்
பீடமர் தெற்கிற் பிறந்தவ ஞன பெருமாணி
நீடிய.பெயரோ சனந்தன னல்ல நெறிசார்ந்தான். (ச)

நல்லவ ருறைய கோபல நகர நரசிங்கர்
சொல்லிய படியே தூய்மைசே ராசான் றுருவிப்போய்க்
கல்லதர் வழியுங் காடுமே கடந்து கடையாகச்
செல்லுத லாகிச் சேர்ந்தனன் வியாசச் சீர்காசி. (ரு)

சனந்தன னடைந்து சங்கர முனியின் றனுத் தேசை
யனந்தரங் கண்டே யடியறு மரம்போ லகல்பாரி
லந்தமா முறையே வந்தனம் புரிந்தா னதனுள்ளே
வனந்தரு முடிவில் வேசனைப் பார்த்தான் வணங்கிட்டான்.(

இத்திரு வுருவே யென்றனை யாளு மியல்பாமென்
றுத்தியி லறிந்து சங்கர வாசா னுறைசாலைப்
பத்தியா யடைந்து பணிந்தனன் பரவிப் பரிவாக
முத்தியின் மூல முனிவரு மாண்டார் முறையாக (எ)

வந்தவம் மாணி மாமுனி தன்னின் மலர்க்கைபாற்
சந்ததந் துறவு தந்திடப் பெற்றுத் தவவாய்ச்ச
ரந்தண சாரி நாமமுந் தாங்கி நம்மாசான்
செந்திரு வடியைத் தினம்பணிந் தேதத்தித் திகழ்ந்திட்டான். ()

உளத்தினி லன்பும் யோகமு முற்றி யுயர்வாக
வளத்தகங் கேட்டுஞ் சிந்தனை செய்தும் வழிநின்றான்
களத்தமர் கறையான் கலையொடு வந்த கருணேசன
வளைத்தருள் சீடர் வருக்கமிற் சிறந்து வலவானான். (கூ)

இவனிடஞ் சங்கு சக்கர ரேகை யியைந்தார்ந்த
புவனமே முண்ட புயல்வண னமிசம் பொருந்திநறே
கவினொடு கூடிக் கலைமதி யென்னக் கடல்சூழு
மவனியி லெங்கும் புகழ்மிகப் பெருக வமர்ந்தானே. (ய)

இன்றளிர் கற்ப விருநிழல் விட்டே யிமையோர்கள்
கொன்றையம் வேணிக் கடவுளின் சேவை கொளுமாறு
துன்றினர் வந்து தொன்மறை யோராய்த் துதிசெய்து
மொன்றிய மனத்தோ டுறுபணி புரிந்து முவந்திட்டார். (கக)

## வேறு.

சங்கர முனிவர் காசித் தனிப்பதி யொன்பாற் றிங்க
டங்கின ராங்கே யுள்ள சாங்கியர் தருக்க மீமாஞ்
சங்கலை யுணர்ந்தோர் கல்விச் செருக்கது தாழ்ந்த தன்றி
யங்குள துவைதர் பல்லோ ரத்துவி தத்தைக் கொண்டார். (கஉ)

குருமணிச் சேடன் கூறுங் கோவிந்த பகவற் பாதர்
தருமதிச் சென்னி லிங்கஞ் சக்கரங் கோள்கள் யந்த்ர
மரதனக் கருப்ப ஞக வைங்கர னரசிம் மத்தி
யுருவமர்ந் துள்ள சாளிக் கிராமமு முவந்தே யந்த (யங)

சனந்தனா சாரி யாற்குச் சங்கர னளித்தா னன்னான்
றினந்தவ றாதே யந்தத் தேவரின் பூசை செய்து
கனிந்துப சார தர்ப்ப ணத்தினைக் கருல வாற்றி
நினைந்துப நிடதப் பூசா விதியினை நிகழ்த்தி வந்தான் (௰௪)

அந்தணர்க் கமுத ளித்த லாகிய கருமமாற்றி
முந்தைய தாம்பரு சாப தனவழி மொழிந்தி யார்க்குஞ்
சிந்தைகொள் தெய்வ மாட்டுத் தீவர வன்புண் டாக்கி
விந்தைகள் காட்டிச் சேர்த்தான் மாந்தரை விரைவிற் கூட்டி. (௰௫)

இன்னுமோர் தினத்திற் றூய வெங்குரு சீட ரோடு
பன்னருங் கங்கை நீரிற் படிந்தனுட் டான முற்றிப்
பின்னவர் திரும்பு மார்க்கம் பெரியதோர் தூலப் பள்ளன்
சென்னியோர் குடத்திற் கள்ளுஞ் சிறிய சுணங்கன் றானும். (௰௬)

உடனவன் கொண்டு பாங்க ருறுதலுங் குரவர் நோக்கி
நடநட வென்னுங் கூறுச் சமிக்கினை நன்கு காட்டக்
கடைவரு ணத்தோ னந்தக் கடவுளைச் செல்ல வொண்ணாத்
தடைசெய வேண்டி யாங்கு நின்றுடன் சாற்ற லுற்றான். (௰௭)

அந்தணர் தலைவ வெந்த வாதரங் கொண்டி யாது
சிந்தையி லெண்ணி யாரைச் சேர்ந்திடா தகலச் சொன்னாய்
வெந்திடு மன்ன கோச மாமென விளம்புங் கூட்டி
னந்தவா றாய வாக்கை யகன்றிட வறைந்தாய் போலும். (௰௮)

அல்லதோ ரறிவி னின்று மற்றொரு வறிவைத் தூரச்
செல்லுமா றிசைத்தாய் போலுந் திரையுறு வாரி போல
நல்லிய லறிவி னின்ப நவையற யார்க்கும் வாய்க்கப்
புல்லவன் பள்ள னென்னும் பூசுர னென்று முண்டோ. (௰௯)

தேகத்தின் றடையா லான்மா வேறெனச் செப்பு வாயேன்
மாகைத்தின் குடத்தி னுள்ளு மண்குடத் துள்ளுங் காணு
நாகத்திற் பேத முண்டோ வர்நதி நன்னீ ருள்ளு
மேகத்த காத பள்ள ரில்லநீ ருள்ளுந் தோன்றும். (௨௰)

வெங்கதிர் விம்பந் தன்னில் வேற்றுமை யென்னே விம்ப
மங்கவை யளவில் லேனும் விம்பத்திற் கனிய மாமோ
விங்கிது செயற்கை யன்றி யியற்கையி லல்ல வன்றே
பங்கமற் றுறங்குங் காலைப் பிரபஞ்சப்பார்வை யுண்டோ. (உக)

மருளினாற் பழுதைப் பாம்பாய் மதித்ததின் மயக்க முண்டாந்
தெருளுடன் றெரிந்த காலை சிந்தையிற் பிராந்தி யுண்டோ
விருளறு மனத்த ஞானி லிவ்வித மெண்ணுவாயோ
வுருவினால் ஞானி போலுற் றுலகினை யெய்க்க லாமோ. (உஉ)

போற்றரும் பரம னீசப் பொலிவுடன் வந்து நின்று
சாற்றிய வினைத்துங் கேட்ட சங்கர ருள்ளத் துள்ளே
யாற்றவு மனுப வித்த வத்விதா நந்த வெள்ள
மாற்றது ததும்பி னற்போ லுரைத்திட லாயினாரே. (உரு)

இடம்படு முலகி னுள்ள வெறும்பாதிப் பிரம னீறு
முடம்புக டோறு மோதப் புரோதமா மிழைக ளொப்ப
வுடன்பட நிரம்பு போத மாம்பொரு ளொன்றே யுண்மை
திடம்பட வதுவில் லாக்காற் சிந்தையின் மயக்க முண்டாம். (உச)

மெய்யறி வற்றுத் தோன்றும் வேற்றுமை மயக்க மெல்லாம்
பொய்யுடை யனவே யாகுங் கனவினைப் போலு மென்று
துய்யதோர் குருவை யண்டி யனுபவத் துலக்க முள்ளான்
செய்யவென் குருவா மன்னன் றிப்புலை மற்று ரேனும். (உரு)

இன்னவா மனிடா பஞ்ச கத்தினை யியற்ற லானா
முன்னிலார் நீச ரூப மறைந்தது முடியிற் கீற்று
நன்னிலா வொளியு மூன்று நயனமும் விளக்க வேற்றிற்
பொன்னுருப் பொலிவி னோடும் பொலிந்தனர் விஸ்வ நாதர். (உசு)

மதுக்குட மியற்கைப் போத வின்பமாம் வாரி யான
நதிக்குயர் கங்கையாகப் பரந்தது நான்கு நாயுந்
துதிக்கையோ டுற்ற நான்கு சுருதியின் மூர்த்தியாக
விதைக்கணூன் முனிவர் நோக்கி யேத்தினர் கண்ணீர் மல்க (உஎ)

காதலாற் கசிந்து மல்கும் கண்ணினீர் துடைத்துப் பின்னு
மாதவர் சிவோக மென்ற மகுடமார் செய்யு ளானு
மேதகு ஞான மத்து விதஞ்சிவந் துக்க மில்லை
பாதிக மில்லை சங்க மிலையெனும் டாக்க ளானும். (௨௮)

பரசிவாத் துமபூர் ணனு பவத்துதி யென்ற தானு
மருவிய தோத்தி ரங்கள் வழங்கியே வாழ்த்தி நின்றார்
கருணையங் கடவுளான காசியார் விஸ்வ நாதர்
கரதலத் தபயங் காட்டிக் கருணைநீ ராட்டி னாரே. (௨௯)

சங்கர முனிவர் தன்னைத் தானுவும் விடையிற் றன்னின்
பங்கினி லமர்த்திக் காதிற் பழமறை முடியை யோதிச்
செங்கரந் தலைமேல் வைத்துச் சீர்பெறு நீயே நானென்
றங்கவ ரோதி மேலு மாணைகள் பலவுந் தந்தார். (௩௰)

எம்மருள் வலியால்வேத முடியினுக் கேற்ற மாகச்
செம்மையாய்ப் பொருளு ரைத்துப் பிரமசூத் திரத்தி லுள்ள
மெய்ம்மையாங் கருத்தைச் சொல்ல வியாசரை யடைந்து கேட்டுப்
பொய்ம்மையார் வாதி யோரின் வலியினைப் போக்கடித்து. (௩௧)

வீட்டினை விரும்பி னோரை விளக்கமா யுணர்த்தி ஞானப்
பாட்டையைச் சீடர்க் கூட்டிப் பாரினுக் களித்துப் பின்ன
மீட்டெமை யடைவா யென்ன விளம்பினர் விண்ணோர் கூடி
தோட்டலர் பொழிந்தார் காசித் தொல்பதி நிரம்ப வம்மா. (௩௨)

விண்ணிடம் விடையி லேறி விளங்கிய விமலர் தோற்றம்
புண்ணியர் மனத்தி லோகை பூத்துமெய்ப் புளகங் கொள்ளப்
பண்ணிய தல்லா தார்க்குப் பயமொடுற் பாத மாக
மண்ணவர் வியக்க வீசன் றிருவுரு மறைந்திட் டாரே. (௩௩)

இந்தவற் புதத்தைக் கண்ட சனந்தன னேனை யோர்க்கு
வந்தது நனவோ வன்றி வாய்த்ததோர் கனவோ வென்னப்
புந்தியி லிதுதா னென்று புகலொணு வின்பா வத்தை
விந்தையாய் வாய்க்க வன்னார் வியந்தவ ராகி நின்றார். (௩௪)

நம்பனின் பரிசத் தாலே சங்கரர் ஞானச்சோதி
விம்பமாய் விளங்க லானார் மேவினார் யாரும் காசி
வம்பலர் கொன்றை வேணி மாசங்கர விஸ்வநாதர்க்
கும்பிடவேண்டிப் போனார் கொடிமுடிக் கோயி லுள்ளே

சந்நிதி யடைந்து கண்ணுற் றரிசனஞ் செய்யுங்காலை
மன்னிய விலிங்க நின்று வளர்சிவஞ் சத்யஞ் சத்ய
முன்னுமத் துவித மென்னு முரையிரண் டுற்றார் கேட்க
வின்னலைத் தவிர்க்கு மும்ப ரமுதென வெழுந்த வன்றே. (௫௬)

கூடிய சிட ரோடு குருமுனி காசிவிட்டு
நீடிய வழிக டந்து குளிர்வெயி லினைத்த லின்றி
யேடெனு மடிக ளேவ வேகுவா ருடனே யேகி
நாடின ரிமையச்சார றன்பல கழிந்த பின்னர். (௫௭)

தேடரும் பெருமை வாய்ந்த திருமறை நான்கை யாண்டும்
பாடிய முனிவர் தங்கும் பதரிக வனத்தை நண்ணிப்
பீடமர் வேதச் சென்னிப் பெரும்பொருள் பெரியார் தம்பின்
மாடமர்ந் தினிது கேட்டு மனத்தெளித் தெளிவு கொண்டார்.

சனந்தனன் முதலா னோரை சாற்றுநூற் றிரளை விட்டுத்
தனந்தனி யாகச் சென்றுத் தண்ணிழ லிலங்கைத் தாரு
வனந்தனில் வியாசர்க் காண மனம்விழைந் தடவி தாண்டிக்
கனந்தவழ் சிகர வெற்புக் கந்தரத் துள்ளே போனார். (௫௯)

விழைந்தவர் தேடி யாங்கு வியாசரைக் காணா ராகி
நுழைந்தனர் நரனு நாரா யணனுமே நோற்குஞ் செய்ய
பழந்தரும் பதரி தங்கும் பரமரைக் கண்டு நெஞ்சங்
குழைந்தவ ரடிகள் போற்றிக் கூப்பிய கரத்தோ டுற்றார். (௬௰)

எய்திய முனிவர் தம்மை யுபசரித் திருத்திப் பின்னர்
செய்தனர் தக்க வற்றைச் சேர்ந்ததி யாது பற்றி
யையநீ யுரையா யென்ன வருளுட னவர்கள் கேட்க
மையமர் கண்ட னம்ச மாமுனி சாற்ற லுற்றார். (௬௧)

# ஆறுபத்தியாயம்.

பேசிய வியாசர் சொன்ன பிரமசூத் திரத்திற் கன்னார்
மாசிலாக் கருத்தை முற்றும் வாய்ப்படக் கேட்டி யானுங்
காசிலாப் பாடி யத்தைக் கவனமாய் வகுத்தே யிந்தக்
காசினி யோர்க்க ளித்த லென்னுடைக் கருத்தே யாகும். (௪௨)

நாரணன் கேட்டு மைந்தா நான்குநீ யறிந்தா னன்றோ
வாரண வியாசர் கொள்கை யாற்றநின் கருத்தே யாகு
மோரணி நானு நீயு முயர்ந்ததோர் வாசன் றானுஞ்
சீரணி வியாச னென்னு நால்வருஞ் செப்பி லொன்றே. (௪௩)

தம்முளக் கருத்து தம்மால் வெளிவரற் றகாத தென்றே
யம்முனி யொளிந்தா ரானா ராதலி னீயே யந்த
மும்மைசால் பாடி யத்தை மொழிந்திடி னதுவே யன்னான்
மெய்ம்மைசேர் கருத்தா மென்ன விளம்பியே மேலுஞ் சொல்வான்.

காசிவா ழீசன் றந்த கட்டளை யேற்றா யன்றோ
நீசலி யாது செய்யி னிகரதின் மற்றொன் றில்லை
காசினி யோரில் யாருங் கழறுதற் காற்றார் யானு
மாசிக டந்தே யன்பாய் வியாசரு மதனைக் கொள்வார். (௪௫)

துறவறத் ததனி லோதும் பிரணவத் துதியொன் றனே
திறமுறச் சைவ மாகா வணைமரி சிவனே யென்னுங்
கறுவறப் பேத மின்றிக் கவிந்திடுஞ் சீட ராற்றின
மறுவினா ரணனை போதச் செய்யென வழங்கி னானே. (௪௬)

இன்னன பலவு மோதி யியற்றிய தவத்தோர் பாகஞ்
சொன்னல முனிவர்க் கீந்து விடுத்தனன் றுறவி மீண்டுங்
கன்னியர் மண்பொன் னாசை கழித்தமா முனிவர் கூட்ட
முன்னடந் தழைக்கப் போனார் முண்டகத் தாள்க ளேவ. (௪௭)

பிரமசூத் திரமே யாதிப் பெருமைசேர் பலநூற் கெல்லாம்
விரிபொருள் பாடி யத்தை விளக்கியு மான்ம போத
மருவிய நூல்கள் செய்து மாணவர்க் கவைக ளெல்லாந்
தெரிவுற வளித்தும் வந்தார் சிறுவராந் துறவி யாரே. (௪௮)

முக்கணன் கூறாய் வந்த முனிவரர் முன்னான் காண்டி
லெக்கலை களுந்தேர் தன்மைக் கேற்பநற் பாடி யத்தைச்
சிக்கற வுணர்த்திப் பல்லோர் சீடர்கள் சூழக் கோடி
திக்கொளி கிரணம் வீசு மிரவிபோல் விளங்கி னாரே. (௪௯)

சார்ந்திடுஞ் சீடர் தம்மிற் சனந்தனன் சிறந்தோ னானு
ணோர்ந்திதை யாசா னன்னாற் கன்புடை யோரா யானு
ரார்ந்தமற் றோர்க ளேக்கி யகத்தினி லழுக்கா றுற்றார்
தேர்ந்தன ரிக்க ருத்தை யாவையுந் தெரிந்த பெம்மான். (௫௰)

குருமுனி யழுக்கா றோட்டி யறிவினைக் கொளுத்த வேண்டிச்
சுரநதி யக்க ரைக்குத் தும்பையே யாதி பூக்க
ளரிதரச் சென்ற செங்க ணரிசனந் தனனை யந்தக்
கரைதனி லிருந்தே யீண்டு வாவெனக் கழறி னாரே. (௫௧)

பிறப்பெனுங் கடலைத் தாண்டச் செயுங்குரு பேரன் பானே
யறப்பெரும் வடிவா மந்த வாற்றினி லிறங்கிப் பாரி
லுறப்பெருங் காலை யூன்றி நடப்பதை யொப்பச் செய்ய
நிறப்பெருந் தாளை யூன்றி நெடியவ னடக்க லானான். (௫௨)

கங்கையம் மாது மன்னான் காலடி யொவ்வொன் றிற்கும்
பங்கய மொன்று தந்தாள் பாதுகை யளித்தாற் போலு
மங்கவை மீது பாதம் வைத்தவ னாசான் முன்னர்
பங்கமில் லாது போனான் பார்த்ததி சயித்தார் மற்றோர். (௫௩)

இத்தகை யழுத்த பத்தி யியைந்தவ னிடத்தி யாங்கள்
புத்தியின் குறைவி னாலே பொறாமையு மடைந்தோ மென்ன
வத்தனை பேரு நன்று யறிந்துட னடங்கி நின்றார்
வைத்தனர் பதும பாத னெனும்பெயர் மகிழ்ந்தே யாசான். (௫௪)

சங்கரர் பற்ப பாதச் சனந்தன ராதி யோடு
மங்கிருந் தேகிக் காசி யம்பதி யடைந்த வேலை
யெங்கிலுஞ் சமய வாத ரெண்ணரும் பேர்க ளாகித்
தங்களின் மதத்தைச் சாற்றி நாடெலாந் தழைக்கச்செய்தார். (௫௫)

பலவிதச் சபதஞ் செய்து பங்கயப் பாத ஞதி
நிலவிய சீடர் முன்னர் வாதுக ணிகழ்த்தி யீற்றிற்
பலமில ராகித் தோற்றுப் பகருமத் துவிதத் துண்மை
நலமுடைத் தென்னத் தேர்ந்து நம்பியே குரோதம்விட்டார். (௫௬)

விட்டவ ருபதே சத்தை விமலசங் கரர்பாற் பெற்று
சிட்டர் களாகி யந்தப் பாடியந் தேர்ந்தே யாசான்
கட்டளை யாறறி னின்று கடல்புடை யுடுத்த பாரின்
மட்டறுங் களிப்புண் டாக்கி வாழ்ந்தன ரினிது மன்னோ. (௫௭)

வேறு.

சீடருடன் சங்கரருஞ் சோம நாதருஞ்
சீர்துவரை வடமதுரை கோகு லங்கள்
மாடமலி நகரங்கள் போந்து விண்டு
வர்த்தனர்க ளிம்பார்க்கர் முதலா மாலைப்
பாடியமா பாகவதர் நந்திச் சாமி
பரவுமகேச் சுரதீர்த்தர் முதலாஞ் சைவங்
கோடலுறும் பாகவதர் சிசு வாமிக்
கூர்சத்திப் பாகவதர் முதலா னோரும். (௫௮)

அபரார்க்கர் முதலான வெல்லோ னேத்து
மன்பர்களுங் கபிலேச ராதி யான
விபமுகத்தான் பத்தர்களும் வைர வன்றன்
னிசைபாடும் பத்தர்களு மெதிர்க்க வாதி.
லபசயத்தை யடைவித்துச் சுருதி யுத்தி
யனுபவத்து முபக்கிரம முபசங் காரம்
விபரித்துந் தாபித்த வத்வை தத்தின்
விழுமையுரைத் தன்னாரை யொப்பச் செய்தார். (௫௯)

பேதமுறும் வாதத்தை யொழித்தே யன்னார்
பேணிவருங் கடவுளர்பா லழுத்த மான
காதலுறப் போதித்துச் சீட ராக்கிக்
கடைப்பிடித்த மதந்தம்மை யத்வை தத்திற்

கேதளவு முரணில்லா தமைத்துப் பின்ன
    ரெதிரான பேதவாதர் தமையும் வென்று
மேதுவினாற் றருக்கித்த தருக்கர் தம்மை
    யெங்குரவர் தண்டித்தார் நியாயத் தோடும். (௬௰)

பயனில்லா வினாக்களினால் வாது செய்த
    பரமதனை யாகிகளை யுடன்பாட் டாலு
நயமுற்ற மறுப்பாலும் விடைக டந்து
    நவிற்கணாத கௌதமமா மதத்தைப் போக்கி
நியமமுறும் பிரமதர்க்க யுத்தி யாலே
    நிரீச சாங்கியனைச் சுருதி யுத்தி
யியலுமனா பவங்களுக்கு விரோதஞ் செப்பு
    மெதிராஞ்சே சுரசாங்கி யோனை வென்றார். (௬௧)

வென்றவருக் கத்துவிதத் தன்மை கூறி
    விளம்பரிய களிப்பெய்தச் செய்து பின்ன
ரன்றயிரகைக் கடவுளின்றன் னமிச மாக
    வைதரித்த பட்டரினால் வெல்லப் பட்டுப்
பொன்றியபின் மிக்கிருந்த நாலைக் கொண்டு
    புத்தர்சிலர் வாதுசெய வந்தார் தம்மை
நன்றுத்தி சுலோகசட்ட சதிநா லொன்றை
    நவின்றுடனே வென்றுசான் காசி சார்ந்தார். (௬௨)

அப்பதியி லறுநான்கா யிரப்பேர் பாடி
    யத்தைமிகக் கருத்துடனே யோத வந்தா
ரொப்புடனே சங்கரருஞ் சிலர்க்குத் தாமே
    யோதிமற்றப் பேர்களுக்குச் சீடர் தம்மைச்
செப்பிடவே யாணையிட்டு வசிக்குங் காலை
    சேர்ந்தார்கள் பாசுபத வாதி யோர்க
ளிப்புவிக்குப் பிரிவற்ற நிமித்த வாதி
    யேதுவதோ வல்லாது நிமித்த வேது. (௬௩)

மாத்திரமோ பிரிவுடைய முதலா மேதோ
    வழங்கியதோர் பிரமமெது வாழ்த்து மென்னச்
சூத்திரங்கள் பலவுரைத்தே யவர்கள் கேட்கத்
    துறவியர்வி வரித்தோபா தான மென்னச்

## ஏழாமத்தியாயம்.

சாத்திரங்க ளாதாரங் காட்டி யன்னோர்
தமைச்சுத்த சிவாத்துவித ராக்கிப் பின்ன
ரேத்தரிய வாகமத்தின் கருத்தையாரு
மெளிதாய விளக்கியருள் செய்திட் டாரே.

வேதாந்தப் பாற்கடலின் மதங்களான
விளைமூலி கையையிட்டு ஞாய வெற்பு
காதாந்த முறநாட்டிக் கயிறு மென்னக்
கழறுபிர மாணத்தைப் பிணைத்துச் செய்யும்
வாதார்த்த வாதிபிற வாதி யோராம்
வானவருந் தானவருங் கடைய வாலத்
தீதாந்த விர்த்தமுதா மத்வை தத்தைச்
சீரியருக் கெங்குருசங் கரர்தந் தாரே.

ஆறுமத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௬௨.

## ஏழாமத்தியாயம்

வேறு.

வாது பற்பல செய்திடும் வாதரை
யேது காட்டியே யெங்குரு வென்றதை
யோதி ஜைமினி யோங்குவி யாதரை
நீத மோடடை நேர்மைநி கழ்த்துவாம்.

காசி யம்பதிக் கங்கைக் கரையினி
லீச னம்சரு மென்றசா ரீரக
மாசில் லாவுரை மாணவர்க் கோதிட
வாசை யோடவ ரவ்வழு துண்டனர்

உச்சி வேளைய டைந்திட வுற்றவ
ரச்செ யற்றனை விட்டகன் றயிட
விச்சை யுற்றொரு வேதிய ராயிடை
நச்ச ராவணி நம்பனு வந்தனர். (௩)

ஆங்கு வந்தவ ராருநீ யின்னவர்க்
கீங்கு செய்வது மென்னெனக் கேட்டிடத்
தாங்கு தாமரை தாளச்ச னந்தனன்
பாங்கு நின்றுடன் பார்ப்பனர்க் கோதுவான் (௪)

இந்த வுத்தம ரெங்குரு மாமறை
யந்த மாம்பொரு ளாய்ந்தவர் பாடியந்
தந்த வித்தகர் சாற்றுவி யாதரின்
சந்த சூத்திரப் பாடியஞ் சாற்றினர். (௫)

அன்ன வாறுநீ பாடிய மாய்ந்தவ
னென்னின் சூத்திர மொன்றினுக் கேபொரு
ளுன்னு ளாக்குறிப் பொன்றவு ரைத்திடா
யென்ன வோதின ரெய்துவி ருத்தரே. (௬)

பாடி யஞ்செயப் பக்குவ னல்லன்யா
னாடி வந்துநீர் நல்கெனக் கேட்டதாற்
கூடு மத்துணை கூறுவல் வேண்டுவ
நேடு மென்னநி கழ்த்தினர் நின்மலர். (௭)

பிரம சூத்திரம் பேசுத தந்தர
பிரதி பத்தௌவென் பெட்புறும் வாக்கியப்
பொருளைச் சொல்லெனப் பூசுரர் கேட்கவுந்
தெருளு மாறதைச் சங்கரர் செப்புவார். (௮)

ஆக்கை மற்றதி லாத்துமா புக்குழி
சூக்கு மத்துடல் பூதங்கள் சூழ்தரக்
காக்க லாமெனக் கௌதமச் சைமினி
வாக்கி யத்துள தாமென வாழ்த்தினர் (௯)

# ஏழாமத்தியாயம்.

பிற்றை வேதியர் பேசினர் நூற்றெனுஞ்
சுற்று வாய்ந்தவி னாக்களைச் சொன்னவை
முற்று மாய்ந்துடன் முக்கணன் கூறவர்
கற்ற[illegible]வாவிடை காணவி சைத்தனர். (௧௦)

இரண்டு பேர்களு மெண்டின மிவ்வித
முரண்டு வாதுற மொய்த்தவர் யாவரு
மிருண்ட நெஞ்சொடி யாதுமறிந்திலர்
தெருண்ட றிந்தனன் செம்மலர்ப் பாதனே (௧௧)

இந்த வாறிவர் வாதிடி லெந்தகா
ளந்த மாமிந்த வந்தண ரார்கொலாஞ்
சிந்தை யிற்றெளி வில்லவர் சேர்ந்தர
விந்த பாதனை வேண்டிவி னாயினர். (௧௨)

மனக்கண் ணோக்கினேன் மாலரா னென்னவே
தனக்கு ளேயறிந் தன்னவர் தம்முளம்
நினைக்க லாயிடு நேர்மைய ரல்லரா
மெனக்கு றிப்பதை யெண்ணியே சாற்றுவான். (௧௩)

ஐய கேட்டிடு மாண்டவர் சங்கரர்
செய்ய வேதியர் சிதர நாரணன்
மெய்யொ ழித்துவி யாதரா மேவின
னைய மென்னம னத்திடை யன்பரே. (௧௪)

அண்ணல் வாய்ந்தரு ளாண்டவர் வாதினைப்
பண்ணுங் காலையான் பார்ப்பனீ ரென்செய்வே
னண்ணி யேசொல னன்றல வென்றிட
யுண்ணி னைப்பதை யுற்றனர் சங்கரர். (௧௫)

கொழுந்து ஞானமுள் கூறிடச் சங்கர
ரெழுந்து மெய்த்தவ வண்ணலை யேத்தியே
விழுந்து தண்டஞ்செய் தேகளி வெள்ளத்தி
லழுந்து வாரென வாயின ரன்றரோ. (௧௬)

MAHAMAHOPADHYAYA SWAMINATHA IYER

கார்நி றத்துடல் காலொளி வார்சடை
பார்தி றத்தகன் மார்பகம் பாறையென்
றேர்பெ ருத்திடுந் தோளிரண் டேடெனுஞ்
சீர்சொ லத்தருஞ் செங்கணி ரண்டுடன். (கஎ)

நிலவு போலவெண் ணீறுத்தி ராக்கமுஞ்
சுலவு மானுரி தூக்கிய தண்டமும்
பலவு மாகிய சின்னங்கள் பாணியிற்
பொலிவு செய்திடப் பொற்பவர் கொண்டனர். (கஅ)

கண்டு சங்கரர் காணருங் காட்சியாம்
பண்டி யான்புரி பாக்கிய மென்கொலோ
விண்டு வேவடி வேயினர் போலுமென்
றெண்ட ரத்தவா சானென வெண்ணினார். (கக)

பூத்த தாமரைப் பாதனின் பொற்கையா
ரேத்து பாடிய வேட்டைமுன் வைத்துநுஞ்
சூத்தி ரப்பக லோனையிச் சோதியாற்
கோத்து வைத்தவா ராதனை கூட்டுவல். (உ0)

மறைக ளென்கையுஞ் சாகைக ளுத்தனை
முறைகொண் டோதிடச் செய்தருண் மூலவ
நிறைபு ராணமூன் றாறனை நீணிலத்
துறையு மாறரு ளுத்தம யோகியே. (உக)

அந்த மாமறை யம்பொருள் யாவையு
மந்த மாவுறு மைம்மறை யென்றிட
விந்து மாமர போர்கதை யீன்றரு
டந்த மாதவ சூத்திரஞ் சாற்றிய (உஉ)

வித்த காமுனி வேந்தனே நின்முனர்ச்
சித்த நாணினைத் தேர்ந்திடாச் செய்ததை
யத்தன் சேய்சொலை யன்புட னேற்பபோன்
மெத்த வேலென வேண்டினர் சங்கரர் (உந)

குற்ற முற்றதே யாயினுங் கூருடன்
கற்ற வாவுதைக் காய்புடம் வங்கென
முற்ற வேதெளி வாக்குதன் மூதறி
வுற்ற வானினைக் கோவரி தாகுமே. (௨௪)

வேறு.

விளம்பு மாற்றம னைத்தையுங் கேட்டருள்
வேத மாமுனி சங்கரர் பாடிய
முளம்புக் காயிட மூன்றரை நாழிகை
யுற்று நோக்கினர் முற்றிலும் பின்னதிற்
களம்பு காதனு செவ்வென வாய்ந்திடக்
கண்டு பேருவ கைக்கட லாழ்ந்தன
ளிளம்பி ராயராஞ் சங்கர மாமுனி
யென்னை யார்க்கவர் செப்புத லாயினர். (௨௫)

ஐய சங்கர நீயந்தச் சங்கர
வண்ணல் போலுமே யல்லையே லென்மனச்
செய்ய நோக்கம னைத்தையு மிவ்விதஞ்
செப்ப யார்க்கும சாத்திய மாயிடும்
பைய ராவர சானவன் சீடனும்
பண்ண வன்னுரை குற்றமு மாகுமோ
வைய முன்னெனக் குள்ளன யாவையு
மற்றுப் போயின பாடியம் பார்த்துமே. (௨௬)

கயிலை வெற்பினி லிச்செயல் கேட்டனன்
காணு மாறிவண் வந்தன னென்றனின்
செயனு மிப்பொழு தேபயன் கொண்டது
செம்மை வாய்ந்திடுந் தத்துவ சூக்குமம்
பயிலு வார்க்கெலா நன்குவி ளடங்கிடப்
பாடி யத்தினைச் செய்தனை யன்றியு
மயலா ராயிடி னிவ்வித மாற்றுதற்
காற்ற லுற்றவ ராவரோ வன்பனே. (௨௭)

என்னை யொத்தவ னீங்கில் வேறிலை
யேற்ற வாசிரி யார்ம்ர பும்மதே
யன்னை யாருத ரத்துளும் ஞானமு
மார்ந்தா ஞுஞ்சுக ஞனந்தஞ் செய்கிறு
னன்ன வாறுநீ யானந்தஞ் செய்கிறு
யான்ற நிற்கியான் செய்வது யாதுமி
லென்ன வேபல செப்பிமு றைந்துட
னேக யத்தனஞ் செய்தனர் மாமுனி (உஅ)

அந்த வேளையிற் சங்கரர் பத்தியா
லைய மூன்றரை நாழிகை யிவ்விடஞ்
சிந்தை யன்புடன் றங்கிடின் றேவரீர்
திருமுன் கங்கைத்த டங்கரை தன்னிலே
யிந்தப் பாழுடல் விட்டவ ஞயுட
னின்ப வாரியி லாழ்ந்திடு வேனென
முந்தை மாமறை யாய்ந்தருண் மாமுனி
முண்ட கத்தடி வீழ்ந்துவி ளம்பினர். (உகூ)

கேட்டு நின்றவி யாதருண் ஞேக்கியே
கேண்மை கொண்டுடன் கூறுவ தாயினர்
வாட்ட மற்றநீ யாதிலும் வல்லவன்
வஞ்ச னைக்குறி கொண்டுரை டிக்கிறுய்
வேட்டு நின்றனைத் தந்தையுங் கொண்டகால்
வீழ்ந்த வேணிய ரெண்வய தீந்தனர்
கூட்டிக் கொண்டனை நின்றவப் பேற்றிஞற்
கூறு மெண்வய தத்துட னன்றரோ. (௩௰)

அந்த வெண்ணிரு வாண்டுமே யின்றுட
ஞகு கின்றது வல்லவோ வையனே
யிந்த நாண்முத லத்துணை நாளினு
மேற்றுப் பாருல கெங்கணும் போய்வர
வந்த கன்றனைக் காய்ந்தரு ளண்ணலு
மளிக்கு மாறவர் தாளிணை வேண்டுவல்
தந்த வென்றனிக் கட்டளை யேற்றுநீ
தத்து வப்பொரு டன்னைவி ளக்குவாய். (௩௧)

## ஏழாமத்தியாயம்.

வேத னேமுத லாயுள விண்ணவர்
மேதி னித்தல மேயுளர் வாதரா
யாத லாலவர் யாரையும் வென்றுநீ
யந்த மாமுறைத் தாபனஞ் செய்திடாய்
காத லோடுமித் தாரணி தன்னிலே
கரும பத்தியோ கத்துடன் ஞானமு
மேதெ வர்க்குரித் தாகுமோ வவ்வித
மீந்து கூட்டுடன் கூடுவை கைலையே. (௬௨)

சொல்லும் வண்ண நடந்திட வுந்தமின்
சூத்தி ரந்தனக் கென்னுடை பாடியம்
நல்ல தாம்படி தேவரீ ரின்னரு
ளல்கு மென்றவர் கேட்கவி யாதரும்·
வல்ல நின்றனுக் கென்னருள் வேண்டுமோ
வாழியவ்வித மாருக பாடிய
மெல்ல வற்றையுங் கொண்டுள தாதலின்
யாரு மச்சிறப் பாய்ந்திடு வாரரோ. (௬௩)

என்ற போதினு மென்னெனைக் காத்திட
வென்றும் பெற்றியைப் பெற்றிட வாழ்த்தினே
னன்ற மர்பர மேச்சுர ஞணையா
னம்பு மாறவை யாயிடும் வேதிய
ரன்று கௌதம ஞதியோர் சாபமுற்
றகத்திற் கோபமுங் காமமு மிஞ்சுறத்
தொன்று தொட்டது விட்டவர் சொல்கிறார்
தோன்று மாபொருள் சூத்திரத் திற்கரோ. (௬௪)

கூடு மன்னவர் பாடிய நேரல
குற்ற முற்றதென் றோதுவ ராயினும்
பீடு பெற்றது வன்னிபு டத்தினிற்
பெய்த பொன்னென வேசிறப் பெய்திடுக்
தேடு பற்பல ரீச்சுர ஞணையாற்
சேர்வர் நின்றனின் சீடப ரம்பரை
பாடு யட்டநின் னுள்ளக் கருத்தினைப்
பனுவல் செய்துவி ளக்குவர் பாரினில். (௬௫)

தேவி யங்கையிற் றோன்றிய கங்கையுந்
தீர்த்த மாழ்குவர் பாவம னைத்தையுந்
தாவி யன்றழி வுற்றிடச் செய்வதாற்
சாற்று வாரதை லோகமா பாவினி
மேவு மப்பெயர் கொண்டதோ வவ்வித
மேன்மை கொண்டதின் பாடியஞ் சங்கரர்
நாவில் வந்தது லோகபா வனனமாய்
நன்று செய்கிற தன்மையைக் கொண்டதே. (௧௬)

மங்கை பாகனி டத்துள ஞானமா
வாரி யானது தூயநற் பாடியங்
கங்கை மாவடி வங்களை யேற்றது
காணு மந்நதி யெத்துணை நாள்வரை
துங்க மாயிடு மத்துணை நாள்வரை
சொன்ன பாடியஞ் சுத்தமே பெற்றிடு
மெங்கும் வென்றது வேற்றமும் வாய்ந்ததா
மென்பதற்கொரு வையமு மில்லையே. (௧௭)

வேறு.

துறவியே யலநீ துறவிகள் வேந்தாய்ச்
சொல்லிடிற் றக்கதே யாரும்
பெறுவையே வியாக்கி யானசிம் மாச
னத்தமர் பெட்புறு மீசன்
மறுவறு நான்கு விருதுக டம்மை
மண்ணுல கன்றினான் முகத்தே
னுறுநக ரதினு நான்முகத் தானு
மோதுவன் பங்கய னுன்னை. (௧௮)

சங்கர நீயுஞ் சீடரின் மரபுந்
தாரணி தனக்கொரு குருவாய்
மங்கல மாக வமைந்திடு மென்ன
வாழ்த்தியே கமண்டல நீரா
லங்கவர் முடியில் வார்த்தபி டேக
மன்புடன் வியாதருந் தமது
செங்கையாற் புரிந்து சீர்பெற வாழ்த்தித்
திருவுரு மறைந்துடன் போனார். (௧௯)

அச்சம யந்த தாஸ்துவென் சொல்லு
மகலிடத் திசைத்தது மன்றி
யச்சொலை விந்து மாதவர் கால
வயிரவ ராகிய தேவ
ரெச்சினி லிசைத்தார் கேட்டனர் காசி
பெழிற்பதி யுள்ளவ ரெல்லா
முச்சித மாமப் பதியினிற் சீட
ருடனுற வாழ்ந்தனர் குருவே. (௬௰)

பின்னொரு நாளிற் சங்கர முனிவர்
பேணிய பூசைபுத் தகங்க
ளின்னவை யெல்லா மொடுபிர யாகைக்
கேகின ராங்குவே தத்தாற்
பண்ணிடப் பெற்ற சரஸ்வதி யமுனை
பயனளி யாறுக ளிரண்டின்
பின்னிய வடிவா கியதிரி வேணிப்
பெருவளங் கண்டுடன் றுதித்தார் (௬௧)

தென்முக மாக வெண்ணிறக் கங்கை
சீருறுஞ் சத்துவ ஞான
மென்முறை போலுங் கீழ்த்திசை முகம
யிருணிற யமுனைதா மதமாங்
கன்மமே போலு மட்சய வடத்தின்
கண்ணொரு கூற்றினி னின்றும்
பொன்மயங் கலந்த பசுநிறங் கலந்து
போயிடுஞ் சரஸ்வதி தன்னை. (௬௨)

இராசச விச்சை போலுமே செல்ல
வெங்குரு வத்திரி வேணி
பராவுறும் படியாஞ் சுழுமுனை நாடி
பரந்திடும் பிங்கலை யோடு
விராவிடு மையம் போற்பிர ணவத்தை
வேண்டியு பாசனைக் கேற்ற
[illegible]ாவிணி யான்றன் றீர்த்தமா தலினு
லாங்குநீ ராடியே யுற்றார். (௬௩)

# ஸ்ரீ சங்கர விஜயம்.

அந்தணர் யாருங் கலியுகக் கொடுமை
யாலவர் தம்மனுட் டானஞ்
சிந்தின ராக வவர்தமைக் காக்கச்
சேவலங் கொடியவன் பாரில்
வந்தனன் பட்ட பாதராப் புறமா
மதத்தவ ரடைந்தவர் நூலைச்
சந்தத முணர்ந்து வேந்தவை முன்னிற்
சயித்தனர் சபதங்கள் செய்தே. (௪௪)

வித்தியா சிரிய புத்தரை வென்று
வேரறச் செய்தன ரதனு
லத்துரோ கத்தை யொழித்திட வேண்டி
யாரண விதிமுறைப் பிராயச்
சித்தமே கொள்ள விரும்பியே யுமித்தீ
சேர்கிறு ரென்றதோர் சேதி
யெத்தல மதிலும் பரவிடக் கேட்டா
ரீச்சுர சங்கர முனிவர். (௪௫)

மாணவ ரோடுஞ் சங்கர ரத்தீ
மருங்கினிற் சென்றன ராங்கே
யாணவர் கொள்ளும் விரதனை ராக
மாற்றவுங் கொண்டனல் வேகும்
வேணர வமிசப் பட்டருஞ் சீடர்
விளம்பிடத் தெரிந்துட னவரின்
முணலம் பெறவே பூசனை செய்யச்
சாற்றினர் மாணவர் தமக்கே (௪௬)

என்னிறு திக்கிச் சங்கர முனியா
யீச்சுரன் றரிசன மளிக்க
மன்னினன் போலு மாயினு மன்னூர்
வகுத்ததோர் பாடியங் கேட்கத்
தன்னிலே விழைந்தேன் பூர்வமீ மாஞ்சை
சாபர பாடியத் திற்குக்
கன்னுத லறவெண் ணாயிர மான
காரிகை விவரணந் தெளிவாய் (௪௭)

சாற்றிய தொப்ப வுத்ரமீ மாஞ்சை
சங்கர பாடியத் திற்குந்
தேற்றமாம் படியே விவரண மெழுதிச்
சீர்பெற வெண்ணியா னிருந்தேன்
பேற்றினை யடையப் புண்ணியப் பேறு
பெற்றிலே னென்னவே சொல்ல
வாற்றவு மிளையோ யேனிதைக் கொண்ட
யறையெனக் கேட்டனர் முனிவர். (சஅ)

பூசுரர் குலத்திற் பிறந்தக டனுக்குப்
போற்றிய மறைகளைப் பழித்தே
யேசிய நாத்தி கரையெலா மழிக்க
விளமையிற் கொண்டனன் சபதம்
பேசிய வவர்க ணூல்களை யாசான்
பெற்றறிந் தாய்தலே முறையாம்
யோசனை கொண்டே புத்தமா ணாக்க
னுருக்கொடே யோதினே னையா. (சகூ)

பண்டைய மறையை யன்னவர் நிந்தை
பண்ணவென் னளவையைக் கடந்து
மண்டின கண்ணீர் மறைத்ததை வேறும்
வகையெனக் கூறியு மவர்கள்
கண்டறிந் தார்கண் மறையவ னென்றே
கடுவிசை யுடனெனை யைந்தாம்
விண்டொடு மாட நின்றுகீ ழுக்கி
விழுந்திடத் தள்ளின ரம்மா. (ருo)

வீழ்ந்திடுங் காலை நான்மறை யுண்மை
மேவிடி னுய்ய வென்றே
சூழ்ந்தவிந் நிலத்தில் வீழ்ந்துமே யானோர்
துன்பமும் பெற்றில னேனு
மாழ்ந்துரை யாது வுண்மையே யென்ற
வையமுங் கொண்டத னாலே
தாழ்ந்தவ னானே னோர்விழி யிழந்தேன்
சத்துரு வாயின ரெனக்கே. (ருக)

எழுத்தறி வித்தோ னிறைவனே யாகு
மெனவெணி நடந்திடு மெண்ண
மொழித்தனன் புத்த குருவுடன் குடியை
யொருங்குற வழித்தன னந்த
விழித்தொழி லென்னை மிக்கவும் வருத்தி
யெரித்துற லாயது வன்றி
யழுத்தமாய்த் தருக்க வுத்தியாற் றெய்வ
மாமெனத் தாபனஞ் செய்தேன். (௫௨)

பின்புநான் கரும காண்டமுட் கூறும்
பெரும்பொருட் டாபனஞ் செய்ய
வன்புமிக் குற்றே சயிமினி மதத்து
ளடைந்துமீ மாஞ்சையி னுத்தி
வன்பயன் கொண்டு தருக்கரை வென்று
வலியது கன்மமா மன்றி
மின்பயில் கடவு ளில்லெனச் சொன்ன
வெந்துயர் வருத்துறு மந்தோ. (௫௩)

இத்தகை யான பாதக மிரண்டு
மேகிடச் செய்யபி ராயச்
சித்தமுங் கொள்ளக் கருதின னஃதைச்
செய்திடா துந்தமின் பாடி
யத்தினுக் குவிவ ரணத்தினைச் செய்ய
வகத்தெணம் வந்தபின் னதைமுன்
னெத்துணை யானே முயலுத லியலு
மேற்றன னுதவி னிதனை. (௫௪)

என்னவே பட்ட பாதரு மியம்ப
வேத்திய வந்தணத் தலைவ
நின்னுடைக் குடும்பப் பொருட்டல வானு
னின்மல மறையிடம் பத்தி
மன்னிய தானீ யத்துணைப் பாடு
வகித்தனை யன்றியும் பாவ
வின்னலை யொழிக்கு மாமறை விஞ்சை
யாவையு மோதினை யன்றோ. (௫௫)

## ஏழாமத்தியாயம்.

அல்லது முளத்தின் மிக்கனு தாப
மடைந்தனை ஞானுணர்ந் தறிந்த
வல்லவ ஞெ யாகையின் பாவம்
வந்துனைச் சேருத லில்லை
நல்லதாமான்ம ஞானமென் னெருப்பை
நன்னுவை யாயினிப் பாவம்
புல்லிய மலையும் பஞ்சினைப் போலப்
பொசுங்கியே போயிடு மன்றே.

தக்கதோர் ஞான குருவினை யடைந்து
சாற்றமப் பொருளடை யாதே
யிக்கொடு வினையைக் கொளனினைப் போல்வ
கேற்றதோ வளவறி யாது
முக்கியங் கரும மெனவெணி யிந்த
மொய்ம்புறும் விரதமுங் கொண்டா
யிக்கமண் டலநீர் தெளித்தரை வெந்த
யாக்கையைத் தழைத்திடச் செய்வல். (ருஎ)

ஆற்றலை முழுதுங் காட்டியென் பாடி
யத்தினுக் குரைவிவ ரணத்தை
யேற்றமும் பெறவே யென்னநம் முனிபு
மிசைத்தனர் கேட்டுடன் விஞ்ச
வூற்றிய வமுத கலைவழி யமுத
முண்டதி லத்துயர் சிறிதுந்
தோற்றில தாகப் பட்டருங் களித்துத்
துன்றினர் தியானத்திற் சிறிதே. (ருஅ)

அப்பொழு தவர்க்குச் சங்கர முனிவ
ரரன்வடி வாமெனத் தெரியச்
செப்பரும் வேத மந்திரத் தாலே
சீருடன் றுதித்துமே சொல்வா
ரப்பரே யுலகின் முத்தொழில் யாவு
மாற்றநீர் வல்லவ ரன்றோ
வப்படி யாக விதுவென வரிதோ
வகன்றிடா தெஞ்சுமோ பாவம். (ருகூ)

## ஸ்ரீ சங்கர விஜயம்.

சனித்தது முதலா யிற்றைநா ளளவுஞ்
சாத்திர முறைப்படி நடந்தே
னினித்தம தடைய பாடியந் தனக்கு
விவரண மெழுதிடற் காக
வனித்தவிவ் வுடலை வேண்டியான் றொடங்கு
மறவிர தத்தினைக் கெடுத்து
லெனித்திற வகையுஞ் சிறப்பல வன்றோ
வென்றனை யாண்முனி யேறே. (௯௰)

வெந்தழ லிருந்தும் யோகவாற் றலினால்
விளம்பிய பாடியப் பொருளைச்
சிந்தையிற் கொள்வே னன்புட னென்னைச்
சேர்பிர பாகரன் கையிற்
றந்திட லாங்குச் சிறந்தபா கங்க
டையறிந் தோதுவல் கருத்தை
யந்தவா றருளா யெந்தையே யென்ன
வன்புடன் பட்டருங் கேட்டார். (௯௧)

சங்கர ரளித்த வாணையைக் கேட்டுத்
தாமரைத் தாளனுந் தந்தான்
செங்கையி லேந்தி யோதின னவனுந்
திருந்தவே கேட்டனர் பட்ட
ரிங்கிதற் கெவரே விவரண மெழுத
வேற்றவ ராகுவ ரையா
கங்கையஞ் சடையா னன்றிமற் றாரே
கழறுதற் குரியவ ராவர். (௯௨)

கேட்டத னாலே யோதியே யுணர்ந்த
கிளர்பயன் முழுமையும் பெற்றேன்
றாட்டிணைத் தஞ்ச மடைந்தன னின்று
சார்ந்தமா ணாக்கனைக் கொள்வாய்
வேட்டனன் வீட்டைப் பத்திமை கொண்டு
விரைமலர்த் தாளிணை தந்து
கூட்டிட வேண்டுந் தாரக முரைத்துக்
கொடுவினை யுடையவ னேனும். (௯௩)

வாதிய ரொழிய விவரணை மெழுத
வயதினின் வலிமையுங் கல்வி
யோதிய மதமுங் காமமும் பகையு
மோர்சிறி தூற்றிடின் முடியு
மாதியிற் றெட்டென் மாணவ னுய்யு
மாரியா வருத்தமா புலவோர்
மாதில கதரான் கன்மதா பனஞ்செய்
மண்டன பண்டித மறையோன். (௬௪)

ஒருவனே யுள்ளான் வேதனை நிகர்த்தா
னுபயபா ரதியெனு மனையாள்
பெருவரம் படைத்தாண் மந்திர சித்திப்
பெட்புடை யாளவள் கணவற்
கிருவலி படைத்தாண் மலர்மக ளொப்பாள்
யாவரு மவன்றனை வெல்ல
லருமையே யாகு மெவ்வித மேனு
மவன்றனை வென்றவ ராகி. (௬௫)

சீடனு யாக்கிக் கொண்டிடிற் போதுந்
திரைகட லுலகைவென் றதுவாம்
பீடம ரந்த மறையவ னன்றுய்ப்
பேசுற விவரணஞ் செய்வா
னுடலா மிந்தப் பாடிய மிக்கு
நன்குற நிலைபெறும் பிரம
நாடிய வுபதே சத்தினை யருளு
நாழிகை செலவதா லென்றார் (௬௬)

கருணையங் கடலாஞ் சங்கர முனிவர்
கரத்தினு லபயமுங் காட்டித்
தருணமுந் தெரிந்து தீயினுட் புக்குத்
தலையிற்கை வைத்துடன் வலது
கருணமுள் செய்ய தாரக நிலையைக்
கழறியே யருள்பொழிந் திட்டார்
மருணனை யொழிந்து மாசறு மணிபோல்
வயங்கினர் பட்டரு மன்னே. (௬௭)

# ஸ்ரீ சங்கரவிஜயம்

சங்கரர் செய்ய கைப்பரி சத்தாற்
றழலிடை வேவது நிலவிற்
றங்குதல் போலு மமுதநீர் மூழ்குந்
தன்மையே யோலுமே சமைந்த
தந்தமோ டாதி குருவின தாற்ற
லனைத்தையுஞ் சீடருக் குரைத்துச்
சிந்தையி லன்போ டக்குருப் பேணச்
செப்பினர் பட்டருஞ் சிறக்க (௬௮)

சற்குரு துதித்துச் சண்முகி முத்ரை
தரித்துடன் முரக நிலையிற்
பொற்புடன் மனத்தை நிறுவியோ கத்தி,
பொருந்தியே பிரமமாந் துய்ய
சிற்பர நிலைமை பற்றிநற் சகுண
வுபாசனை சிறப்புறச் செய்து
தற்பரம் பிரம ரந்திர வழியே
சார்ந்தனர் பட்டருங் களித்தே (௬௯)

அங்கெழு மணமோர் யோசனை தூரத்
தளவிடை யுயிர்களுக் கின்பம்
பொங்கிடச் செய்த தத்தழ னின்று
புகலொணாப் பேரொளி யொன்று
செங்கதிர் மேலாய்க் கிளம்பிடக் கண்க
டிறப்பரி தாயது கொண்ட
பங்கய நாபன் கலையது விண்டு
பற்றிய தாயது வன்றே. (௭௰)

இப்படி முனிவர் வேதியர் தம்மை
எய்தரும் பயன்பெறச் செய்து
துப்பறு மனத்த சீடர்க ளோடு
தூயபா கீரதி யாடி

யப்பரத் துவச னுச்சிர மத்தி
லட்சய வடத்தடி மேவுந்
தற்பரன் மான சீடருக் கோதித்
தங்கினர் சிலதின மகிழ்ந்தே.

ஏழாமத்தியாய முற்றிற்று.

ஆகச் செய்யுள். ௪௨௩.

# எட்டா மத்தியாயம்.

வேறு.

வேலவ னமிச பட்ட பாதராம் வேதி யோரைக்
கோலகம் முனிவர் சிட னுக்கிய கூறு சொன்னோ
மேலவர் சீட னுன மண்டன மிசிர னோடு
மேலவே வாது செய்த வியல்பினை யெடுத்துச் சொல்வாம்.

சங்கர முனிவர் மற்றுந் தாமரைத் தாள னுதிப்
புங்கவ ரோடும் போனார் புண்ணிய ரேவா வாற்றின்
பங்கினி லுள்ள தாம கிடமதிப் பதிக்க டுத்துத்
தக்குப வனத்தி லாங்குச் சபதப முடித்தார் பின்னர்.

அண்டிய சீடர் தம்மை யவ்விட நிறுத்திப் போனார்
மண்டன மிசிரற் கானை மனத்தெணி யொருத்த ராக
வண்டையி னீர்தி ரட்டி யவன்மனைக் கேகு வோரைக்
கண்டவ ரவரை யன்னான் கடிமனை யாண்டே யென்றார்.

மன்னவன் கோயி லொப்ப மாடங்கள் பலவுங்கொண்டு
மன்னிய வாயி றன்னில் வணவண மான தத்தை
சொன்னமா மறைக டாமே துலங்குமா மற்ற தாலோ
வென்னவாங் கேள்வி போட்டு மிவ்வுல கனித்த மாமோ.

அல்லையே னித்த மாமோ வாற்றிய வினையோ வன்றி
வல்லதுவான தேவோ வழங்கிடும் பயனை யென்று
சொல்லியே தங்கு மந்தச் சுடர்மணிக் குடுமி தோய்ந்த
வில்லமே யன்னான் வீடா மென்றவ ரிசைத்திட் டாரே.

ரமனு மாங்குப் போந்து பார்ப்புழி வாயின் மூடி
யொருவரு மில்லா தாகி யுச்சியம் பொழுதி னுண்டி
ருகிடும் வேளை யாயு மிருந்தது பார்த்துத் தம்மின்
ரவினை யுணர்த்த லாகா வகையுட னிருந்த தன்றே (௬)

ழகிய யோகத் தாலே பரந்தவிண் மிசையே போந்து
ழுமறைக் கலையின் வெற்றி மொழிந்திடுங் கொடிகளாடு
மிழைமணி மாடந் தாண்டி யிழிந்தனர் மனைமுற் றத்தி
னுழைதர வெண்ணங் கொண்டார் நோன்பினி லுயர்ந்த பெம்மான்.

அம்மனைத் தலைவ ராண்டே யைந்தெனு மறையைச் சொன்னே
னிம்மனிற் கரும மேற்ற மெனுஞ்சயி மினியுங் கூட்டி
யம்மையிற் போன தந்தைக் காற்றிடுங் கடன்செய் காலை
செம்மையிக் குடைய கால மென்றவர் தெரிந்துட் போனார். (௮)

வேறு.

மண்டன பண்டிதன், கண்டுடன் றுறவியி
னெண்டரு மிடமெது, விண்டிடு மெனுமெணம். (௯)

கொண்டவ னுடன்குதோ, முண்டியென் றேசொல
மண்டல குருவதை, முண்டன மெதுமுதல் (௰)

எனவெணி யுடனவர், செனியது களமுத
னனிவழிப் புற்றதாய்த், தொனிபொருள் வாய்ந்திட (௧௧)

ஆகளான் முண்டியென், னுகர வாக்கிய
மோகையோ டோதிட, வேகள மனத்திடை. (௧௨)

கொண்டனன் மண்டன, பண்டிதன் குதகவென்
விண்டிடு மொழியினுற், கண்டிடு வழியதை (௧௩)

கேட்டன னென்னவே, தாட்டிக மாவிடை
யோட்டினன் வாதினற், பாட்டுடை வன்மையால் (௧௪)

நின்றனை வினவின, னன்றுநின் வழியினை
யென்றொரு கருத்தினைத், துன்றினர் முனிவரே. (௧௫)

ஆறது நிற்கெனே, கூறிய தெனும்பொரு
ளேறுறி மகபந்தா, தேறவே சொற்றனர். (கசு)

ஆயிடை மண்டனன், மேயினன் கோபமு
மாயவண் முண்டையென், றேயதோர் பொருளது (கஎ)

வேறு.

ஆமாம் வாக்கியந், தேமா தாரெண்டா
தாமா வுரைத்தனன், றிமார்க் கங்கொடு. (கஅ)

வேறு.

மண்டன னின்னனே, முண்டைய னென்னவே
திண்டிற லோடுரை, கண்டிலே யெனும்பொருள். (ககூ)

தங்கிடும் வாக்கியஞ், சங்கரர் சொற்றனர்
பொங்கிய சினத்துட, னங்கவன் சொல்லுவான். (உ௰)

எள்ளுவ தாகிய, கள்ளினை யுண்டையோ
விள்ளிடு மிப்பொருள், கொள்ளமா வாக்கியம். (உக)

விராவிய தாயிடுஞ், சுராபிதா வாவென
சுராநிறம் பசுமையென், றுராவழி யெண்ணியே. (உஉ)

தனிவரு சங்கர, முனிவரர் நல்லகள்
பனியென வெண்ணிற, மணியுறு மென்றனர். (உங)

வெண்ணிற மறிவையோ, பண்ணமை வாயென
வெண்ணியே மண்டனன், பண்ணினன் கேலியே. (உச)

நிறமதை யறிகுவ, னறிகுவை சுவையென
மறுமொழி சங்கரத், துறவியர் கூறினர். (உரு)

வேறு.

கொடுமை நெஞ்சங் கொண்டு துறவு கோலம் பூண்டு வந்தவ
படியின் மீது கழுதை தாங்காப் பார மாங்க வந்தியை
நெடிய தாகத் தாங்கி நிற்கு நிற்குப் பூணு னூலொடு
குடுமி யென்ன பார மாகு கூறு யென்னக் கேட்டனர்.

முனிவர் கேட்டு நின்னி னப்ப முதிய னாலுந் தாங்கொணாக்
னமுந் தாங்கி நின்றேன் பூணாற் கயிறு குடுமி வேதமு
ணிவ ருந்தும் பார மென்ன நாத னான வெங்குரு
வினிதெ டுத்துக் கூற லானா ரெதிர்த்த மண்ட னற்குமே. (௨௭)

இந்த வண்ணம் வாது பேசி யிருவர் நிற்கப் பார்த்திதை
வந்த வியாத ராதி யோர்கள் வாதார் மண்ட னற்குடன்
றந்தை யோர்க்குச் சாத்தஞ் செய்யுந் தனைய னீண்டுவினுரை
யெந்த வாற்றி னாலுஞ் செப்ப லாகா தென்ப ரன்றியும். (௨௮)

சந்நி யாசி யாக வந்த விவரின் றன்மை யாதுந்
யுன்னி டாது செய்தாய் மேலு மோது வேதத் துட்படுஞ்
சந்நி யாசங் கொண்டு பிச்சை தாவென் றேவந் தான்றனை
பன்னு மாறே யாத ரித்த லில்ல றத்தின் பான்மையாம். (௨௯)

அதனி லுள்ளுஞ் சாத்த கால மன்னு னார்ந்தா னீக்கிடா
திதமு ரைத்துப் பேண னன்று மாக வின்னு ரெம்முடன்
பதமு மார விஸ்வ தேவ ராயிருக்கப் பண்ணென
முதியர் வார்த்தை சீரு டைத்தாய் மூண்ட கோபம் விட்டுடன்.(௩௰

விச்சை வல்ல விசர் தானே வேண்டி யேத்தி மண்டனன்
பிச்சை யேற்க வேண்டு மென்னச் சோற்றுப் பிச்சை யென்றனக்
கிச்சை யல்ல வாது பிச்சை யேற்க வந்தேன் யானென
நச்சை யுண்டா னம்ச மாய நம்ப னாருஞ் சாற்றினார். (௩௧)

மண்ட னற்கா னந்தம் வந்து வாது செய்யும் வல்லமை
கொண்ட மாந்த ருண்டோ வென்னக் கோரி யுள்ளே னாள்பல
கண்ட மட்டும் வாது பிச்சை காலை யீவ னின்றளி
யுண்டி கொள்ள நேரு மென்ன வோகை யோடு வேண்டினன்.(௩௨)

நன்று மென்ன வொப்புக் கொண்டார் நாத ரான மாமுனி
குன்று வல்ல விஸ்வ ரூபன் கூட்டு சாத்த நாளினிற்
றுன்று வார்த்தை பேசி வந்த தோட நீங்க வேண்டியே
தொன்றும் விண்டு சூக்த மாதி சொல்லிப்போக்கிக்கொண்டனன். ( )

# எட்டாமத்தியாயம்.

முன்ன தாக வேத வியாச முனிவர் விஸ்வ தேவராச்
சொன்ன தானந் தந்தை தானந் தொன்மை சாலுஞ் சைமினி
பன்ன வோதி வைத்த பின்னர் பரமர் விண்டு தானமுந்
துன்ன வைத்து சாத்த கன்மந் துலக்க லான்பின்னரே. (௧௪)

வந்த வின்னு ளேடி யானும் வாது செய்யுங் காலையி
லெந்த வாறு தோல்வி வெற்றி யென்று ஞாயங் கூறிட
வந்த மாக மீரி ரண்டு பேரு மன்பா யாருமென்
றுந்த விஸ்வ ரூபன் வியாச ராதி யோரை வேண்டினன். (௧௫)

வல்ல ரான விருவர் தாமு மனத்தி லெண்ணி மண்டன
நல்ல கின்னின் பன்னி யான நங்கை யுபய பாரதி
யெல்ல வற்றை யாய்ந்த றிந்த வேற்ற முள்ளா ளாதலிற்
சொல்ல வல்ல ளென்று கூறித் தோற்ற நீங்கிப் போயினர். (௧௬)

குருவும் யோக வாற்றல் கொண்டு வான மார்க்கங் கூடியே
மருவு மில்ல நீங்கி ரேவா வாய்ந்த காவி னுள்ளமர்
கருவு ருமற் காக்குங் காள கண்டன் கோயிற் றங்கியே
யிரவு முற்றுஞ் சேதி யாவு மிருந்த சீடர்க் கோதினர். (௧௭)

இருவர் செய்யும் வாதி னேல்பு மென்ன வாறு யாமெனக்
கருதி வந்தான் போலத் தேசு கால வெல்லோன் வந்தனன்
குருவின் சீரைக் கூற லொப்பக் கூண்டி னின்றும் பட்சிகள்
விரவு ராகம் பாடிக் கொண்டு விண்ணெ ழுந்து போந்தன. (௧௮)

நித்த கன்ம மாற்றிச் சீடர் நேம மோடு சூழ்தர
மெய்த்த வத்த வாசான் றானும் விஸ்வ ரூபன் வீட்டினில்
வைத்த வாது பீடமீது வந்த மர்ந்தார் வாதெனும்
யுத்தஞ் செய்ப வூக்க மோடே யுற்றுன் பீட மண்டனன். (௧௯)

கலைகள் யாவு முற்று ணர்ந்த கன்னி யான சாரதை
தலைவி யாக வீற்றி ருந்து தர்க்கஞ் செய்யு மன்னவர்
விலையு யர்ந்த வாதுப் பொன்னின் மேன்மை தாழ்வு தூக்கிடத்
துலையை யொப்பத் தானி ருந்து சொல்லுஞ் சேதி கேட்டனள் ()

ண்டு வேதி யோர்க டேவ ராதி யான விஞ்சையர்
ண்ட வேவல் வேலை செய்யும் பூவை மார்கண் மற்றுளார்
ண்ட காந்தி விசெ யில்க ணிர்மா ணஞ்செய் மண்டப்
ண்டி ஞர்கள் தர்க்க விந்தை யென்ன வாறு யாமென. (சக)

ங்கை யாணை தந்த காலை வாதி ஞரம் பத்தினி
ங்கு ளார்க டேரும் வண்ண மாழி யோசை வானமார்
ங்கு லோசை யென்று லிக்கும் வாத்தி யங்கள் கொட்டினர்
ங்கு சோசி யோர்க ளெல்லாஞ் சாற்றி வந்தார் நாழிகை. (சஉ)

ர்க்கந் தன்னிற் றோல்வி கொண்டாற் சந்யோசஞ் சங்கர
க்க ணத்தே விட்டு விஸ்வ ரூபன் சீட ஞகுதல்
பிக்க விஸ்வ ரூபன் தோல்வி மேவி லெந்தை சங்கரர்
க்கம் வந்து சீட ஞகி ப்பார மென்னச் சொல்லிய. (சங)

ந்நி யாசவ கொள்ள லென்ன வொட்டஞ் சாற்றி யன்னவர்
துனி ஞர்கள் வாது செய்யத் துறவி யான சங்கரர்
முன்னின் சீவ னீச னென்றுய் மொழியுந் தம்மின் கொள்கையைப்
ன்னி யிங்குத் தாபனஞ்செய் பான்மை தன்னைக் கூறுவாம். (சச)

வேறு.

சுத்த நின்மல மாய்ப்பர மார்த்தமாய்த் துலங்கு
மத்த னிப்பொருட் பிரமமு மாவது வொன்றே
நித்த மாய்ப்பிரி வற்றவ நாதியாய் நிலவி
மொய்த்த நீக்கமு மற்றவஞ் ஞானமா மூடி. (சரு)

போர்த்த தன்மையாற் சிப்பியும் வெள்ளியைப் போலப்
பார்த்துத் தோற்றுதல் போலவே யிப்பிர பஞ்சம்
பூத்த யாவையுந் தானெனப் பொலிந்துமே விளங்குந்
தூர்த்த வித்திரி யின்முத [illegible]மெனச் சொல்லும். (சசா)

பிரம ரூபத்தி னறிவிலு லவித்தையும் பின்னர்
வருவ தாமதின் காரிய மாம்பிர வஞ்ச
வுருவம் யாவையு மொழிந்துமீட் டும்பிற வாமே
மருவு தன்வடி வாகியே வாய்ந்திட லென்னும். (சஎ)

முத்தி யாகிற தென்றுடன் படுமென முந்தை
வித்தி யாமறை நான்குமே விளம்பிடு மென்னச்
சுத்தி யாகிய சீர்பெறுந் துறவறம் பூண்ட
நித்த ராகிய சங்கர நின்மலர் சொன்னார் (௪௮)

ஆன பின்னுடன் மண்டன பண்டித னாங்கு
ஞான மூர்த்தியே யாம்பர மாத்துமா நல்ல
வான வத்துவி னிடத்தினின் மறைப்பிர மாணந்
தானு மாவதில் லென்றுமே சாற்றுவன் மேலும். (௪௯)

என்று கூறிடக் காரணம் யாதெனக் கேட்கின்
றன்று மப்பொரு ளுண்டெனுஞ் சொற்பிர சித்தி
யின்று மேலுமே கன்மசம் பந்தமே யில்லா
தொன்று மப்பொரு டன்னிட மொழிகளின் சத்தி (௫௰)

பற்ற வேன்றிடா தாதலிற் பகர்மறை முடிபு
பெற்ற வைகளுக் காயினும் பேர்பெறு முலக
முற்ற வத்துவை யுணர்த்துசொல் லாகிய வழக்கு
சொற்ற சொற்களி னூலுல கார்ந்திடுந் தொழிலாம். (௫௧)

காரி யங்களுக் கொருபிர மாணமுங் காணா
வாரு மாறென மறையுளும் பூருவ மான
சீரு ரைத்திடுங் காண்டமுள் வாக்கியஞ் செப்பு
நேரு மெக்கரு மங்களு மெனும்பொரு ளிற்கும். (௫௨)

இடத்து வேதமெல் லாம்பிர மாணமா யிருக்குந்
திடத்த தாங்கரு மத்தினாற் சேரலாம் வீடு
படித்த லத்துளார் யாவரும் பரிவுட னதைக்கைப்
பிடித்து வந்ததைப் பேறுத முறையென மொழிந்தான் ()

இந்த வாறவ ரிருவரு மெதிர்த்தவ ராகி
யந்த மோடவர் நித்திய கன்மமே யாற்று
மந்த வேளையு முண்டிகொ ளேரமு மல்லா
தெந்த வேளையு முத்திக ளென்றன விசைத்து. (௫௪)

முற்றும் வாதினை யூக்கமா முயன்றன ரோய்வே
யற்று வெற்றியி லக்குட னாகிய வரம்பு
சற்று மிஞ்சுத லின்றவர் சற்பமே முதல
மற்று வாதமும் புரிந்தனர் வகையுடன் கூடி. (௫௫)

பின்ன ரச்சபைத் தலைவியாம் பெண்மணி யாங்கே
யன்ன வர்க்குரித் தாகிய வெற்றியை யாரு
மின்ன வாறென வாய்ந்திட வென்றுமே வாடா
மின்னன் மாமலர் மாலையை விஞ்சையுச் சரித்து (௫௬)

இருவர் தோளிலுஞ் சூட்டியே யித்தனி மாலை
கருகு காலையி லன்னவர் காணுமவ் வாதின்
மருவி னாரப சயமென வாழ்த்தியே விட்டுத்
தரும மாவினை யாற்றிடச் சார்ந்தன ளகமே. (௫௭)

அப்பால் வாதிய ரிருவரு மாரணக் கூற்றைச்
செப்பா நின்றுதாங் கொண்டதோர் சிந்தையின் கருத்திற
கொப்பா கும்படி தருக்கமீ மாஞ்சைக ளோடு
முப்பா னூல்களுக் குடன்பட ஞாயமு மொழிந்தார். (௫௮)

இருந்தார் யாவரு நன்றிது நன்றிது வென்று
மருந்தா வானவ ரமுதமா மார்ந்தநஞ் செவிக்கு
விருந்தா நேர்ந்தது வியப்புடைத் தென்றுமே விளம்பப்
பொருந்தா வாற்றலுந் தேர்ச்சியு மிக்கவர் பொலிந்தார். (௫௯)

இன்று வாதிலு னாளைய வாதுமிக் கேற்ற
மொன்று மாறவர் செய்துமே வந்தன ருலகி
லென்று மிவ்விதம் வாய்த்திட லரிதென விங்குச்
சென்று சார்ந்தனர் புறத்துள சீரிய ரெல்லாம். (௬௰)

உச்சி வேளைவந் தடைதலு மொண்டொடி போந்து
பிச்சை யேல்பொழு தாயது வென்றுந்தான் பேணும்
விச்சை மண்டனற் குண்டிகொள் வேளையே யென்று
மிச்சை யோடறி வித்திட வெழுந்தன ரவரும். (௬௧)

செய்ய வேண்டிய நித்திய கன்மமுஞ் செய்து
தைய லாளளி யுண்டியைச் சதுர்மறை யோர்க
ளுய்ய சிந்தைய ரோடவர் கொண்டுடன் ஹெடுத்தார்
செய்ய வாதினை மீட்டவர் சீருடன கூடி. (௯௨)

அந்த வாதிக ளானன மன்றலர்ந் தொளிரும்
கந்த மாமலர் போலொளி கான்றிட ஞாய
முந்தி யெல்லையுந் தாண்டிடா துத்திய மறுப்புஞ்
சிந்தி யாதுரை செய்தனர் தேசுட னமர்ந்து. (௯௩)

விபர்வை மோட்டினைப் பார்த்திடன் மெய்விதிர்ப் புறுத
லயர்வை யேற்றிடல் பிழைசொலி யப்புறந் தேறன்
மயர்வை யெய்திமுன் பின்முரண் வாய்ந்திடப் பேசல்
செயிர்வை மூளுதன் மயங்கிட லாகிய தீய (௯௪)

குற்றம் விட்டவர் குணமுடன் கூடியே நன்மை
யுற்ற வாறதி விரைவுட னோதின ரானூர்
சொற்ற தின்குணம் யாவையுஞ் சீருறத் தூக்கி
நிற்ற லுற்றனர் கூடிய நீள்சபை யோரே. (௯௫)

இன்ன வாறவர் நாள்சில வென்றள வெல்லாஞ்
சொன்ன வோர்திறத் தாலவர் கல்வியின் றுருதி
யென்ன வாமென யாவருந் தேர்ந்தனர் மேலும்
பன்ன வேண்டிய யாவையும் பகர்ந்தனர் முறையே. (௯௬)

சீவ வீச்சுர ரைக்கியத் தாபனஞ் செய்யன்
மேவ லாமெலே மண்டன னில்லென விளம்பத்
தேவ மாமுனி யுண்டெனச் செப்பின ராண்டுத்
தாவ லாயினன் மண்டனன் பேதமே சாற்ற. (௯௭)

வேறு.

தூயமா முனிவர் நுங்கட் டுவிதமாச் சுருதி யெல்லா
மாயமாம் விவகா ரத்தின் பேதமே வழங்கு மெய்ம்மை
யாயவத் துவிதங் காட்டு மாரணம் விவகா ரத்தின்
மேயசம் பந்த பேதம் விளக்கிடு மென்று சொன்னூர். (௯௮)

உலகெனு மநாதி பாவாஞ் ஞானமு மதனி லுற்றே
யிலகுகா ரியமாத் தோற்று மியல்விவ காரத் தானே
பொலிவுசம் பந்த மான பூதபௌ திகமாம் பேத
மலிபிர வஞ்சந் தானு மிதனையாய் மாண்டு போகும். (௬௯)

பிரமஞா னத்தைக் கொள்ளப் பேசிய குணகு ணங்கள்
மருவிடும் விசேட மற்று மலமறு ஞான மாகித்
தெருளுட னிறைவா யுள்ள சிறந்திடும் பிரம மான
வொருபொரு ளுண்மை யென்ன வுரைத்திடும் வேத மெல்லாம். ()

முத்தியஞ் ஞான நீக்க முயலவிப் பிறப்பிற் சீவன்
முத்தியா யடைய லாகு முதிர்ந்தவிப் பிரமஞான
சித்தியை யடைவ தற்குச் சிறந்திடுங் கருவி யாகும்
பத்தியா மியற்றி ரண்டு பாசனை யென்ப தாமே. (௭௧)

அதற்குவை ராகச் சன்னி யாசமே தக்க தாகு
முதற்குரு முகமா நான்கு முதுமறை வாக்கி யத்தை
யிதற்கிது பொருளா மென்ன விதவுப தேசம் பெற்றே
யிதைக்குறித் தெண்ணித் தேற்ற மடைந்திடச் சித்தி யுண்டாம். ()

மண்டன மிசிரன் பக்க மனைத்தையு மறுத்துப் பின்னர்
விண்டன ருரையிற் காட்சி வினைகல வாத போதங்
கொண்டிடல் பிரமந் தன்னை முதலிய கூறி யாவு
மண்டல குருவாய் வந்த மாமுனிக் குருக்க ளேறே. (௭௩)

பேசிய கருமகாண்டப் பெரும்பிர மாண மெல்லா
மாசிரி யோரா லத்து விதவகை யாக வர்த்த
மாசற வுரைக்கப் பட்ட மண்டன னணிந்த மாலை
தேசொழிந் துலரக் கண்டார் சாருதவச் சபையி லுள்ளார். (௭௪)

சங்கர முனிவர் வெற்றி தாங்கினர் விஸ்வ ரூபன்
பங்கமு மடைந்தா னென்னப் பரந்தவச் சபையோர் தேர்ந்தார்
இங்கிவன் முகத்தா ளான சாரதைச் செல்வி யாளு
மங்கவர் பிச்சைக் கால மணுகிய தென்று சொன்னாள். (௭௫)

# எட்டாமத்தியாயம்.

பொதுப்படக் கூறி நின்ற புதுமையால் விஸ்வ ரூபன்
விதிப்படத் துறவு கொள்ளல் விழுமிய தென்று யிற்று
நிதிப்பெருந் தலைவி யாளு நின்மல முனிவர் மாட்டு
மதிப்புடை யாளாய் நின்று வாழ்த்துவா ளாயி னாளே. (எசு)

நீத்தவ வெனக்கு முன்னர் நேர்ந்ததோர் சாப மென்னைப்
போர்த்துற லாய தின்று போயிடுங் காலங் கிட்ட
வாய்த்ததா லெங்கு நின்று வந்தன னுங்குச் செல்வேன்
பார்த்திடு மென்னக் கூறிப் பாணியி லக்க மாலை. (எஎ)

புத்தகங் கிளியாழ்க் கொண்டு பொலிந்திடுங் கோலந் தாங்கிச்
சுத்தவெண் ணிறமா மேனி துலங்கிட யாருங் கண்டு
வித்தைமா மகளே யென்ன விளம்பினின் றேத்த விண்ணிற்
சத்திய லோகஞ் சென்று சாரதரத் தொடங்கி னாளே. (எஅ)

மந்திர மைநற் சித்தி வாய்ந்தமா முனிவ ரந்தச்
சுந்தரி யேகா வண்ணந் தூர்க்கையின் விஞ்சை யோதிப்
பந்தனஞ் செய்யக் கட்டுப் பட்டவ ளாகி மாறு
மந்தர நின்று கீழே யிறங்கியே யவைக்கு வந்தாள். (எகூ)

அடித்தலம் பாரின் மேவா தந்தரத் தமர்ந்து நெஞ்சி
னிடத்தெணும் வரமும் யாதா மிசைத்திடு மென்று கேட்கப்
படித்தலம் யான்செய் யிந்த மதமது பரவு மாறு
முடித்தருள் செய்யா யென்று முனிவருந் மொழிய லானார். (அ0)

அடியருக் கெளிய ளான வம்மையே யடியேன் றம்மை
யிடமுறக் கேட்கும் போதி லேகலா மக்கான் மட்டிற்
றிடமுளக் கூறு கொண்டு சிறியர்யாம் வேண்டும் போது
வடிவுறக் காட்சி தந்து வசனமு மருளா யென்றார். (அக)

முனிவரிந்த வாறு மொழிந்திடக் கேட்ட நங்கை
மனமுவந் தவர்க்கு வேண்டும் வண்ணமே யாகு மென்னத்
தனிவர மீந்தாள் பின்னர்ச் சங்கரர் விஸ்வ ரூப
னுனுமுள மாய வேண்டி யுற்றனர் களித்து மன்னோ. (அஉ)

எட்டாமத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் நாஉ.

# ஒன்பதா மத்தியாயம

## வேறு.

கன்ம முக்கியங் காசினி யோர்க்கெனும்
வன்மை மண்டனன் றன்னைநல் வாதில்வெல்
தன்மை கூறின மேலவன் றாங்கிய
புன்மை யையமும் போக்கிய தோதுவாம. (க)

ஆண்ட வாறுமி ழுய்ந்தசித் தாந்தத்தாற்
பூண்ட தீயபி மானமும் போக்கினேன்
மாண்ட வுண்மையை யுள்ளத்தின் வாய்ந்தன
னீண்ட வாதினிற் றோல்வியை சேர்ந்ததால் (உ)

துன்பம் வந்தெனைத் தோதகஞ் செய்தலி
லென்ப தாயினு மின்பவை ராகத்தை
யன்பு கொண்டனு போகமே யார்ந்திட
வம்பு செய்கிற தோரையம் வந்துமே. (ங)

என்ன வென்றது கேட்டிடி லென்குரு
மன்னர் சைமினி மாமுனி யல்லவோ
வன்ன மாமுனி யாற்றிய சூத்திரஞ்
சொன்ன காண்டமும் பொய்க்குமோ சொற்றிடீர். (ச)

கன்ம முக்கிய மென்றதின் காரண
மென்ம னத்திடை யெண்ணியே கூறினு
ரென்ம யக்கமுந் தீர்த்தரு ளென்னவே
சொன்ம றைத்துதி சொல்லினன் மண்டனன. (ரு)

கேட்ட காலையிற் சங்கரர் கேண்மையாய்
வாட்ட மின்றியே யுத்தரம் வாழ்த்துவார்
நீட்ட மாம்புகழ் சேர்ந்தவின் சைமினி
கூட்டு சிந்தையர் கூறுயிர் மத்திலே. (சா)

# ஒன்பதாமத்தியாயம்.

ஆன போதினு மாண்டவ னாணையாம்
வான மாமறை வாக்கியம் பற்றியே
யூன மின்றியு லோகமு ணர்த்திடத்
தானம் மாண்புடன் சாற்றின ரந்தணர். (௭)

ஆன்ம கோடிக் காதிரா டொட்டுமே
பான்மை கொள்விட யங்களிற் பற்றிடு
நோன்மை வாய்மன மத்திற நோக்கியே
மேன்மை ஞானமுங் கூறுதல் விட்டனர். (௮)

அத்த கைத்தவர்க் காயிட வெண்ணியே
சுத்த வாத்தும ஞானமுந் தோன்றிட
வொத்த காரண மாமென வோதிடு
மெத்த கன்மமு மேலெனச் செப்பினர். (௯)

ஞான மெய்திடற் காந்தடை நாசமா
மான மாமனத் தூய்மையும் வந்திடு
மீன மற்றம்பா கப்பய னீச்சுர
னான வாசிரி யாரிட மனபுமே. (௰)

## வேறு.

அடைந்திடச் செய்யுங் கன்ம மக்குரு பத்தி ஞான
மிடந்தருங் கடவுட் பத்தி யின்னருள் சேர்க்கும் பின்னர்
மடந்தரு ஞானபேத வுணர்ச்சியை மற்றொ ழித்துப்
படர்ந்தவத் துவித ஞானப் பயன்பெறப் பண்ணு மன்றே. (௰௧)

அன்னதா லவித்தை வந்த தானசம் சார முற்றுந்
தன்னைவிட் டொழித லாகச் சச்சிதா நந்த ரூப
மன்னிடு மதுவே வீடாம் வாய்க்குமிப் பயனை யெண்ணிப்
பன்னினர் மறுமைக் காகும் புண்ணியம் பாவ மென்ன. (௰௨)

அவற்றுணற் பயனை யெய்தற் கறைந்தனர் பேத மான
தவத்துறை கன்ம மார்க்கஞ் சாதனை கொண்டு பாவந்
தவிர்த்தபின் பயனி னசை தானொழிப் பித்து கன்ம
நலத்தினை யுணர்த்திப் பிர்ம தத்துவ நன்கு காட்டும். (௰௩)

# ஸ்ரீ சங்கரவிஜயம்.

னக்கை வசமே யாக்கச் சகுணவு பாச னத்தைப்
பிக்க வோதிப் பின்னர் பகர்ந்திடும் பேதப் பொய்யைச்
கவித்து நிற்கு ணத்த வுபாசனை செப்பி யுண்மை
மூற்றத் துவிதத் துண்மை யினின்முடி வான தாக. (௰௪)

ப தேச மாக வடிக்கடி கூறி யிந்த
று கருத்தே யென்றன் மதமதாம் வழிமற் றில்லாய்த்
றிய மறைக ளெல்லாஞ் சேய்களுக் கின்று ளுத்தி
து கொண்டு ளார்ச்சி யாக்கலா யுலகங் காக்கும். (௰௫)

வயெலாம் பிரம கன்ம காண்டங்க ளிரண்டு நான்கு
யமா மறைகண் முற்றுந் தேர்ந்துட னுபத் தோன்று
வயற விறுவே நின்றன் சைமினி நற்க ருத்தா
வையிரு லறிவே னென்று விசைத்திடக் கேளா யென்றார். (௰௬)

ன்னவர் குரவ ரான வைநந்து மறையாங் காதை
ான்னவம் முனிவர் செய்த சூத்திரத் திதுவே தாமு
ன்னிய கருத்தா யோதி யுளரவர் சீடர் கொள்கை
னதே யாகு மன்றி முரண்பட வாகா தையா. (௰௭)

றையும வயாத ஞரு மநதற சட ருளளரு
ன்றிய கருத்துத் தம்மின் கருத்தது தோன்று மாறு
ான்றிய தென்ன வோதி யுளரென முதல தான
ன்றிறல் வாக்கி யங்கள் வகுத்தமண் டனற்குச் சொன்னா. (௰௮)

ண்டனன் கேட்டே யற்றேற் சைமினி வண்ட வத்தோர்
ாண்டதோர் கன்மந் தானுங் கொடுத்திடும் பயனை யென்ன
ண்டுமே கடவு டானு மிலையென விளம்ப லேங்க
ண்டலத் துறவி யாரே வழங்கிடு மென்னக் கேட்டான். (௰௯)

வகுரு மகனார் கேட்டுச் சிறுநகை செய்து சொல்வா
வமுறு நாத்தி கத்தோ ரவ்விதஞ் செய்தா ரன்றோ
வனமே கொண்ட தர்க்க ரொருவகைக் கார ணத்தா
வமுறு முத்தி காட்டி நாட்டின ருண்மை யென்றே. (௨௰)

# ஒன்பதாமத்தியாயம்.

ப்படிப் பட்ட தான விலக்கண முடைய விச
றப்புடன் கருதற் கொத்த வளவைபி லூற்றுக் காட்சி
பிர மாண மற்று பாசனை யாற்று மாறு
பில்லை தாந்த நூலா மொன்றி னூற் சாற்ற லாமே. (உக)

தை நிலை பெறச்செய் வண்ண மகத்தினிற் கொண்டே யுத்தி
கநிலை யொன்றே கொண்டு பகருநை யாயி யோரைக்
கமொடு மறுத்தற் காகக் கழறிய தருக்க ரோடே
தமுடன் பட்டாற் போலச் சைமினி யில்லை யென்றார் (உஉ)

த்திறத் தாலே யன்னார் நிரீச்சுர வாதி யல்லர்
த்தகா வென்னச் சொன்னார் விமலராந் துறவி யாரே
த்தமா ரைய மின்னுந் தீர்ந்திடா விசுவ ரூபன்
த்தியாய் நினைத்தா னந்தச் சைமினிப் பரமன் றன்னை. (உங)

ன்னெடு நாளாய்த் தம்மின் பனுவலை நம்பி யுள்ளா
ன்னக சயனத் தண்ண லாபியாம் பதுமம் வந்தோன்
னனுடை யமிச மாகித் தரைவரு மீடன் றன்னை
புண்ணிய படியீ டேற்றும் பொழுததா யோர்ந்து வந்தார். (உச)

சதுர்மறைக் கன்ம மார்க்கந் தன்னையே நம்பிப் பாவ
வதர்மமா நெறிக்கு மிக்க வச்சமுங் கொண்டே யாசான்
பதமலர்க் கன்பு கூர்ந்தே பொழுகிய பயனால் ஞானப்
பதிவுற வருக னாய் பண்டிதா விசுவ ரூப. (உரு)

இங்கமர் பரம வம்ச வீச்சுரச் சந்நி யாசி
யிங்கித மாகச் சொன்ன தென்கருத் தாகு மென்றன்
புங்கவ குருவி யாசர் புந்திகொள் கருத்து மாறு
யெங்குநா னிசைத்தே னில்லை யிதுவரை யுனக்கி யானே. (உசா)

குரவனு மிருந்தே னின்று முதலிவர் குருநீற் காவர்
மருவிய வெண்க ருத்தை யிவரறி வண்ணங் கேட்கிற்
றெரிதர விசைப்பேன் கேளாய்ச் சீவரின் சிந்தை யெல்லா
மொருபடி யாகத் தேர்ந்த வுத்தம ராவா ரென்றார் (உஎ)

ண முனிவர்க் கேசர் சைமினி யருந்த வர்க்குத்
ற மூர்த்தி யாகத் தரிசனங் காட்ட ஞானச்
நவா லவரு நோக்கிச் சங்கர னருளா னன்மைப்
நவம் பழமாய் வந்த பண்டிதா பாரா யென்றார் (உஅ)

சசி யாசி யோரெம் போலிய ரில்லை யன்றி
சக மேவு கின்ற மானிட ரெவரு மில்லை
ர வணிபான் பாரில் ஞானமா மாரி பெய்யும்
சமா முகிலே யாரும் பரமனு மென்று சொன்னார். (உகூ)

டல குருவா மிந்த மாதவன் மலர்ப்பா தத்தை
டிநற் சேவை செய்தே யாக்கமும் பெறுதி யென்ன
டனற் கோதி ஞான நோக்கமும் வழங்கிக் கன்மம்
டைசை மினியுஞ் சென்றார் வேண்டிய வாசி கூறி. (ஙய)

## வேறு.

சங்கைகொளு மண்டனனு ஞானமெனு
நோக்குடனே தரிசித் தானஞ்
சங்கரரும் பரமகுரு வார்தக்க
ளுமூர்த்தி தனித்தோற் றத்தே.
டங்கமர மனத்தினள வையமெலா
மகன்றொழிந்த வவன்மா னுக்கர்
செங்கமல நான்முகனு மிவனையுடன்
கண்டுமகிழ்ந் திறக்க லானார். (ஙக)

பின்னரவ னுக்கமனை யாவையுந்தன்
மகற்களித்துப் பிரயா சத்தாற்
றன்னுழைப்பாற் சேர்பொருளை யறவழியிற்
செலவிட்டுச் சங்க ரர்க்கு
மன்னுகளி வரச்செய்து கன்மவழி
வைராக்கம் வகித்துச் சுத்த
சந்நியச வாச்சிரமங் கொளவேண்டிச்
சங்கரரைத் தரவே கேட்டான். (ஙஉ)

அந்தருணஞ் சங்கரமா முனியுபய
பாரதியை யகத்தி லெண்ண
வுத்தமியு முன்வந்தா ளென்வெற்றிப்
பாட்டாலே யுனக்குத் தோன்றுஞ்
சித்தமதி யாதென்ன வினவவவண்
மகிழ்ந்தினிது சிறுமி யாகி
யத்தனகம் வாணுளி னடந்ததொரு
வரலாற்றை யறைத லானுள். (௩௩)

ஐயவென திளம்பருவ மாயிடையா
னிருந்தளவி லாலம் வீழ்தாய்ச்
செய்யதிருச் சடைதாங்கி நீறுக்க
மணிந்தவராய்ச் சிவனுக் கன்பார்
துய்யவரு மெம்மனைக்கு வந்தடைய
வருக்யமுற் றுலங்கச் செய்து
தையலென தன்னையும்பூ சித்தவரை
யுள்ளழைத்துச் சாற்ற லானுள். (௩௪)

ஆண்டவனே யென்மகளா மிவளுய்யும்
வகையாதோ வன்பாய் வாழு
மாண்டளவு மெத்தனையோ கணவனுறுந்
திறமேதோ வறையீ ரென்ன
மாண்டவருஞ் சிறிதளவு கண்மூடி
யோகத்தின் மனமி ருத்தி
நீண்டவெமின் மரபுவழி யாவையுமே
நிகழ்த்தவவை நிசமா யுற்ற. (௩௫)

மங்கையளே நினதுமகள வாணியின்கூ
றுடன்கொண்டு வந்தா ளாகும்
பொங்குகலி பரிவாரத் தோற்றமெனும்
புறமதத்த புத்த ராதிச்
சங்கையறு வாதிகளான் மறைமார்க்கந்
துன்பமுறுஞ் சமயந் தன்னிற்
செங்கையினில் வேலேந்துஞ் சண்முகன்
பட்டரெனத் திகழத் தோன்றி (௩௬)

வென்றிடனு மவன்றன்னை நான்முகனின்
        கூறுடைய விசுவ ரூபன்
சென்றடைவன் சீடனென வேதமுதற்
        காண்டமதைச் சிறக்கக் கற்றுத்
துன்றியநல் வேந்தர்களும் வேதியருஞ்
        சூழ்ந்தவராய்த் துதிபா டிற்பார்
மன்றலமர் குழன்மாதே நின்மகளு
        மவன்றனக்கு மனைவி யாவாள். (௩௭)

முக்கணனு ரமிசையொடு ஞானவழி
        நிலைநிறுத்த முன்னி யாங்குத்
தக்கபல சீடருடன் சங்கரமா
        துறவியருந் தருக்கப் பிச்சை
யொக்கவளி யாயென்ன வந்தவனை
        வென்றிடுவா ருயர்ந்தா ரான
வக்குரவ ரிவளுடனும் வாதாட
        வருவரென வறைந்து போனர். (௩௮)

சொற்றவையி லொன்றேனும் பொய்க்காது
        மெய்ம்மையுடன் றேன்றி வந்த
மற்றவைபோ லென்னுடனே வாதாட
        லொன்றன்றே வாதி லென்ற
னற்றவரை வென்றதனுன் முழுவெற்றி
        கொண்டதுவாய் நவில வொண்ணு
முற்றவுமே வெற்றிபெற வென்றனையும்
        வெல்லுமென மொழிந்து நின்றுள். (௩௯)

விரதமுடை துறவியரு மானமுடை
        யாடவரும் வேய்மென் றேளார்
சுரிகுழலி யாருடனே வாதிடுதன்
        முறையாமோ சொல்லா யென்னக்
கருவுடையா முனியரச கேட்டிடலுங்
        கலைவாணி கடல்சூ ழிந்த
விரிதலமே வந்தவளா மம்மங்கை
        மேலெழுந்து விளம்ப லுற்றுள். (௪௦)

## ஒன்பதாமத்தியாயம்.

சாத்திரங்க ளனைத்தையுமே நன்குணர்ந்
சிவ்வண்ணஞ் சாற்று வீரே
லேத்தரிய துறவியரே யானிசைப்ப
தென்னுகு மேன்ற வாது
வாய்த்திடமே புலையவனே திரியக்கு
சந்துவதோ மாதர் தாமோ
வாத்துமர்மற் றுரேனு முயர்வுடைய
துடலாகா தறிவே யாகும். (சக)

ஒழிபுடைய துறவிகளுக் கேன்வாது
மதவழியை யொழுங்கு செய்து
விழுமையுடை லோகோப காரமுறுங்
காரியத்தில் விருப்பங் கொண்டே
யொழுகிடுவர் சிறந்தவதி காரிகளே
யாவரதை யுற்று லன்றிப்
பழுதறவே வெற்றிகொண்ட தெவ்வாறு
முலகுபற்றிப் பகர்ந்தீர் போலும். (சஉ)

நீரெல்லாச் சுதந்தரமு முடையீச
னமிசரென நேர றிந்தேன்
சால்லை யெனைவெல்லாக் கால்வாது
விருதுதனைச் சேர்த்த பின்னர்
நேரில்லை யார்வரினு மெனவிருக்க
வேண்டாமோ நீரி லாருங்
காரல்லி விழிக்கர்க்கி யுடன்யாஞ்ஞ
வல்கியருங் கடுத்த வாதம். (சஙு)

புரிந்திலையா மேற்சுலபை யுடன்சனகன்
புரிந்திலையா புகழி லந்த
வருந்தவருங் குறைந்தாரோ யானெதிலுங்
குறைந்தவளா யமைவே னுயின்
பொருந்திடுத லில்லையென விலக்கிடலாம்
வாதினுமைப் பொருத வுள்ளேன்
றுரந்தரரே தய்வுசெய வேண்டுமெனத்
தோகையவ டொழுது சொன்னாள். (சச)

## ஸ்ரீ சங்கரவிஜயம்.

அப்பொழுது சங்கரருஞ் சபையாரி
னுடன்பாட்டை யடைந்து வாதக்
கொப்பினரவ் வாதியல்லை யந்தணனு
மந்தனுமே யுரைக்க லாற்று
ரிப்புவியின் மற்றவையா ரித்தகைத்த
சிறப்புடைத்தா மென்னத் தேர்ந்து
செப்பிடுவா ரவ்விதமே நடந்தது
பதினேழு தினத்திற் கம்மா.

ஆரணமோ டாகமபு ராண
காசகலை யங்க ளாவிற்
பூரணமாய் வாதாடி யவரைவெல
லரிதாகப் புனிதை யோர்ந்து
காரணமு மில்லையிவ ரிளமையிலே
துறவுகொண்டார் காம நூலி
லோரணுவு மறியாதா ரென்றெண்ணி
வினவிடுதற் குறுதி கொண்டாள்

தெரியாமற் பிரசங்கஞ் செயவொண்ணா
தன்றியுநாஞ் செப்புங் கேள்விக்
குரிமையுட னுத்தரமும் வழங்கிலரேற்
றோல்வியினை யுற்றா ராவர்
சரியான வழியிதுவே யென்றெண்ணிச்
சாரதையாந் தையலாளு
மரியாதை யாயுடனம் முனிவரரின்
முன்னின்று வழுத்து வாளே.

அங்கமிலா மதன்கலையு மெத்தனையா
மெவ்வாறு மமையுந் தான
மெங்குளதாம் வளர்பிறையி லெவ்வாறுந்
தேய்பிறையி லெவ்வா றுகு
மங்கையர்பா லெவ்விதமா மாடவர்பா
லெவ்விதமாம் வழுத்தீ ரென்னச்
சங்கரரவ் வினக்களையெல் லாங்கேட்டே
ருத்தரமுஞ் சாற்று துற்றார்.

## ஒன்பதாமத்தியாயம்.

பேரறிவு கொண்டதினாற் சிறிதளவு
யோசித்துப் பேசா தாற்றாற்
பூரியரா மெண்ணிலோர் புகன்றிட்டா
லறக்குறைவு புகுத லாகுஞ்
சீருடைய வம்மையளே யொருதிங்கள்
வரைபொறுத்தாற் செப்புங் கேள்விக்
கேருடனே பதிலுரைப்ப லென்றுரைத்தார்
தோகையுட னிசைந்தா ளன்றே. (௪௯)

அன்றுபதி னெட்டாநாட் பிரசங்க
முடிவுற்ற தவையோ ரெல்லாஞ்
சென்றனர்தம் மகத்திடமே யுடன்குருவுஞ்
சூழ்ந்ததிருச் சீட ரோடு
மொன்றியயோ கத்திடமால் வான்வழியே
செல்லுமையி லோர்நா டுற்று
வென்றுபரி கலைதீர்க்கு மோரடவிக்
குன்றுச்சி யிறங்கி னாரே. (௫௰)

அங்கொருமா மரத்தடியி லுயிர்நீத்த
சடமொன்றை யடக்கஞ் செய்யப்
பொங்கொலிநீர் வாரியென மாதர்களு
மற்றவரும் பொதுளி நின்று
கங்கலுறை கழுதுகளு மிரிந்தோட
வோவென்னக் கதறுங் காலை
பங்கயமா பாதனிது வென்னவெனக்
கேட்கவவர் பகர லானார். (௫௧)

குமரனென வெழிலாதி கொடுகாம
நூல்வல்ல கோமா னென
வமரகனென் பானிளமை யெழில்வாய்ந்த
மனைவியர்க ளநேக ரோடு
பமரநிறை யுய்யான வனம்போந்து
வேட்டையினைப் பற்ற வாங்குத்
தமரமுத மொழிமாதர் விட்டவனு
முயிர்நீத்தான் றயங்க வையா. (௫௨)

அப்பிணமே வைத்தவர்க ளழுகின்று
றதில்யானு மடைய வந்தச்
செப்பிணைமா மூலமாத ரணைவேந்தன்
மூர்ச்சித்த திறமே போலத்
துப்பிணைமா கொடிநகர்க்கு மீண்டெழுந்து
போந்தவனின் சுதன்ற னக்கே
யப்பணமா முடியாரும் பாரான
முடிசூட்டி யமைமேவ னுங்கு.

மனைவியர்கா மக்கலையின் றேர்ச்சிக்குச்
சான்றாக வாழ்ந்து பின்னர்
நினைவிரைவில் வந்தடைவல் யோகவலி
யாலேநீர் நீத்த விந்த
வினைவிரவு முடறன்னைக் காத்திடுமென்
றுணையிட்டார் விமல னுரு
நனைவிரைமா மலர்ப்பாதன் குருநாதர்ப்
பணிந்தெழுந்து நவில்வான் மன்னோ.

வேறு.

பேரறி வாளரே பேசுவ தென்னே
நீரறி யாதது நீணிலத் துண்டோ
வாரியு வாயினு மன்பினோ லோதக
கூரரு ளென்னிடங் கொண்டிவை கேண்மின்.

முன்னமச் சேந்திர மொய்ம்புடைச் சித்தன்
றன்னுடை யாக்கையைச் சார்ந்தகோ ரக்க
னென்னுநன் மாணவ னின்புடன் காக்கப்
பன்னியே வியந்ததோர் பார்த்திபன் கூட்டில்.

புக்கவ னாகியே புரந்தரன் போல
மிக்குயர் சீருடன் மேவுமந் நாட்டைத்
தக்கவா றாண்டிடத் தன்மமே யோங்கிச்
சொர்க்கமா டென்னவே தோன்றிய ததுவே.

# ஒன்பதாமத்தியாயம்.

இச்செயன் மந்திரி தேர்ந்துட னீங்கு
விச்சையில் வல்லவோர் சித்தனு மேவி
யுச்சித மாய்ப்பிர வேசமு முள்ளா
னிச்சய மீதென நெஞ்சினிற் கொண்டான்.

அப்பெரி யான்றனை யப்புற மேக
வொப்புத னேரல வென்றவ னோர்ந்தான்
செப்பிள வார்முலைச் சித்தினி மாதர்
பற்பலர் தங்களைப் பண்புடன் சேர்த்தான்.

அன்னமென் னடையவ ராட்டமும் பாட்டும்
பொன்னிற மேனியும் பொற்புமே சொக்க
மன்னவன் கூட்டுறை மாமுனி யோனு
முன்னவன் கொண்ணிலை முற்றும றந்தான்.

ஆசிரி யானரி யாணையின் வண்ணம்
பூசிதை யாயுடல் போற்றுகோ ரக்கன்
காசடை யாவணங் காத்துமே வந்தா
னேசமும் பத்தியு நேர்மையுங் கொண்டே.

சென்றன நாள்பல சேர்ந்தில னாசா
னென்றவ னோர்ந்துட னேந்தலின் மாதர்க்
கொன்றிய நாட்டிய மோதுவல் வேந்தே
யென்றிறம் பாருமென் றேயவன் போந்தான்

கோவது செய்யெனக் கூறின னன்னான்
பாவையர்க் காடலும் பாடலுஞ் சொல்லப்
போவதில் வாய்த்திடும் போழ்தினில் யோக
பாவமு மோதினன் பார்த்திப னுக்கே.

அக்கண முன்னடை யாக்கையி னெண்ணம்
பொக்கென வந்திட வேந்துடல் போட்டுச்
சிக்கென வேறுழைந் தான்றனின் றேச
மிக்கதை யானறி வேனெனச் சொன்னான்

பாவையர் கூட்டுற வைக்கொடு பாரில்
யாவரே நற்கதி யெய்தின ரையா
தேவரீர் விட்டிடா வீரியச் செல்வர்
பாவமே யல்லவோ பாழ்படச் செய்தல். (௬௫)

துறவிக ளாகிய நம்மிடந் தோன்று
மறவினை யெத்திற மாகுநா லெல்லா
மறவிழி வாமென வாயுறை காம
மறவினை யெத்திற மாமுனி யேறே. (௬௬)

ஆண்டவ னிவ்வித மாகிய வெண்ணம்
பூண்டிடின் பார்த்துமைப் பூவுல கெல்லா
மாண்டிடு மல்லவோ வாழ்த்துவ தென்னே
வேண்டிய தேதினால் வித்தகச் செல்வீர். (௬௭)

தாமரை மாமலர்த் தாளனு மன்பு
நேமமுங் கொண்டிவை கூறியே நிற்கச்
சோமனை யார்முடித் தொன்முனி யாரு
மாமறை யாய்ப்பதில் வாழ்த்துவ தானார். (௬௮)

புந்தியின் மிக்கவ போற்றருங் கூற்று
சந்ததஞ் சத்திய மாயினுஞ் சாற்று
மிந்தவு லாக்கையில் யானென தென்னும்
பந்தக மாயுள பற்றுடை யார்க்கே. (௬௯)

சொற்றவக் காமமுந் தொந்தகஞ் செய்யு
முற்றிய சித்தரை மூமறை ஞான
நற்றவக் காப்பினி னண்ணியின் ஞாலப
பற்றறுத் தோர்க்கதிற் பாதக மில்லை. (௭௰)

ஊயெனுந் தோளிடை மெல்லியர் போகத்
தாயினை கண்ணனுங் கழுக்குறை யுண்டோ
தீயினிற் பஞ்செனச் சுக்கிலந் தீயுந்
தூயவர் வச்சொலி போகமென் றுறையால் (௭௧)

## ஒன்பதாமத்தியாயம்.

தாங்குலை ராகமுந் தான்குறை யாது
தாங்கொளு மெண்ணவிச் சாதரு வித்தா
மாங்கது வென்றனை யாருமோர் விச
ணுங்கட வுட்கத னாற்பய முண்டோ. (எ௨)

பிரமமே தானெனப் பேசிடு வோர்க்கு
வருணமே யென்பன மாறுபா டில்லை
மருளினா லிச்சகம் வாத்தவ மாதுந்
தெருளினாற் பொய்யெனத் தேர்ந்திடு வோர்க்கு. (எ௩)

அச்சமுந் துன்பமு மாவதி னாலு
முச்சித வேள்விக ளோரெலை யறற
விச்சைமா வேதியர் வியந்திடக் கொல்லு
மச்செய லாற்பய னற்றவன் ஞானி. (எ௪)

ஏனெனி லத்தொழி லென்செய லென்று
நானெனு மச்செருக் காமதை நண்ணான்
வானிறை மெய்யறி வின்றியே வாழுஞ்
ஞானிக ளாஞ்சனி யாசிக ணல்ல. எ௫)

உணவென நாற்றுவர் தஞ்சிர மோச்சிப்
பிணநுக ரோரிகள் பிச்சுமே தின்ன
வணமுட னீந்தனன் மற்றுமப் பாவம்
பணவிடை யேனுமே பற்றிய துண்டோ, (எ௬)

அவ்வித மேயெனக் கவ்விரு கன்மங்
கவ்விய பற்றிலை யன்றியிக் காயத்
தொவ்விய வைம்பொறி யோடுமக் காமம்
வவ்வினுங் குற்றமோ வந்தெனைச் சேரா. (எஎ)

ஆயினு மிவ்வுல காரிய லொப்பத்
தூயவர் நன்னெறி பற்றியித் தூலக்
காயமுங் கொண்டியான் காத்தனன் னோன்பு
ஞாயமொ டாற்றிட வெண்ணியே நானும். (எஅ)

இத்தனு வுக்கொரு குற்றமு மெய்தா
தத்தம மாமிட மொப்பியே வைத்துச்
செத்தவக் கூடுறச் சேருவ லென்னப்
பத்தனு மொப்பினன் பண்புடைத் தென்னா. (எகூ)

ஒத்ததோர் பாறையிற் சங்கரர் யோக
வித்தையே யுற்றுடன் வாயுவை மேலே
யுத்தர மேயெழுத் தொன்றிய பொறியின்
மொய்த்துக வந்திட மூச்சிழுத் தாங்கு. (அ௰)

கும்பனஞ் செய்துபின் கூடுமை வாயு
வைம்பொறி கன்மமோ டைந்தெனுங் கருவி
வம்பிடு மாமனம் புத்தியென் வகுத்தி
யம்பிடு தத்துவ மார்ந்திடும் லிங்க. (அக)

ஆக்கையைச் சார்பிர்ம ரந்திர வாற்றிற்
றாக்கியே கொண்டுடன் வேந்தனின் றாலஞ்
சீக்கிரங் கால்விரற் கண்வழி சேர்ந்தார்
தூக்கமே விட்டெழுந் தோற்றமா யன்னான். (அஉ)

கண்டிறந் தேயுட னோக்கியுங் காலைப்
பண்டுபோ லாட்டியும் பேசிடப் பார்த்தா
ரண்டையி லுற்றவர் மூர்ச்சையா யான
துண்டதை யோர்ந்திடா துற்றன மென்றார். (அங)

ஆரிய னார சாயின ரன்னார்
சீரிய தாய்க்கரஞ் சேர்த்திடு மாழி
நேரிய தாமென நீடொளி காலச்
சூரியன் கீழ்த்திசைத் தோன்றினன் வந்து. (அச)

கோமகன் சூழ்பரி வாரமுங் கூட்டித்
தாமரை நீர்த்தட னித்திய தன்ம
நேமமா யாற்றியே நீணக ரேக
மாமறை யோரெதிர் கொண்டனர் வாழ்த்தி. (அரு)

ஒன்பதாமத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம். ருகூ௰.

# பத்தாமத்தியாயம்.

### வேறு.

சங்கர முனிவரர் மண்டன மிசிரன்
    றன்னுளத் தையமும் போக்கி
யங்கவன் மனையாள் காமநூல் பற்றி
    யறைவினாக் களுக்குநற் பதிலை
யிங்கித மாகச் சொலபர காய
    மெய்திய தன்மையைச் சொன்னே
மைங்கணை யானாற் சான்றுடன் றேர்ந்தே
    யவனையும் வென்றவா றறைவாம். (க)

அந்தண ரமைச்சர் முதலிய மற்று
    மரசவை யாருடன் சாந்தி
யந்தநற் கருமஞ் செய்துபட் டத்தி
    னதிதிமீ தூர்வலம் வந்து
சிந்தெனக் கருவி யீட்டமு ழார்க்கச்
    செய்யசிங் காதன மேறி
முந்தைய மனுநூன் முறைப்படி நீதி
    மொய்ம்புடன் புரந்தனர் வேந்தாய். (உ)

ஆங்கது வாகி யரசியல் பூண்ட
    வாண்டவர் மந்திரி யோரைப்
பாங்குடன் றமது வசமுறச் செய்,
    பன்னியர் நூற்றுவ ரோடும்
பூங்கணை மாரன் கலைதனிற் புகன்ற
    புணர்ச்சியோர் பத்துடன் சுவைத
னன்குட னைந்துந் தழுவுத லைந்து
    நாடொறுந் துய்த்துமே வந்தார். (௩)

குயிலெனுங் குரலுங் கிளியெனு மொழியுங்
    கோவையங் கனியெனு மிதழு
மயிலெனும் விழியும் வள்ளையென் காது
    மம்பொனு மலையெனுங் குயமு

# ஸ்ரீ சங்கரவிஜயம்.

மயிலெனுஞ் சாயை யோடன நடையும்
வாய்ந்தவம் மாதர்க ளெல்லாம்
பயிலுறும் போகப் புணர்ச்சியிற் பேதம்
பார்த்தமைச் சர்க்கறி வித்தார்.

நீதியா யாளு நேர்மையி னாலே
நீள்கலி முதலுக மாகி
மாதிர மெல்லாம் புகழ்ந்திட வாற்றல்
வலிமையி ரங்கொடை கல்வி
யாதிய வெல்லா மிருந்ததி னாலு
மரசனு மீண்டத னாலு
மீதொரு புதுமை யெனமதி யமைச்சர்
யாதென வெண்ணிட லானார்.

மன்னவன் றேகம் வந்தொரு சித்தர்
வதிந்துள ரென்றுடன் றேர்ந்தே
யந்நக ரெங்கு மாட்களை யேவி
யாவியி லாக்கையைக் கண்டால்
வன்னியில் வைத்துத் தீய்த்திடு மென்ன
வழங்கினன் மந்திரி யாணை
யன்னணந் தேட வேவலர் பலரு
மடைந்தனர் பலவிடங் களுக்கே.

தூதுவர் போந்து கண்டிடும் பிணத்தைச்
சுட்டனர் பலபல வாக
வீதுற வாங்குப் பாறையிற் பதும
வேரடி யானுமிக் கன்பாய்
நாதரி னுடலை முப்பது நாளு
நலிவடை யாவகை காத்தா
னோதிய வண்ண மன்னவ ரடையா
துணர்ந்துடன் றேடவே போந்தான்

இன்னிசை பாடும் புலவராம் வேட
மேற்றெழி னகரடைந் தாங்குத்
தன்னிலை யோகி தனக்கும்வண் டினுக்கு
சாற்றினர் முன்னிலை புறச்சொன்

மன்னிட வதனிற் றத்துவ மசியா
மாமறை முடிபினை வைத்து
மன்னவன் மகிழப் பாடியே சென்றார்
மணிநகர் கூடிய சீடர். (௮)

கேட்டுமுன் னுணர்வு கொண்டவர் பாடுங்
கீதத்தான் மயங்கினர் போல்
வாட்டமு முற்றச் சோர்ந்தனர் மீன
மாமணிப் பூணணி மன்னன்
கூட்டினை விட்டுக் கழன்றனர் வந்த
கூரிசை வல்லவர் தம்மி
னட்டமு முடனே மறைந்தது மன்ன
னிறந்தன னென்றழ லானார். (௯)

ஈங்கிது வாகச் சங்கர ருடலை
யிறந்தது வாமென வெண்ணி
யாங்கவர் வன்னி மூட்டியே வைத்தா
ரறிந்திதைச் சங்கரர் பின்ன
ரோங்கெரி யவிக்க நரசிம்ம வாழ்த்தை
யோதின ரவிந்தது நெருப்புந்
தேங்கமழ் துளப மாலவன் ருர
சிம்மமாத் தூக்கினன் றழுவி. (௰)

சங்கமர் செய்ய திருக்கரங் கொண்டு
தழுவலுந் தீயினுல் வெந்த
சங்கரர் தேகந் திவ்விய தேசாய்ச்
சார்ந்தது சீடர்கண் மீண்டு
மங்குவந் தடைந்தா ரன்னவ ரோடு
மாரண மண்டனன் மனைக்குச்
சங்கைசெய் யுபய பாரதி யாளைச்
சயித்திடு வானெணிப் போந்தார் (௧௧)

மணடனன் சீட ரோடெழுந் தாசான்
மலரடி வணங்கின னேத்தி
யொண்டொடி யாளு முற்றவை யாவு
முணர்ந்தன ளாகியே போற்ற

அந்தவா றதுவுங் கூடிய வவையி
லடைந்தது நோக்கின ரவையோர்
பைந்தொடி யாளுஞ் சங்கரர் தமக்குப்
பகர்ந்தனண் முழுமையும் வெற்றி
சந்தத மவளுஞ் சாரதை வடிவாய்த்
தன்பதி சார்ந்திட வவளை
வந்தனம் புரிந்து வடமொழித் துதிகள்
வழங்கினர் மாதவ முனிவர். (கரு)

அந்தரத் திடமே நின்றவ ளின்னி
னகத்தெணம் யாதெனக் கேட்கச்
சுந்தரி யுன்னை யெத்தலந் தன்னிற்
றாயமா மறையெலாம் புகழ
யந்திர மமர்த்தித் துதிப்பனோ வாங்கே
யிலக்குமி யுமையுட னீயு
மந்திர வடிவாய் வருகவென் றுரைக்க
மகிழ்ந்தவ ளிசைந்துடன் போனாள் (கச)

நித்திய வேள்வித் தீயினைத் தன்னு
ணிறைந்திட மண்டனன் செய்து
பத்திமை கொண்டு சங்கரர் தம்பாற்
பரவுறுந் துறவினைப் பெற்றான்
சுத்தவத் துவித வுண்மையை ஞான
சூரியச் சங்கர ருணர்த்த
நித்தையஞ் ஞான முற்றினு மொழித்து
விளங்கினன் ஞானமா மணியாய். (கரு)

ஆசிரி யாரி னுணையாற் சுரேச
வாசிரி யானென நாமம்
பேசுறப் பெற்றான் மண்டனன் றன்னைப்
பேணிய மறையவர் வேந்தர்

## பத்தாமத்தியாயம்.

நேசரும் பல்லோ ரத்துவி தத்தை
    நெஞ்சினின் விரும்பிரம் முனியின்
மாசறு தாளைச் சரணென வடைந்து
    மகிழ்ந்துப தேசமும் பெற்றார். (கசு)

மனைவியர் மக்கள் யாவரையும் விட்டு
    மாமுனி பணிவிடை செய்து
வினையெலா மகற்ற வேண்டின ராகி
    விமலர்பின் சென்றிட லானார்
நினையவிச் சேதி நாடெலாம் பரவ
    வேத்தினர் பாடியம் பார்த்துப்
பனையவ ரோடுஞ் சீசயி லத்தைப்
    பெருந்தவ முனிவரர் சேர்ந்தார். (கஎ)

அங்குபா தாள கங்கையின் மூழ்கி
    யன்புடன் பிரமராம் பிகைமன்
சங்கர மல்லி கார்ச்சுன மூர்த்தித்
    தரிசனஞ் செய்துபின் னேது
துங்கமா கிருஷ்ணைக் கரையுள பாசு
    பதரொடு சொல்லுசாத் தேயர்
மங்கலில் வைண வாதியர் பலரை
    வாதினில் வென்றனர் சிறக்க. (கஅ)

பக்குவ மடைந்து வந்தவர் தமக்குப்
    பரிவுட னுண்மையை யுரைத்துத்
தக்கநற் றவர்க ளன்புப சரணை
    தந்திடச் சிலதின மிருந்து
மிக்குற வந்த வீரறு சதமாம்
    வேறெனும் வாதரைச் சீடர்
புக்குடன் வெல்லச் செய்துல கோர்க்குப்
    போதமும் புலப்படச் செய்தார். (க௯)

பத்தாமத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள். கூாசு.

ஸ்ரீ சங்கர விஜயம்.

# பதினொன்று மத்தியாயம்.

வேறு.

வைரியங் கொண்ட காம வனிதையினைக் கேட்டா டன்னைத்
தைரிய மாக வென்ற தன்மையைச் சொன்னோ மேலே
வெயிலவன் சூழும் பாரில் விளங்குகா பாலி யோனும்
வைரவன் மரண மான மாட்சியை யெடுத்துச் சொல்வாம்.

சங்கரப் பெருமா னச்சீ சயிலமே யிருக்கு நாளிற்
பொங்குதம் மதத்தை வாதிற் போக்கிய மானத் தாலே
பங்கவர் தலைவ னுக்ர வைரவ னகத்தில் வஞ்சந்
தங்கிட முனிவர் தம்மைச் சதிசெய வெண்ணி னானே.

பக்குவச் சிந்தை யுள்ளான் பான்மையாய் நடித்துப் பத்தி
மிக்கசத் துவமே காட்டி வெண்பொடி மணியும் பூண்டே
யொக்கவத் துவித நூலே யோதியே சீடர் கூட்டம்
புக்கன னாகி வாய்க்கும் பொழுதெதிர் பார்த்தே யுற்றான்.

சீடர்க ளொருநா ளனுஞ் செய்திட நதிக்குச் சென்றார்
கூடிய காலந் தேர்ந்து குரவரை வேண்டி நிற்க
நாடிய தென்ன வென்று நங்குரு கேட்க வன்னான்
வாடிவந் தடைந்தான் மான மாமுனிக் குரைக்க லானான்.

முற்றிலுந் துறந்த வையா முடைத்தனு விச்சை தானுஞ்
சற்றள வேனு மில்லை தாவென விரந்தார் தம்மிற்
பற்றுடை யோரா யன்பு பயப்பதில் விருப்பங் கொண்டே
ருற்றவோ ரிச்சை யாலே யும்மைவந் தடைந்தே னன்பாய்.

யாதெனக் கேட்கில் யானு மீரறு வருட மாக
வேதமா வைர வோனை நினைந்துபூ சித்து வந்தேன்
மாதவத் தவந்தே யன்னான் வந்துமுன் றோன்றி யென்னை
போதமார் ஞானி யற்றேற் பூபதி பலியொன் றீந்தால்.

அப்பநின் னெண்ண முற்ற லாகுமென் றறைந்தான் வேந்த
னிப்படி யில்லை ஞான விரவியாந் தாமுஞ் சிந்தை
யொப்பிடி லென்ற னெண்ண மொருவித முற்று மென்னச்
செப்பிட முனிவ ரொப்பிச் சேர்ந்தனர் யோக நிட்டை. (௭)

தாமரைப் பாத னோடு சாற்றிய சீடர் சேர
லாமுனர் முடிக்க வெண்ணி யாயுத மத்த மேந்தி
மாமுனி யருகிற சார மலர்ப்பத னண்டு வந்து
தீமுகச் சினமே கொண்டான் செந்தழ லுகுத்த கண்கள். (அ)

சனந்தனன் குருபா லன்பு தழைத்திடுஞ் சிந்தை யாலே
சினந்துட னார சிம்ம தேவனை நினைத்தா னங்குக்
கனந்தணி பாத செந்தி கனன்றிடு சிகைவாள் பற்கள்
வனந்திரி கொடிய சிங்க மாமுகப் பெருமான் வந்தான் (௯)

வந்துமுன் னிரணி யோனை மார்பகங் கிழித்தாற் போலச்
சந்ததங் கிழித்துக் கொன்றான் சார்ந்தமற் றோர்க ளெல்லா
மந்தமா வொளியா லுள்ளே யடைந்திட வயர்ந்தா ராகி
வந்தனம் புரிந்தே யான வகையெலாங் கேட்டு நின்றார். (௰)

மாணவர் தலைமை வாய்ந்த மரைமலர்ப் பாதன் முன்பு
சேணிக ரகோப லத்திற் சிங்கமா முகத்தான் றோன்றிப்
பூணவே யளிவ ரத்தைப் புகன்றனன் செவிக்க ணாலே
காணுற வோசை யொன்று வந்ததக் கடவு ணின்று. (௧௧)

ஒலியெழும் விசையா லண்ட வுலகெலா மதிர்ந்த கேட்டு
வலியுறும் யோகம் விட்டு வந்தனர் முனிவர் பின்ன
ருலகினைக் காக்கும் விண்டு ஞானிய ருடலங் காப்பா
னலிவற வாழ்த்தி நன்றார் நானிலக் குருவாய் வந்தோர். (௧௨)

மண்டன மிசிர னாதி மற்றுள சீட ரெல்லாங்
கண்டுடன் பதும பாதன் காசினிக் குருவை யேத்திக்
கொண்டதோ துயர நீங்கி மிகக்களி கூர்ந்து வானத்
தண்டரே போல வின்ப வமுதினை யருந்தி னாரே. (௧௩)

## ஸ்ரீ சங்கரவிஜயம்.

நங்குரு செய்த தான நரசிம்மத் துதியை யிந்தச்
சங்கரர் கதையைப் பத்தி சமைந்தவ ராகி யோதும்
புங்கவர் கேட்குஞ் செல்வர் புகலப மிருத்து நீங்கி
மங்கல மெல்லாம் பெற்று மகிதல மகிழ வாழ்வார்.

பதினொன்ற மத்தியாய முற்றிற்று.

ஆக விருத்தம் ௬௨௩.

# பன்னிரண்டா மத்தியாயம்

வஞ்சகங் கொண்டு வந்த வைரவன் மரண மாகக்
கஞ்சமா தானன் செய்த காதையைச் சொன்னோ மேலே
துஞ்சிய மறையோன் சேயைத் தொன்முனி யெழுப்ப லாதி
யஞ்செயன் முறையை யெல்லா மறிந்தவா றறைகிற் பாமால். (௧)

நீத்தவர் தலைவ ரான நின்மலர் சீட ரோடுந்
தீர்த்தயாத் திரையைச் செய்து திருமக ணயனுந் தேவ
ரேத்தும காப லேச னினிதமர் கோகர் ணத்தைப்
பார்த்துவந் தடைந்தே யந்தப் பதியினிற் பகன்மூன் றுற்றார். (௨)

அங்குள மூர்த்தி தந்த வருளினைக் கொண்டு மேன்மை
தங்குமத் துவிதச் சான்றாய்ச் சமையரி யரன கர்க்குச்
சங்கரர் போய்ச்சி லேடை சாற்றியத் தேவை யேத்தித்
துங்கவர் வதியு மூகாம் பிகைநகர் தொழவே போனார். (௩)

அப்பதித் தெருவிற் போக வந்தணன் புதல்வன் மாண்ட
வொப்பருந் துயரா லேங்கி யோலமிட் டலறக் கேட்டே
யெய்ப்பற வவனைக் காக்க வெண்ணமுங் கொண்ட காலைத்
தப்பறக் காக்கும் வன்மை யற்றவ னலையவீ ணென்ன. (௪)

வான்மொழி சொல்ல மூன்று மகிதலங் காக்க வல்ல
மான்மியங் கொண்ட விற்கு மாத்திரந் தருமென் றுசா
னேன்மைகொண் டுரைக்கத் தூங்க நுகர்ந்துடன் விழித்தல் போல
வானமறை யவன்சேய் மீண்டா னவமெனக் களித்தார் யாரும். (௫)

## பதினொன்றாமத்தியாயம்.

மந்திர வடிவ மூகாம் பிகையினை வணங்கிப் பின்னர்
சுந்தர மலியும் வல்லி புரமெனுந் தொன்மை சான்ற
வந்தண ரகரந் தன்னி லன்புடன் பிச்சை யேற்றுச்
சிந்தையின் மகிழ்ந்தாங் குற்றார் சிலதினந் துறவி யாரே

ஆங்கு வேதிய ராற்றிடுங் கன்மமே
தாங்கு வாரவர் தந்தலை யானவ
னாங்கு மாமறை நூற்பிர பாகர
னோங்கு பட்டரின் சீடனு யுற்றவன். (எ)

சாற்று மப்பிர பாகரன் றாங்கிய
பேற்றி னாலொரு சேயினைப் பெற்றனன்
போற்று மாரணிப் பூதலத் தோருரு
வேற்று வந்தன னென்றுரை யேரவன். (அ)

இந்த மாமக வின்னெழி லானனச்
சந்த நோக்கியே சந்திர னேங்கிய
சிந்தை யார்கவல் கொண்டுமே தேய்கிறா
னந்த வாறல மற்றெது வாகுமே. (கூ)

என்ற போதினு மிவ்வுல கோர்யவே
லொன்று மின்றியே யோர்ந்திடு வானென
வென்றும் வாய்திற வாதுற யாவருந்
துன்று காரணந் தோற்றிலா தேங்கினர். (ய)

சான்று ளாயுளர் சார்ந்திடு வாரெனி
லேன்ற வாறிதைப் போக்கலா மென்றெணி
யீன்ற தாதையி ருப்புழி யெங்குரு
வான்ற நற்றிறங் கேட்டன னந்தணன் (யக

மைந்த னோடுந்த மாமுனி சேவைசெய்
சிந்தை கொண்டுடன் சேர்ந்தனன் கையடை
தந்து சேவடி தாழ்ந்துதன் பிள்ளையை
முந்தை சேர்த்துமொ ழிந்திட லாயினான். (யஉ)

ஐய விம்மக னைக்தெனு மாண்டள
வுய்ய லாஞ்செய லொன்றுமே கொண்டிலன்
வைய் கத்துள மாமுறை யின்படி
செய்யு நூற்சடங் கெட்டினிற் செய்தனன். (கங)

வேத மோதவி ழைந்திலன் வெஞ்சின
மேதுங் கொண்டில னேதுவு ணர்ந்திலே
காத வேண்டுவ நன்குறச் செய்தருள்
போத வாரியாம் புண்ணிய மூர்த்தியே. (கச)

என்ன வேண்டிட வெங்குரு சங்கர
ரின்ன ருட்சுரங் தேசிறு வேந்தலை
யென்ன காரண மேன்சட மாயுளாய்ப்
பன்னு வாயெனப் பண்புடன் கேட்டனர். (கரு)

அக்க ரத்துரு வாய்ந்தறி யாதசேய்
பக்கு வங்கொளு ஞானியின் பான்மையாய்த்
தக்க வாசட னானலன் சார்ந்துமுன்
சிக்க வேசடஞ் செல்கிற தெனபதாய். (கசா)

சச்சி தாநந்தத் தன்றிரு ரூபமா
நிச்ச யத்தைநி கழ்த்திட நேருட
னெச்ச மற்றிரு வாறுபா வோதலு
மெச்சி னருள வித்தகர் யாவரும். (கஎ)

வேறு.

மெய்த்த வத்த வாசிரிய
விமலர் சேயின் றலையிற்கை
வைத்து மத்தா மலகப்பேர்
வழங்கி யும்பின் றுதையழைத்
நித்த கைத்தா னிற்குதவான்
யாதும் விரும்பா னின்னிடத்திற்
செத்த பிறப்பிற் செய்வினையாற்
சிறந்த ஞானச் சித்திபெற்றான். (கஅ)

# பன்னிரண்டாமத்தியாயம்

உலக மயக்க முற்றொழித்த
வுயர்ந்தா னிவனென் றுரைத்திடலு
மிலகு சிறுவ னெங்குருவின்
னிணைமா மலர்த்தா ளிறைஞ்சியெழுந்
தலகில் ஞானச் சோதியரே
யடியேன் சென்னி த்தமதடிக
ளிலவைப் பெற்ற மாண்மியத்தா
னிகழ்ந்த திதுவென் றுரைத்தனனே.

துரங்க வாரி யெனச் சீடர்
தம்மோ டுத்தா மலகனையும்
வரங்க ளளிக்கு மாமுனிவர்
மகிழ்ந்தே கொண்டு வானிமிருஞ்
சிருங்க கிரிக்கு வந்தடைந்து
தெய்வத் துங்க பத்திரையின்
மருங்கி லுற்ற வளமாரு
மலர்க்காக் கரையை வந்தடைந்தார்.

ஒற்றைக் கொம்பு மாமுனியாம்
ருசிய சிங்க னுறைசாலை
பற்றி வேட்ட லாதிசெயும்
பார்ப்ப னர்க்குப் பாடியமு
மற்று நூல்க ளோதிவித்துத்
தலத்தின் வளமை கண்டாங்குக்
கற்றை யளகக் கலைமகட்குக்
கட்டு வித்தார் பெருங்கோயில்.

சாத்தி ரத்தின் றலைவாணி
தாபித் தென்றும் பூசைவிழா
வைத்தி நடக்கச் செய்துபின
ரேற்ற மாக [illegible]வாரமடமும்
ஆத்த சார தாபீடம்
வியாக்கி யான பொற்பீடஞ்
சேர்த்த பார தீசம்ப்ர
தாய மிவையுந் திகழவைத்தார்.

## வேறு.

ஆங்கிவைக டாபனமுஞ் செய்த பிற்றை
யன்புடன்சு ரேச்சுரனை யுலக மெல்லா
மோங்கியநற் குரவனென வணங்கும் வண்ண
முயர்வுடனா சாரியபி டேகஞ் செய்தா
ரீங்கெவர்கள் பாரதியாம் பீடந் தன்னை
யிழிவாக வெண்ணுவரோ வவர்க ளைய
தாங்கொடிய நரகத்தி லாழ்வார் மேலா
யகத்தெணுவார் ஞானசித்தி யடைவா ரென்ன. (௨௩)

நிக்கிரக மனுக்கிரக மிரண்டுந் தந்து
நீடூழி யம்மரபு வருவா ரெல்லாந்
தக்ககுரு வாகவென வாழ்த்த லானார்
சாற்றியவக் காலமுத லவ்வா றாகி
மிக்கமன மகிழ்ந்தவளாய்ச் சார தாம்பாள்
வித்தைவளர் பீடத்தி லமர்ந்தே யன்னார்க்
கெக்கணமும் வேண்டுவர மளித்துப் பூசை
யேற்றவளா யினிதுவளர் கின்றாண் மன்னோ. ௨௪

மெல்லுரையு நற்குணமுஞ் சிறப்புங் கொண்டு
மெய்யைநிழற் றொடர்வ தென விமலர்ப் பற்றி
நல்லபணி விடைபுரிந்து வந்தா னன்றி
ஞானமுறு நூலோதல் சிந்தை செய்து
வில்லவனு யாவரெவை கூறி னாலு
மினிமையுடன் மலைபோலப் பொறுமை வாய்ந்து
சொல்லரிய வெங்குருவைப் பேணி வந்தான்
றூயவொரு வேதியனுந் தொண்ட னாக. (௨௫)

அச்செயலா னனந்த கிரியா னென்ன
வவற்கொருபே ரிட்டழைத்தார் சீடர்க் கெல்லா
முச்சிதமாம் வேதாந்த பாடஞ் சொல்லி
யுறுவேளை குரவர்துகின் மாசு போக்க

## பன்னிரண்டா மத்தியாயம்.

மச்சவனை நதிக்கவனும் போக வாசான்
மற்றோர்க்குப் பாடமுறை யாதே யுற்று
ரிச்சையுட னவர்வேண்ட மிருமி னன்று
னெய்தியபின் றோதுவலென் றிசைத்திட்டாரே. (உ௬)

செங்கமலப் பாதனுட னெழுந்து நின்று
சிரபரனே யவன்செய்யும் பணியைச் செய்து
தங்கியுளன் பாடத்தை யவனுக் காகத்
தடைசெய்ய லேனோவென் றுரைக்கத் தேவ
ரங்கவனின் செருக்கடக்க வெண்ணித் தம்மின்
னளவற்ற கல்விவலி யாவு மந்தப்
புங்கவனே கொளுமாறு தானுஞ் செய்தார்
பொற்றுகிலின் மாசகழித் தவனும் வந்தான். (உ௭)

மாணவர்க ளனைவருஞ் சிறக்கு மாறு
வாய்த்ததொரு மெய்ஞ்ஞானப் பொலிவு தன்னைக்
காணுறுமா துரோடகமாம் விருத்தத் தாலே
கவியுரைத்துக் குருவாழ்த்தக் கஞ்சப் பாதன்
பேணுபிற சீடரெலாஞ் செருக்கை நீத்தார்
பின்னவனைத் துரோடகா சாரி யென்னப்
பூணுபெய ரிட்டழைத்து மகிழ்வாற் சிந்தை
பூரித்தே யவன்றன்னைப் புகழ்ந்தார் மன்னோ. (உ௮)

சங்கரரின் சீடர்களில் விசுவ ரூபன்
றுமரையம் பாதனத்தா மலக னோடு
துங்கமுறும் ஞானப்பே றுடையா னை
துரோடகனு மாகியவிந் நால்வர் தாமும்
பங்கமறத் திசைநான்கும் வெல்லு மாற்றல்
பற்றினராய் மறைகளொரு நான்கும் போலும்
பங்கயனின் முகங்களொரு நான்கும் போலும்
பார்புகழக் குருபணிகள் புரிந்து வந்தார். (உ௯)

பன்னிரண்டாமத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள். ௩௱௨.

# பதின்மூன்ரு மத்தியாயம்.

வேறு.

நங்குருவைப் பேணியவர் நந்தகிரி யானைத்
துங்கமுற வாண்டவகை சொற்றனஞ்சு ரேசப்
புங்கவனை யாண்டதொரு பொற்பமரு மாட
லிங்குசில சிற்றறிவுக் கேன்றளவி சைப்பாம். (க)

வித்தையினில் வல்லவஞ்சு ரேச்சுரனு மேலோன்
பத்தியுடன் சொல்லிபசா ரீரகமாம் பாடி
யத்தினைநல் லோருரையா லாக்கிடவே யெண்ணி
யத்தனடி வேண்டியிவை யன்புடனி சைப்பான். (உ)

பத்தியுடை சீடனவன் பாரிலுள நாளி
லெத்தகைய தாம்பணியி யற்றிடுதல் வேண்டு
முத்தமரே செப்பிடுமென் றோதிடலு மாசான்
சித்தமிக வன்பினொடு செப்புறத லானூர். (ங)

என்னுடைய பாடியத்திற் கின்னுரைவி ருத்தி
யுன்னளவி லோதெனவு ரைத்திடலு மன்னு
னின்னதிது வென்றறியா வேழையடி யேன்றுஞ்
சொன்னபடி செய்வனெனத் தோத்தரித்துச் சென்றான். (ச)

சங்கரர்த னித்திருக்கு மத்தருணந் தாதார்
பங்கயப தத்தனொடு பற்றுசிற்சு காசா
னங்குளமற் றோர்சிலரு மாயிடைய டைந்து
துங்கமுறு மண்டனன்மேற் கோள்பலவுஞ் சொன்னார். (ரு)

சொல்லரிய நந்துறவைத் தூடணமே செய்தா
னல்லலகே கம்புரிந்தா னத்துறவி யோர்க்கு
வல்லமையில் லாதவரே வாங்குவர்கா டாய
மல்லவர்கள் கன்மவழி யாவரெனச் சொன்னோன் (சா)

# பதின்மூன்றா மத்தியாயம்.

அன்னவன்சு ரேச்சுரனை யவ்விருத்தி யாற்றப்
புன்னிடுத னேரலதாம் பங்கயமா பாத
மின்னயமாச் சொற்றிடுவ னும்மதை யேற்கு
மென்னமுறைப் பாடுபல வேயியம்பி னார்கள்.

வேறு.

பிற்றை தாமரைத் தாளனேர் வந்துடன் பெரியோய்
சொற்ற பாடிய வார்த்திகஞ் சுரேச்சுரன் சொன்னான்
மற்றி யாரதை யொப்புவ ரத்தகா மலகன்
பெற்றி வாய்ந்திடச் செய்குவன் பேருல குய்ய

என்று கூறலுஞ் சங்கர ரினிதுறக் கேட்டு
நன்று நீசொல லாயினு நவின்றவச் சீட
னொன்று முள்ளினி னோக்கமே யியைந்தவ னன்றி
தூன்று மாவெளி நோக்கினிற் றுலங்குவ னல்லன்.

ஆதலாலவ னாற்றுரை யறைந்திடற் குதவான்
போத வென்றுநம் மாமுனி புகன்றிடக் கஞ்சப்
பாத னன்னவ னத்திற முள்ளனாய்ப் பகர
வேது யாதெனக் கேட்டிட வெம்முனி யிசைப்பா

பண்டை நாள்யமு னைக்கரைப் பக்கமோர் சித்தன்
குண்டை யூர்ந்தவன் கோலமாத் தவமொடுண் ணெக்கங்
கொண்டு வாழ்ந்திடு நாளொரு வந்தணக் கோதை
யெண்ட ரத்தகு மத்தகா மலகனை யேந்தி.

வந்து சித்தனின் பக்கலில் வைத்துநீ ராடுஞ்,
சிந்தை யோடவ ளேகிடச் செய்வினை யாடி
யுந்து நீர்க்கரை போயடைந் துன்னிவீழ்ந் திறக்க
வந்த னக்கொடி வருந்திமெய் பதைத்தற வழுதாள்.

சுற்றத் தாருடன் சித்தனின் றுணையடி முன்னர்
பெற்ற சேயினை வீழ்த்தியே பெருங்குர லோடு
பற்று கன்றொழி யாகெனப் பரிதவித் தேங்க
லுற்ற தேதெனச் சித்தனு முடன்விழித் துணர்ந்த

விளைந்த விச்செயல் தேர்ந்தருள் பயந்திட விழைந்து
தளைந்த தன்னுடல் விட்டுசேய் தன்னுட னுழைந்தான்
கிளர்ந்த மீப்பொலி வோடுசேய் கேடறப் பார்த்து
வளைந்த யாவரு மளவரு மகிழ்ச்சியை யடைந்தார். (க௪)

சித்தன் கூடிய வுடல்கொளுஞ் சிறுவனா மிவனே
சுத்த ஞானமும் வாய்ந்தவ னாயினுந் துலங்க
வித்த லத்தவர்க் குரைசெய வேற்றவ னல்லன்
வித்த காவென விளம்பினர் மெய்பறி வுடையார். (க௫)

வாது செய்தன னென்னொடிம் மண்டன னதனால்
யாது வல்லமை கொண்டவ னென்பதை யறிவேன்
போது வந்தவந் நான்முக னமிசமே பொருந்தி
மாது தன்னொடுந் தோன்றிய மாண்புடை யானும். (க௬)

அவ்வினை யன்றிமற் றார்சொல வாற்றுவ ரேனுந்
தவறு வாய்ந்திடு நும்மெனத் தடுத்தியான் செய்தாற்
றவமு ஞானமுந் தாங்கிய சீடரே யென்னச்
சிவனி னம்சரா மாமுனி செப்பினர் சிறக்க (க௭)

கேட்ட சீடர்க ளனைவரும் வார்த்திகங் கிளத்தத்
தோட்ட லர்ப்பதன் றனக்கொரு வாணையைச் சொல்லும்
வாட்ட மற்றிட வென்னவே வழுத்திட முனிவர்
நாட்ட லாமவன் வேறுரை நயம்பெற வென்றார். (க௮)

ஐய மண்டன நின்னுடை யாற்றிலின் மிகவும்
வெய்ய தாம்பகை கொண்டுள ராதலின் விருத்தி
செய்யும் வார்த்திகஞ் செப்புத லொழித்துநீ வேறு
துய்ய தாமொரு நூல்சமை யெனக்குரு சொன்னார். (க௯)

குரவ ராணையைச் சிரமிசைக் கொண்டுசு ரேசன்
மருவு கீர்த்தியு மற்றது மனத்திலெண் ணாது
பொருவி லாத நைட் கன்மிய சித்திநூல் போற்றும்
பெருமை வாய்ந்தசம் க்ஷேபசா ரீரகம் பேசி. (உ௰)

# பதின்மூன்று மத்தியாயம்.

ஆசி தான்பெறக் குருமுனர் வைத்தன னகத்தின்
மாசி யாவையு மையமு மாணவர்க் கொழிந்த
காசி லாவுல கோர்க்குப காரமா யிற்றே
யீச னுக்குரு களித்தன ரிச்செய னோக்கி.

சீற்ற மிக்கவு மண்டனன் சிந்தையிற் கொண்டு
போற்று மெங்குரு வாணைமேற் புரிந்தியான் வந்த
வேற்ற மாம்பணிக் கெவர்தடை யியற்றின ரவர்கள்
சாற்று நூன்முடி யாதெனச் சபித்தன்ன் வெம்பி.

அற்றை நாள்வரை தாமரை யடியவன் முனிவர்
சொற்ற பாடியத் தைந்தடி களுக்குரை துலங்க
முற்ற வோதியே முனிவர்முன் மொழிந்துமே வந்தா
னற்றை மண்டனன் சாபமு மாய்ந்தன னம்மா.

சீட ரோடவன் குருவிடை பெற்றுநற் றீர்த்த
மாட வுந்திருப் பதிகளி லீச்சுரர்க் கன்பாய்ப்
பாட வுஞ்செய லாகியப் பனுவலை முடிக்க
நாட வேண்டுமென் னெண்ணமு நனியுளங் கொண்டா.

வேறு.

என்றுனு மண்டனன்றன் குருவாணைக்
கோர்தடைவந் தெய்திற் றென்ற
துன்றுத கவலையினா லுள்ளுடைந்து
வருந்துதலுந் துறவோர்க் கீசன்
கன்றுத படியவனைத் தேற்றிடற்குப்
பிறசாகைக் காரர் தாமு
மன்றுடுந் தடையறநீ கிருஷ்ணயசுஸ்
சுக்லயசுஸ் வகைக்கு நான்செய்.

பாடியங்க டமக்கிரண்டு வார்த்திகத்தைப்
பண்புடனே பகரா யென்ன
நாடியங்க முறையாலே யவனமைத்துக்
குரவனிரு நளினப் பாதஞ்

# ஸ்ரீ சங்கரவிஜயம்.

சூடியங்கு வைத்தனனம் முனிவர்மிக
மகிழ்வுற்றார் தொகுத்த தான
பாடியம்ப வவையிரண்டுஞ் சிரோங்கிப்
பரவியுள பாரி லெங்கும்.

தாமரையம் பாதனுந்தா னாசிரிய
தக்கணையைத் தரவே வேண்டி
நேமமுடன் செய்பிரம சூத்திரத்தி
னுரைதன்னை நெடிதா ராய்ந்து
வாமமுறு முத்திபல சேர்விசய
டிண்டிமமா மாநா லாற்றிக்
காமமுத லறுபகையை வென்றமுனி
யார்முன்னங் களிக்க வைத்தான்.

சங்கரரு மதுநோக்கி யிதுவாதுக்
குரியுத்தி சமைந்த தன்றிப்
பங்கமற வுணர்ச்சிகொளற் குதவாது
நின் பஞ்ச பாதி கையே
துங்கமுறு மதனுள்ளு முதலைந்து
சூத்திரங்க டிலங்கு நன்றே
யங்கவையி லிரண்டெடக்குத் தக்கணையாங்
கல்விப்பே றதைவா யென்றார்

குருவரசை வணங்கியவன் மற்றுபதி
னொன்றுக்குக் கூறு மென்ற
னொருவுரையே யுண்டாக வருளுமென
வேண்டவர னுதவு கின்ற
திருவருளால் வேறுவித மாமுடிவைப்
பெறுமென்னச் செப்ப முன்னர்
மருவுறுபா கம்பஞ்ச பாதிகையும்
பின்னதுவி வரண மென்றும்.

பெயராகி வழங்கிவருஞ் சுரேச்சுரன்றா
னப்பேறு பெறுதற் கில்லாத்
துயராகி யுள்ளுடைய வாசிரியார்
மிக்கவருட் சுரந்தே யையா

## பதின்மூன்று மத்தியாயம்

வயராதே நீயின்னு மெண்ணுறு
வயதிந்த வாக்கை யோடு
மபராத தவம்புரிந்து மறுபிறப்பிற்
சாதிக்க வல்லோ னுவாய். (௬௰)

அப்பிறவி தனில் வாசஸ் பதியென்னும்
பேர்வகித்தே யாத்தி கத்திற்
செப்பரிய பாடியமோ ராறுடனே
நாத்திகத்திற் சிறக்க வாறு
மிப்புவியோ ரோதவுரை யாசிரிய
னயிடுவை யெல்லா மீது
மொப்பனுறுஞ் சித்தாந்த மாகுமென்றன்
பாடியத்திற் குரையுஞ் சொல்வாய். (௬௧)

ஆற்றலரு மிச்செயலா னழிவற்ற
புண்ணியப்பே றடைவாய் மேலு
நாற்றிசையு முனைப்புகழு நின்வயினூர்
குருக்கூறு நலமே மல்க
வேற்றமிக வாய்ந்ததுவா மவ்வுரைக
ணெடுநாளைக் கிருக்கு மென்னத்
தேற்றமுற வாசிரியார் செப்பிடலு
மண்டனனுந் திருத்தி யானன். (௬௨)

பின்னருள வானந்த கிரிமுதல
சீடர்களைப் பெருமான் கூவிப்
பன்னரிய வத்துவிதச் சித்தாந்தந்
தனைப்பற்றிப் பனுவல் செப்பு
மென்னவவ ரவ்விதமே தம்மளவை
யின்படியே யியற்றி யாசான்
முன்னரளி தக்கணையா வைக்கவவ
ரேற்றுச்சி மொழிந்தார் மன்னோ. (௬௩)

பதின்மூன்றுமத்தியாய முற்றிற்று

ஆக விருத்தம் ௬௨௮.

# பதினான்கா மத்தியாயம்.

## வேறு.

வேணி நீத்து முண்ட னத்தின் விழுமை சாங்கி மானமழு
பூணு நீத்துத் தண்டு தாங்கிப் புலித்தோ னீத்துக் காவிதோய
காணுந் தூசு டுத்தார் சீட ராண்ட காதை காட்டினம்
பேணு மன்னை கன்மஞ் செய்த பெற்றி மேலே பேசுவாம். (௧)

பதும பாதன் றீர்த்த மாடற் பயணம் வேண்டி நங்குரு
பதமுஞ் சென்னி சூடி வேண்டப்பிரம னந்த யாத்திரை
விதியுஞ் சன்னி யாசி யோரின் வித்தி யாச முஞ்சொலி
யிதய மன்பு கொண்டு நீவி ரேகி வாரு மென்றனர். (௨)

ஞான நோக்கி லன்னை யிற்று நாளு ணர்ந்து வான்வழி
தான டைந்து தாயின் முன்னர்ச் சார்ந்து நின்றார் சங்கரர்
போன மைந்தன் மீண்டும வந்த புதுமை நோக்கி யன்னையு
நான நேக நாளாய்க் கோரு நன்மை யுற்ற தென்றனள். (௩)

அப்பா வென்றன் கன்ம மாற்றி யரிய தாம்ப தங்கொளத்
தப்பலின்றி நீயே செய்க ற்கதி பெ னச் சாற்றினள்
சிற்ப தத்த ஞான மார்க்கந் திகழு மீர்க்கு ணத்ததாய்ச்
செப்பு பாச னத்தின் சீரைத் தெரியச் சொன்னார் சங்கரர் (௪)

அந்த மார்க்க மம்மை யாட்கோ ரணுவும் பற்றா தாயிட
மைந்த வெற்குந் தக்க தல்ல வழங்கு கின்றன் மார்க்கமே
சிந்தை யேற்கும் வண்ண மீண்டுச் செய்ய வல்ல னாவையோ
புந்தி யுள்ள பாலா வென்னப் புசங்க நீக்க மற்றதாய். (௫)

எட்டுச் சந்தப் பாட லாலே யிறைவன் வேண்ட வீச்சுர
னிட்ட வாணை வண்ண மம்மை யிருகண் முன்னர் சூலியர்
மட்டி லாத பேர்க டோன்ற மாது கண்ணை மூடியே
யிட்ட மில்லை யின்னா ரோடே யேக மாட்டே னென்றனள். (௬)

இந்தப் பேறு நிற்கு வாய்க்கா திருத்த லென்ன வென்றெணிச்
சிந்தைக் கொத்த தென்ன வென்னத் தேறி நான்கு தோள்களும்
பைந்து ழாயு மாழி சங்கு படைக ளுங்கொள் விண்டுவைப்
புந்தி யெண்ண வம்மை முன்னர் பொற்போ டுற்றான் மாலுமே (௭)

கண்டு பன்னி ரண்டு நாமங் களையு முச்ச ரித்துமே
விண்டு பாத நீழ றன்னில் விட்டா ளம்மை பொய்யுடல்
புண்ட ரீகக் கண்ணன் மீது புசங்கஞ் சொன்னார் சங்கரர்
கொண்டு போனார் மான மீது கோதை தன்னைத் தூதுவர் (௮)

மங்கை யாளை முத்தி யாம்வை குண்டம் வைத்தார் மாண்புட
னங்குப் பின்னர் வன்னி வைத்த லாதி செய்க டன்களைத்
துங்க ராற்ற வேண்டி யுற்றார் சுற்றார் கூட்டி வேள்வியர்
தலகும் விட்டி னின்று வன்னி தாரு மென்ன வேண்டினர். (௯)

சன்னி யாசி யோர்கள் செய்யத் தக்க தல்ல தென்றுமே
யன்னி யோர்க்கே யன்றி யின்னார்க் கந்தி டைய பந்தமி
லுன்னி டாது செய்வ ரல்ல ரொப்பி நிற்ற லுத்தம
மென்னிவ் வாறும பேசி நின்றா ரிருந்த சிற்சில் வேதியர். (௰)

சாத்தி ரத்திற் சாற்று மாறு தாந டப்பார தக்கவ
ரேத்து சன்னி யாசங் கொண்டா ரேனு மின்று டன்கட
னீத்த லின்றி யாற்றன் மிக்க நேரி தென்றும் பல்விதம்
வாய்த்த வண்ணம் பேசி யீற்றில் வன்னி யீயா தேகினர். (௧௧)

சீற்றங் கொண்டு நீவிர் நீத்தார் செய்யும் பிச்சை யீந்திட
வாற்ற லற்றா ராக வேதத் தப்பு றத்தா ராகுக
போற்று நுங்கள் வீட்டிற் றானே பொருந்த லாம யானமே
கூற்றின் மிக்க வன்மை நெஞ்சக் கொடியீ ரென்னக் கூறினார். (௧௨)

தாங்கிச் செல்வா ரின்மை யாலே தம்பி ரண்டு கைகளை
யாங்குத் தேய்த்துச் செங்க ரத்தி லங்கி கொண்டு வீட்டையே
யோங்கு கட்டை யாக்கிக் கையி லுற்ற நற்க மண்டல
மாங்கு ளிர்ந்த நீர்தெ ளித்தே யம்மை கன்ம மாற்றினர். (௧௩)

வேத விஞ்ஞை சொல்லி நிற்க வேதி யோர்க ளின்மையாற்
கீதம் பாடும் பட்சி சாலங் கிளைத்த லான மாமறை
மீத வத்தி சுத்த மாக வேண்டி யத்தி யாரிணி
யோத வாறு வந்த தாங்கே யோது கன்னை வேண்டவே. (கச)

இன்னவாறு நம்பி னூசா னின்றுள் கன்ம முற்றியே
சன்னி யாசி யாரு மிந்தத் தலத்து வாரா ரெனவே
பன்னி யாங்கு விட்டு வானப் பாதை கூடிப் போயினர்
பின்னர் சஞ்சப் பாதன் சேதி பேசு கிற்பாஞ் சிறிசில. (கரு)

வேறு.

மூளரியம் பாதன் முன்னர் வடநகர் முற்றும் போந்தே
யுளமகிழ் வாக நல்ல வுதகமு மாடி மிக்க
வளமுறுந் தென்னாட் டுள்ள மாமரக் காஞ்சி தில்லை
யுளபதி யாவுஞ் சென்றே யுற்றனன் றிருவ ரங்கம். (கசா)

ஆண்டவன் றனது பூர்வ வாச்ரமத் தம்மான் வீட்டில்
வேண்டிய பின்னர்ப் பிச்சை செய்திட மேவ லானன்
பூண்டதோர் புகழான் முற்றும் பூர்வமீ மாஞ்சை தேர்ந்த
னீண்டிய சீடர் பல்லோ ரினைந்தவ னந்த வம்மான். (கஎ)

தாமரைத் தாளன் முன்செய் பாடிய விருத்தி தன்னை
மாமனுக் கெடுத்துக் காட்ட மகிழ்ந்தன னவனென் றாலு
நேமமாந் தன்கொள் கைக்கு மறுப்பென நேர்ந்தென் றேங்கி
யாமிதை வெளிக்கா ட்டாதே யறைந்தநூன் மெச்சி னானே. (கஅ)

பாடிய நூலை யெல்லாம் பத்திரஞ் செய்யச் சொல்லி
நீடிய பாவம் போக்குஞ் சேதுவி னீரா டற்கா
வேடவிழ் சஞ்சப் பாத னேகின னீண்டம் மாமன்
கூடிய வூரார் தன்னைக் குறைவரென் றஞ்சி னானே.

அகத்திடை மதிவி ரோத வக்கினி மூண்ட தாலே
யகத்துளார் வெளியிற் போக்கி யாரழல் வீட்டின் மூட்டி
மகத்துவத் துறவி யாக்க மாண்டதே யந்தோ வென்னச்
சகத்துளார் காண வேண்டித் தயங்குமா நடித்தா னன்றே

# பதினான்கா மத்தியாயம்.

தக்கண நாட்டி லுள்ள தலமெலாம் போந்தி றைஞ்சித்
துக்கமாந் தொடர்ச்சி யாவுந் தொலைத்திடு நதிக ளாடி
சங்கரத் தங்க மென்னு வைணவன் தடுத்துச் சுத்த
மிக்குறும் வைண வாத்து விதத்தினை விளங்கச் செய்தான். (௨௧)

அலைகட னடுவ ணாதி சேடன்மீ தமர்ந்த வண்ண
லுலைவுறு மமரர்க் காக வோரர சாகித் தன்னின்
றலைவியைத் தூக்கிச் சென்ற தசசிரன் றன்னைக் கொல்லச்
சிலைசிரந் தாங்கத் தூங்குந் திருப்புலா ணிக்குச் சென்றான். (௨௨)

சனந்தன னாண்டு முந்நீர்ச் சாகரங் குடித்தாற் கான
மனந்தள ராது முந்நாண் மாதவம் புரிய வன்னான்
முனந்தரு காட்சி தந்து மொழிந்தனன் பலவும் பின்னர்
கனந்திகழ் மெய்யி ராமன் காதையுங் கழறி னானே. (௨௩)

தேவையின் பெருமை யெல்லாஞ் சிறுமுனி வரன்பாற் கேட்டி
யாவையுங் கண்ணாற் கண்டே யிதயமுங் களிக்க வேண்டுந்
தேவையா லவணே போந்து சேதுவி லாடி யீசன்
சேவையுஞ் செய்து சேர்ந்தான் றிருவரங் கத்தை மீண்டும். (௨௪)

வைத்தவன் நூல்க ளெல்லாம் வன்னிவாய்ப் பட்ட வஞ்ச
கத்தினை யறிந்து மிக்கக் கலங்கினன் மீண்டுஞ் செய்ய
வெத்தனஞ் செய்தா னந்த விருந்திறல் கண்டே யன்னான்
பைத்தியங் கொள்ளச் செய்தான் மருந்தினாற் பாவி யம்மான். (௨௫)

நுண்ணறி வின்றிச் சொற்ப வறிவொடு நூற்கு மீண்டும்
பண்ணின னுரையுஞ் சைய கிரியினின் பக்க லுற்ற
தண்ணளிக் குரவ ரான சங்கர ரிடமே போந்தவ்
வண்ணல்பா லுற்ற வெல்லா மறைந்தனன் வருத்தத் தோடும். (௨௬

சங்கரப் பெருமான் றன்னைத் தரிசனஞ் செய்த காலைப்
பங்கயப் பாதன் கொண்ட பைத்திய நீங்கிற் றேனு
மங்கியி னூல்செய் யாற்றல் வந்திடப் பெற்றா னில்லை
யுந்தது வாய்க்க வேதி யாதென வவரைக் கேட்டான்.

மண்டன மிசிரன் சாப வன்மையால் வந்த தாகு
முண்டக வடியா யென்ன மொழிந்துடன் முனிவர் தாமே
பண்டைய வந்தப் பஞ்ச பாதிகை யெழுதி நன்கு
கண்டிட வளித்தா ரன்னோன் களிப்பெனுங் கடலி லாழ்ந்தான். (௨௮)

பாருள தலங்க ளெல்லாம் பரவிய திந்தச் சேதி
காரள வாக நின்று கவிமழை பொழிய வல்ல
கேரள நாட்டி ராச சேகரன் கேள்வி யாகிச்
சீருள முனிவர் பாதஞ் சிரமிசைச் சேர்த்துச் சொல்வான். (௨௯)

பூமகன் மாலை யென்னும் புத்தக சாலை மூன்று
தீமுகம் பட்ட தாகச் சேர்கவித் துவமா மென்ற
ஞூமமார் நூலுஞ் சேர்ந்து நாசமே யுற்ற தென்னத்
தாமுட னவைகள் சொல்லித் தந்தருள் பொழிந்தார் மன்னோ (௩௰)

பார்த்திப னடியேன் செய்யும் பணிவிடை யாதா பென்ன
நீத்தவர் தலைவ ரானோர் நிருபனே நினநாட் டிற்கண்
பூத்தபா மறையோர் வேதப் புறத்தவ ரென்று கூறி
யேத்திய சிட்ட ரோடு மேகின ரவிடம் விட்டு. (௩௧)

பதினான்கா மத்தியாயம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௭௰௯.

# பதினைந்தா மத்தியாயம்.

வேறு.

முக்கண னமிசர் காலடி சார்ந்து
முதிர்ந்தகன் னன்னையின் கன்மந்
தக்கவா றாற்றித் தாமரைத் தாளன்
றளர்வறப் பஞ்சபா திகையை
யக்கண மவற்குக் கொடுத்ததோர் காதை
யறைந்தன மேலவர் சென்று
திக்கினில் விசயஞ் செய்தவா றெடுத்துச்
சீர்பெறச் செப்புவாஞ் சிறிதே.

அத்தகா மலக னம்புயத் தாள
 னாதிய சீடர்க ளோடு
மத்தமே சாப மேந்திய சுதன்ம
 வரசனு முடன்வர முனிவ
ருத்தர முதல திக்குகள் விசய
 மூனற் றவான் றிருவிடை மருதா
ருத்தம தலமே யடைந்தமர் வேத
 வுருவனைத் தரிசனஞ் செய்தார். (௨)

அங்குள வோர்க்குஞ் சத்திய மத்து
 விதமென வறையிலிங் கேசன்
றங்கமா வாக்கி யத்தினு லுண்மை.
 துலங்கிடச் செய்துபின் னவரைப்
பொங்குமா தவமும் ஞானமும் புணர்ந்த
 புனிதரா யாக்கினர் பலவாய்ச்
சங்கையே தாங்கி வாதுற வேண்டிச்
 சார்ந்தன ரவரிடம் பலபேர். (௩)

தாங்கிய லிங்கந் தரித்தலாம் வீர
 சைவமாம் விரதமே யொழிய
வீங்கெமக் கந்தச் சைவமும் விருப்பா
 மியம்பிடும் வைணவ தீக்கை
நீங்கிய பக்கம் விருப்புள தாகு
 நீள்சடை யென்பணி யாது
பாங்குறச் செய்கா பாலியின் பூசை
 பரிவுட னெமக்குடன் பாடாம். (௪)

சத்தியின் பூசை விருப்புள தாகுந்
 தசையொடு நறவொழித் தாற்றில்
சுத்தசெந் நிறமாஞ் சந்தன மொழியச்
 சூரிய பூசையெம் விருப்பா
மத்தியின் முகத்தான் பூசையி லெச்சி
 லகற்றிடி லதுவிருப் புளதா
மித்தகை யாறு மதங்களும் விருப்பா
 மெனமுனி யொப்பின ரினிதே (௫)

அருமறை வடிவா யறுவகை மதத்தோ
ரன்புறுங் கடவுளர் தம்மி
னுருவமா யெல்லாத் தெய்வமுந் தானு
யுயிர்களி னறிவுரு வாகி
மருவிடுஞ் சரமோ டசரமுந் தானுய்
மறைமுடிப் பொருளது வாகித்
தெருளுறு மிச்சை வடிவமா மாயைச்
செயல்கொடிவ் வுலகினை யாட்டும். (சா)

நாடகத் தலைவ னாகிய வொன்று
நம்பனும் பரசிவ மொன்றே
பீடுடை யுண்மைப் பொருளதா மன்றிப்
பிறிதொரு பொருளிலை யென்னக்
கூடியின் மறையின் முடிபள வானே
கூறிச்சித் தாந்தமே செய்து
நாடிய வந்தப் பரசிவா நந்த
நலம்பெறப் பெறுவகை நவில்வார் (எ)

தன்னிடந் தனிலே யான்மலிங் கோபா
சனையினைப் புரிந்தத னிடத்தி
னுன்னிய தெய்வ மொன்றினைக் குரவ
னுரைப்படி மந்திர யோக
மன்னிய தியான வுபாசனை செய்து
மற்றது பூரண மாக
முன்னதாஞ் சகுண வித்தையா லத்து
விதமுறை முயன்றவ னாகி. (அ)

கருமநூன் முறையில் வேள்விமெய் விரத
கடுந்தவம் புரிந்துமே யன்பாய்த்
தருமமா மூர்த்திப் பூசனை யாற்றித்
தங்குபா வத்தினைப் போக்கி
யருமைய தான புண்ணிய வலியா
லாத்திகத் தன்மையுந் தெய்வக்
குருவிடம் நல்ல பத்தியும் வன்மை
கொள்ளுமா செய்திட வேண்டும். (கூ)

சிந்தையை யடக்கிப் பயிறரு யோகச்
செயலினுற் சிந்தையிற் றூய்மை
வந்திடப் பெற்று மறையின தந்த
மனமுறக் கேட்டுவை ராகஞ்
சிந்திடா தடைந்து தேவருள் பெற்று
சிரியரி னின்னரு ளாலே
சந்ததம் பெறலாம் விதேககை வல்யந்
தடையிலே தாரணி யோர்க்கே. (ய)

உத்திக ளோடு சுருதியா தார
முறைத்தவ ருளங்கொளச் செய்து
பத்திமை கொண்ட சீடர்க ளாகப்
பரமருஞ் செய்தனர் சிறக்க
வித்தையின் வலிமை விளங்கிட முனிவர்
விழைந்தில ருயிரிடந் தயையா
லித்தகை வாது புரிந்தன ரன்றி
யேனைய காரண மின்றே. (யக)

சிவமுனி பின்னர் சேர்ந்தனர் சேதுத்
திருநகர் சுத்தசாத் தேய
நவமுற வாங்குத் தாபனஞ் செய்து
நண்ணினர் சிதம்பரங் கனக
வவையினி லேழு நாள்வரை யோகத்
தமர்ந்தவ ணருட்சிவ கங்கை
புவனமுங் களிக்க வமைத்துமெய்ப் போதம்
புகன்றுபின் போயினர் காஞ்சி. (யஉ)

விரவை ணவரை மறுத்துமா மரங்கீழ்
மேவுமே காம்பனை யிறைஞ்சிச்
சிரிய காமக் கண்ணிமுன் காமந்
திகழ்ந்திடும் யந்திர நாட்டிச்
சீரண மான கோயிலை யெல்லாஞ்
செப்பனிட் டோர்முறைப் போந்தாங்
காரிய ராங்கோ விந்தரோ டகத்தி
யாருரை பழகினர் முனிவர். (யங)

சித்தியை யடைந்து வேங்கடம் பின்னர்
சேர்ந்தவண் டனகலா யந்த்ரம்
வைத்துமேற் பாண்டி விதர்ப்பசோ ணாடு
வதிந்திடு மாந்திர மறையோ
ரத்தனை பேருஞ் சீடர்க ளாக
வாக்கியே யுருத்திர பாடி
யத்தொடு லலிதா பாடியு மருளி
யடைந்தனர் கன்னட தேயம். (௰௪)

சுடலைவெண் ணீறு பூசிவார் சடையைத்
தொங்கிட விரித்தெலும் பாரந்
தடமுறு மார்பி லணிந்துசெங் கரத்திற்
றலையினி னோடுகோ டரியுந்
திடமுற வேந்தி மானிடர் தலையாஞ்
செழுமலர்க் கொண்டுபூ சிக்குங்
கொடியகா பாலி கிரகச னாங்குக்
கூடிய சீடரோ டுற்றான். (௰௫)

சங்கர முனிவர் வந்தத
தன்மதம் பாழ்படத் தெரிந்து
பொங்கிய சினத்தோ டாயுதக் கையர்
புணரியென் றெழுதரக் கூட்டி
நங்குரு மேலே விழுந்தவர்க் கொல்ல
நணிவர வந்தணர் வெருவிப்
புங்கவ சரணங் காத்தரு ளென்னப்
புகன்றுமெய் பதறியே வந்தார். (௰௬)

கண்டுடன் சுதன்வ வேந்தனுங் கனன்றுக்
கணக்கறும் படைகளைக் கூட்டித்
திண்டிற லோடு மவர்களைத் தாக்கச்

கொண்டதோர் விஞ்சை வலியினாற் சேனைக்
கூட்டமே யழிந்திடச் செய்தான்
மண்டலக் குரவர் செய்தவுங் கார
வன்னியான் மாண்டதப் படைகள் (௰௭)

ஈசடனு மறிந்து வைரவன் வேண்டிக்
கனன்மழு வேந்திநம் முனியை
வசையற வெட்ட வந்திடக் கால
வைரவன் றன்வடி வான
விசைபெறு முனிவர் தமக்கப கார
மெண்ணிய கைதவன் றலையை
விரையுட னறுத்து முனிவர்வாழ்த் தேற்று
விண்டல மறைந்தன னம்மா. (௰௮)

வேறு.

அந்தகாண் முதற்கா பாலி யவன்மத மழிந்த தாலே
பந்தணர் பிரம காண்ட மனுசரித் துற்றார் பின்னர்
சுந்தர முனிவர் மேற்குத் தொல்பதி போந்தா ராங்கு
வந்தன னீல கண்டா சாரியன் வாது செய்ய. (௰௯)

சங்கர ரவனை வென்று தம்மதங் கொள்ளச் செய்தே
பங்கிருந் தேகிப் பின்னர் கூர்ச்சர மடைந்து மற்றுந்
தங்கிய மதத்தோர் தம்மைச் சயித்தன ராகித் தம்மின்
றுங்கமா மதத்தை யாண்டுந் துலங்கிடச் செய்தா ரானார் (௨௰)

பதினைந்தா மத்தியாய முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௭௩௯.

## பதினாறு மத்தியாயம்.

வெயிலொளி மழுவா ளேந்து கிரகச வெய்யோற் கொன்று
மயலறு முனிவர் திக்கு விசயஞ்செய் வண்ணஞ் சொன்னோஞ்
சயிலமே சிறந்த தாகிச் சசியொளி கரியத் தேசார்
கபிலையை யாசான் சேர்ந்த காதைமே லெடுத்துச் சொல்வாம். (௧)

சங்கரர் சீட ரோடுஞ் சாகரர் சாம்பற் பாய்ந்த
கங்கையங் கரையில் ஞானக் கதிரொளி பரவச் செய்தே
யங்குற விஞ்சை யோனு மபிநவச் சித்தன் வாதிற்
பங்கமே யடைந்த மானம் பாதிகஞ் செய்ய வுற்றான். (௨)

## ஸ்ரீ சங்கரவிஜயம்.

ஆவலித் ததனைப் போக்க வதர்வண வேத வாற்றி
லேவலைச் செய்தா னன்ன திறையள வேனுஞ் சென்று
தேவருக் கிடையூ றுற்றுஞ் செயலிலா திருந்த தேனும்
பாவனைக் கேற்பக் கொண்டார் பரந்தது மூல நோயாய். (௩)

அடுத்தநாள காவி யாடை யானந்த கிரியான் றோய்க்க
வெடுத்துமே யாற்றிற் கேகி யிரத்தமு மிருக்கக் கண்டே
யுடுத்ததோ ராடை தன்னி லுதிரநீ ருள்ள தாலே
சடத்திலோர் நோயே வந்து சார்ந்ததா லீக்கு மென்றான். (௪)

என்றிட முனிவர் நீரிற் குமிழிக்கி யார்பூண் வைப்பார்
பொன்றுமிவ் வுடலந் தன்னைப் போற்றவும் வேண்டுமோதா
னின்றிருப் பார்க ணாளைக் கிருப்பரென் றெண்ணலாமோ
மன்றுதல் வேண்டா மென்ன முனிவரர் கழறினாரே. (௫)

ஆண்டவ தமக்குத் தேகத் தன்பிலை யேனு மேனி
நீண்டுநோ யழுவ வாழின் சீடர்நா முய்தற் காகும்
வேண்டிய சிகிச்சை செய்ய மெய்த்தவா விளம்பு மென்ன
மாண்டகு முனிவ ரன்னான் மனமுற வழங்கு வாரே. (௬)

பண்டைய வூழால் வந்த வுடம்பினோய் பற்ற வேது
கொண்டதோர் வினையின் கேடுங் கூடிய தாதுக் கேடு
முண்டவை யிரண்ட வற்று ளொன்றனு பவத்தா ற்றீரு
மெண்டருங் காலங் கிட்ட விறந்திடுஞ் சிகிச்சை வேண்டாம் (௭)

என்னவே முனிவர் செப்ப விணை யடி யிறைஞ்சி யேத்தி
யுன்னிய வெங்கள் கன்ம முனுற்றிட வருளு மென்ன
வன்னவர் மௌன மாக வமர்ந்தன ரதுதா னாணை
பண்ணிய தாகக் கொண்டு பண்டிதர் வருவித்தானே. (௮)

உயர்ந்தமா மருந்தி யாவு முதவியு மொன்று நன்மை
பயந்தில மறையின் சொன்ன படியினில் வைத்ய நாத
னயந்தர வேண்ட வீச னல்லருட் சுரந்த தாலே
யயர்ந்திடா மறையோ ராக வசுவினி தேவர் வந்தார். (௯)

[illegible] நோயின் பான்மை வகையுடன் கேட்டு மாற்றார்
மந்திர வேவ லாலே வந்ததென் றோதி யன்று
ரந்தர மன்றந்து போனு ரமபுயப் பாதன் கேட்டா
னந்தவா செய்தான் மேலே யதுசெல வேவி னானே (௰)

சந்தத மதும்பா யனனுன சடத்தனை சசாரந்து வாட்ட
வெந்துய ரடைந்து விந்தான் விளைந்தவிச் செதி கேட்டு
மந்திர் வாதி யோர்கண் மாமுனிக் கிடையூ றெண்ணில்
வந்திடும் வினையென் றஞ்சி மனச்சுமா தானங் கொண்டார். (௰௧)

மற்றொரு நாளிற் கங்கை மாநதிக் கரையிற் சிட
ருற்றிடச் செய்து வானி லுயர்ந்துடன் குருநாட் டிற்கு
நற்றவர் வதியுஞ் சித்த நகரமுஞ் சென்று ஞானஞ்
சொற்றனர் முனிவர் பின்னர் துன்றிய சாத்தே யத்தில். (௰௨)

வழங்கிய வாமா சார மறுத்ததா லந்தச் சந்தி
கொழுங்கனல் போலக் கோபங் கொண்டிடத் தணிக்க வேண்டித்
தழங்கிய வினிமை வாய்ந்த சௌந்தர்ய லஹரி சாற்றி
யொழுங்குறும் பூசை லாய முயர்முனி வரனுர் போனுர். (௰௩)

மதிமுடி யிலிங்கம் பெற்று வந்துவிம் புருட கண்ட
மதனைமே யாத்த பிரம்ம ராக்கத னடைந்த வத்தி
சிதைவுறச் செய்து பூதஞ் சிடர்கண் மடத்தைக் காக்கப்
பதிவுறப் பண்ணிச் சித்தா பரவிடக் கங்கை போனுர். (௰௪)

பின்னொரு தினம்பூ கோளம் பேசுக கோளத் துண்மை
யின்னதென் றறியவேண்டு மிணைமலா ப்பாத னுக்கு
முன்னிய வாறு ணர்த்த மொய்த்தவா னுலகு சேர்ந்து
மன்னிய துருவன் வாய்ப்பு மற்றுள வெல்லாஞ் சொன்னுர். (௰௫)

சோதிட வகைகள யாவுந் துலங்கிட விளக்கிப் பின்னர்
போதருந் தெளிதல் செய்து பொருந்திடுங் காலைக் கோட
பாதனு மந்தக் கங்கைக் கரையினிற் பரமர்க் காணப்
போதர லாக வன்னுர் பொன்னடி பணிந்து நின்றுர். (௰௬)

சங்கர மைந்தா நின்னின் றனிப்பெருங் கீர்த்தி யெல்லா
துங்ககோ விந்த யோகி சொல்லயா னினிது கேட்டே
னிங்குநீ திறமை யோடு மியம்பிய நூலை யெல்லாம்
புங்கவா சொல்லா யென்னப் புகன்றன ரவரு மாங்கே.

கடவுளி னாற்றல் கண்டு களிமிகக் கொண்டு மைந்தா
படியினில் வேண்டு வற்றைப் பகரென முனிவ ரையா
நெடிதுமென் சிந்தை யான்மி நிலைபெற வருளா யென்னத்
திடமுற வடைய வாழ்த்துச் செப்பிவான் வழியே போனார்.

அம்புவி மீதி லொன்றை யாற்றிடா தொழிந்தோ மென்ன
நம்பிடுஞ் சீடர்க் காசா னவின்றிட யாதா மென்றே
யம்புயப் பாத னாதி யனைவருங் கேட்கக் கூட்டி
யும்பரே போந்து கல்விச் சிநக ருற்றா ரன்றே.

சாற்றுமந் நகரி லுள்ள சர்வஞ்ஞ பீட மேறி
வீற்றிருந் தருள வாசான் விழைந்துமே முயற்சி செய்தார்
போற்றுமப் பீடங் கொண்ட புதுமையுஞ் சீரு மிக்க
மேற்றமு மெடுத்து மேலே யியம்புவாஞ் சிறிது மன்னோ.

வேறு.

அங்கு தேவரோ டிருடிக ளன்புட னமைத்த
மங்க ளாகர வித்தியா பீடமும் வாணி
தங்கு மாலைய மொன்றுமே சமைத்துள வாங்குந்
துங்க பத்திர மண்டப மொன்றுமே துலங்கும்.

அந்த மண்டபந் திசைக்கொரு வாயில்கொண் டடைபட்
டெந்த வேளையும் வித்தைதே ரிமையவ ரிருந்து
பந்த மாமறை காக்குற லாயிடும் பாரி
லுந்தி யாதன மேறுவான் கலையரு ளுறுவான்.

தக்க ணத்திசை யன்றிமற் றுந்திசை சார்ந்த
மிக்க விற்பனர் வந்ததின் மேவின ரின்னு
மொக்க தெற்கினி லுள்ளவ னாற்றில னதனாற்
றக்க வாறது திறந்திடச் சென்றவர் தாமும்.

## பதினாறு மத்தியாயம்.

காத்த தேவர்கள் கேட்டதற் குத்தரங் கழற
வி[illegible]த்த வத்திற மற்றவ ராயின ரென்ன
நீத[illegible] மாமுனி தேர்ந்ததி னேருட னேறப்
பூதத [illegible]ர்கள் போந்தனர் பூதலம் புகழ. (உச)

மண்ட பத்தினைச் சுற்றியவ் வாயிலைத் திறக்கக்
கொண்ட தாஞ்சதுர் சட்டியென் கூறிடும் படிகள்
கண்டு தாண்டுமக் காலையிற் கல்வித்தே ரிமையோர்
விண்டு போமெனக் கேள்விகள் விளம்பினர் பலவாய் (உரு)

ஆற்ற லோடவ ருத்தர மறைந்துமே லார்ந்த
வேற்றம் வாய்க்கத வத்தினைத் திறந்திட வேற
மாற்ற மொன்றவிண் கூறிய துத்தர மகிழ்ந்து
சாற்ற வேயது திறந்தது தன்செய லாலே. (உசா)

பதும பாதனைக் கொண்டுளே பரமரும் போந்து
பொதுளுங் காந்தியார் பீடமும் பொற்புட னமர்ந்தா
ரிதனை யாய்ந்துடன் விண்ணவ ரேத்தியே வாழ்த்தி
மதுநி றைந்திடுங் கற்பக மலர்களைப் பொழிந்தார். (உஎ)

போத மாமுனி சீடர்கள் புடையுறப் போந்து
சீத வானிமை யத்துகே தாரமே சேர்ந்து
வேத மாமுடி மெய்ப்பொருள் விள்ம்பியே தங்கும்
போது சீதமாற் றேமெனப் புகன்றனர் சீடர். (உஅ)

சித்த மன்பொடு மாமுனி தேவனை வேண்டச்
சுத்த மானவெந் நீர்நதி யவ்விடந் தோற்று
வித்த லுங்களி கூர்ந்தனர் மேவிய சீட
ரத்த கைத்திறங் காணலா மாண்டினி தின்றும். (உக)

வேறு.

[illegible]ரிலுள வாத்துமர்க ளான்ம ஞானப்
பதிவடைய வேதாந்தம் பரிந்து சொல்ல
வர்ரியரா யானந்த கிரியான் கஞ்ச
வடியானத் தாமலக னிவரைச் செய்ய

தாரிலங்கை யாச்சிரமந் துவரை மற்றுஞ்
　　சகன்னாத மிவ்விடமார் மடத்து வைத்துச்
சாரதையின் பீடத்தார்க் குட்பட் டாக்கச்
　　சார்வயது நாலெட்டு முடிந்த தன்றே. (௯௰)

பங்கயனே முதலான தேவர் விண்ணோர்
　　பரவுநந்தி யிந்திரனெண் பாலர் மற்றும
புங்கவரும் வானின்று போற்ற வீசன்
　　புனிததத்தாத் திரியர்குகை யுள்ளே போந்து
துங்கமுறுந் தேகலிங்கஞ் சிதம்ப ரத்திற்
　　சுடர்கலந்து வானெழுந்து விடையி லேறித்
திங்களென வொளிவீசுங் கைலை சேர்ந்தார்
　　தேவரெலாம் வாழ்த்தினர்கள் வாழி வாழி. (௯௧)

பதினாற மத்தியாயம் முற்றிற்று

ஆகச் செய்யுள் ௭௯௭.

## ஸ்ரீ சங்கரவிஜயம் முற்றுப்பெற்றது.

சுபமஸ்து.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௨௫ | ௨ | கரிக | கறுக |
| ௩௰ | ௧ | கிளர்த்த | கிளத்த. |
| ௩௧ | ௰௪ | மின்னொளி | மன்றொளி. |
| ௩௨ | ௨௪ | வடிவெங் | வடிவங் |
| ௩௫ | ௰௫ | முதலைக்கிறை | முதலைக்கிரை |
| ௩௭ | ௭ | ளொல்ரோரும் | ளொல்லோரும். |
| ௪௪ | ௰௧ | சங்கராதி | சங்கரர்தி |
| ௪௬ | ௧௫ | கொளட | கெளட |
| ௪௭ | ௪ | வூன்க | டூன்க |
| ௫௩ | ௨௪ | னென்னு | னென்று |
| ௫௫ | ௰௯ | கூடி | கூடித் |
| ௫௬ | ௰௭ | ஞெரைசா | ஞெரைச்சா |
| ௬௫ | ௨௫ | விளடங்கிட | விளங்கிட |
| ௮௨ | ௩ | மண்டப் | மண்டப |
| ௱௧ | ௧ | பிகையினை | பிகையனை |
| ,, | ௰௭ | கோர்யசெ | கோர்செய |
| ௱௩௨ | ௨௬ | மறையின் | மறையிற் |